பக்கங்கள் : 16+II = பதினெட்டு

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 தை 24 வெள்ளிக்கிழமை (07-02-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:73

## ஐந்தாம் சுற்றுப் பேச்சுக்கள் இன்று பேர்ளினில் ஆரம்பம்

பேர்ளின்,பெப்.7

அரசு - புலிகள் இடையிலான ஐந்தாவது சுற்று சமாதானப் பேச்சுக்கள் இன்று ஜேர்மனியத் தலைநகரில் ஆரம்பமாகின்றன.

இன்றைய பேச்சுக்களில் மனித உரிமைகள் தொடர்பான விடயங்கள் முக்கியமாக கலந்துரையாடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

பேச்சுக்களின் போது இருதரப்புக்களும் அடிப்படை மனித உரிமைகள் தொடர்பான விடயங்களை விவாதிக்கும் போது சர்வதேச மன்னிப்புச் சபையின் முன்னாள் தலைவர் இயன் மார்ட்டின் அங்கு பிரசன்னமாகியிருப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளை சனிக்கிழமையும் பேச்சுக்கள் இடம்பெறும். இரு தினங்களும் நடக்கும் பேச்சின் விவரங்கள் நாளை மாலை (ஜேர்மன் நேரம்) செய்தியாளர் மாநாட்டில் வெளியிடப்படும்.

விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் கடற்போக்குவரத்து, நேற்று நெடுந்தீவில் நடந்த கடற்படையின் முற்றுகை ஆகிய விடயங்கள் இன்றைய பேச்சுக்களில் விசேடமாக சேர்த்துக் கொள்ளப்படவுள்ளன.

(ஐ-12)

### திருத்த வேலைகளை முடிக்காமல் அவசரப்பட்டு

## பொது நூலகத்தைத் திறப்பதற்கு பொது அமைப்புகள் ஆட்சேபம்!

யாழ்ப்பாணம்,பெப்.7

புனரமைப்புப் பணிகள் முழுமை பெறாமல் யாழ்பொதுநூலகத்தை திறப்பதற்கு எடுக்கப்படும் முயற்சிகளை யாழ்.மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் ஆட்சேபித்திருக்கிறது.

அரசியல் ஆதாயத்திற்காக நூலகத்தைத் திறப்பதா? - என்று தலைப்பிட்டு யாழ்.மாநகர முதல்வருக்கும் உறுப்பினர்களுக்கும் ஒன்றியம் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்திருக்கிறது.

அந்தக் கடிதத்திலேயே மேற்கண்டவாறு ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கடிதத்தின் முழு விவரம் வருமாறு:-

யாழ்பாடி பரிசு பெற்ற எழில் நகராம் யாழ்நகரில் தொன்மைக்கும் பெருமைக்கும் கட்டியம் கூறி நிற்பது கல்வியும் கலை பண்பாடும் ஆகும். இந்தக் கல்விக்கு வித்திட்ட படிப்பாளர்கள், படைப்பாளர்கள், பகுத்தறிவாளர்களை நாம் நினைக்கும்போது எம்முன் கலங்கரைவிளக்கமாகத் தோன்றுவது யாழ்ப்பாண மாநகரத்தின் நூலகமாகும். தென்கிழக்காசியாவில் முதன்மையான நூலகமாகவும் தமிழர் பெருமையை பறைசாற்றுகின்ற பெரும் சொத்தாகவும் விளங்கிய

(16ஆம் பக்கம் பார்க்க)

### பேச்சு ஆரம்பமாகும் வேளை பேர்ளினில் பரபரப்பு,குழப்பம்:

# நெடுந்தீவு கடலில் புலிகளின் 2 படகுகளை கடற்படையினர் சுற்றி வளைத்து முற்றுகை!

## முறுகல் நிலையைத் தணிக்க இரு தரப்பும் தீவிர முயற்சி

பேர்ளின்,பெப்ரவரி7

**தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளின் இரு படகுகளை நெடுந்தீவு கடலில் வைத்து ஸ்ரீலங்கா கடற்படைப் படகுகள் சுற்றிவளைத்திருக்கின்றன. கடற்படையினரின் இந்த முற்றுகை நீக்கப்படாவிட்டால் தாங்கள் சயனைட் அருந்தி உயிரை மாய்த்துக் கொள்ளப் போவதாக படகுகளில் இருக்கும் போராளிகள் அறிவித்திருப்பதாகத் தெரிகின்றது.**

**இச்சம்பவத்தினால் உருவாகியிருக்கும் பதற்ற நிலையைத் தணித்து சுமுக நிலையை ஏற்படுத்த பேர்ளினில் அரசு - புலிகள் பிரதிநிதிகள் தீவிரமாக முயன்று கொண்டிருக்கின்றனர்.**

மன்னார் நாச்சிக்குடாவிலிருந்து நெடுந்தீவு நோக்கிச் சென்ற புலிகளின் இரண்டு படகுகளையே கடற்படைப் படகுகள் நேற்று நண்பகல் நெடுந்தீவுக்கு அப்பால் கடலில் வழி மறித்து முற்றுகையிட்டிருக்கின்றன என்று அறிவிக்கப்படுகிறது.

இவற்றில் ஒரு படகு நெடுந்தீவு கடலில் கடல் அட்டை பிடிப்பதற்காக அங்கு சென்றுகொண்டிருந்தது என்று விடுதலைப் புலிகள் தெரிவித்திருக்கின்றனர். அந்தப் படகு கடலில் பழுதடைந்து போனதால் அதனை மீட்பதற்காக இரண்டாவது படகு

(16ஆம் பக்கம் பார்க்க)



**மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவின் கீழ் சர்வதேச தரத்திலான கண்ணிவெடி அகற்றும் பயிற்சிபெற்ற 80 பேர் தாங்கள் பயிற்சியை முடித்துள்ளனர். இவர்களின் பயிற்சி நிறைவு வைபவம் நேற்று வன்னியில் நடைபெற்றது.**

**பயிற்சி முடித்து வெளியேறியோரையும் பயிற்சி அளித்த பயிற்றுநர்களையும் படத்தில் காணலாம். (ஐ)**

## புனர்வாழ்வுப் பணிகளுக்கு உதவுமாறு ஜேர்மனியிடம் புலிகள் கோரிக்கை

பேர்ளின்,பெப்.7

ஐந்தாவது சுற்று சமாதானப பேச்சுக்காக பேர்ளினுக்கு வந்திருக்கும் விடுதலைப் புலிகள் தரப்பு பேச்சுவார்த்தைக் குழுவினர் நேற்றுப் பிற்பகல் ஜேர்மன் வெளிவிவகார அமைச்சின் மூத்த அதிகாரிகளோடு பேச்சு நடத்தியிருக்கின்றனர்.

அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் தலைமையில் புலிகள் பிரதிநிதிகள் ஜேர்மன் வெளிவிவகார அமைச்சின் அரசியல் விவகாரங்களுக்கான பணிப்பாளர் நாயகமும் மூன்றாம் உலக நாடுகளுக்கான ஜேர்மனின் ராஜாங்க அமைச்சு செயலாளருமான கலாநிதி வொல்கர் எர்ரான்ஸை சந்தித்து பேச்சு நடத்தினர். அமைச்சின் வேறு சில உயர் அதிகாரிகளும் இந்தப் பேச்சில கலந்து கொண்டனர். நேற்றுப் பிற்பகல் 3.00 மணிக்கு (ஜேர்மன் நேரம்) நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது தற்போது முன்னெடுக்கப்படும் சமாதானப் பேச்சுக்கள் தொடர்பான விவரங்களை ஜேர்மன் அமைச்சு அதிகாரிகளுக்கு புலிகளின் அரசியல் ஆலோ

(16ஆம் பக்கம் பார்க்க)

## உடதலவின்ன படுகொலை வழக்கு; ராணுவ தளபதிக்கு அழைப்பாணை!

### விசாரணைகள் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

உடதலவின்ன முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை வழக்கில் சாட்சியமளிப்பதற்கு எதிர்வரும் 11ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்லவுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று அழைப்பாணை விடுத்தது.

இந்த வழக்கு விசாரணை கொழும்பு மேல் நீதிமன்றில் 'ட்ரயல் அட்பார்' நீதிபதிகள் முன்னிலையில் இடம்பெற்றது.

நேற்று பிரதி சொலிசிட்டர் ஜெனரல் பாலித பெர்னாண்டோவின் நெறிப்படுத்தலில் 'போயகல விஜயபால' [illegible] தலைமையகத்தின் கட்டளை அதிகாரி கேணல் பிரஞ்சித் சமரதுங்க சாட்சியம் அளித்தார்.

அனுருத்த ரத்வத்தை பிரதிப் பாதுகாப்பு அமைச்சராகப்பதவி வகித்த காலத்தில் அவரின் அந்தரங்கச் செயளாராகப் பணியாற்றிய பிரிகேடியர் ஸ்ரீமல் கீர்த்தி துலங்கமுவவும் முறைப்பாட்டாளர் சார்பில் சாட்சியமளித்தார்.

அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்ததாவது:-

2001ஆம் ஆண்டு தேர்தல் காலத்தில் அனுருத்த ரத்வத்தையின் கோரிக்கைக்கு அமைய, அவருக்குத் தேவையான [illegible] பாதுகாப்புப் படைக [illegible] வழங்குமாறு இரா

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு தொகுதி மாணவர்கள் கலைப்பீடத்துக்கு அனுமதி

### பட்டியல் விரைவில் கிடைக்கும்

யாழ்ப்பாணம்,பெப்.7

கடந்த 2002ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் ஒரு தொகுதி மாணவர்கள் விசேட பாட தெரிவின் கீழ் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடத்துக்கு அனுமதிக்கப்படவுள்ளனர்.

சமஸ்கிருதம், ஆங்கிலம், மனைப பொருளியல், வரலாறு, மொழியியல், இந்துத் தத்துவம் போன்ற பாடநெறிகளுக்கே விசேட அனுமதி வழங்கப்படவுள்ளதாக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார். பாடநெறிகளுக்கு ஏற்ற வகையில் அனுமதிக்கப்படக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கையை பல்கலைக் கழகங்கள் மானிய ஆணைக்குழுவுக்குத் தெரிவித்த பின்னரே விசேடபாட நெறிகளுக்கு மாணவர்கள் ஒவ்வொரு கல்வியாண்டுக்கும தெரிவு செய்யப்படுகின்றனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

### மன்னார் ஆயரை நம்பியார் சந்தித்தார்

வவுனியா,பெப்.7

உயர் பாதுகாப்பு வலயங்களை மாற்றி அமைப்பது தொடர்பான யோசனைகளை அரசுக்கு சமர்ப்பித்திருக்கும் இந்திய இராணுவ ஜெனரல் சதீஸ நம்பியார் நேற்று மன்னாரில் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப்பை சந்தித்தார்.

மன்னாரில் பாதுகாப்பு வலயங்கள் ஏற்படுத்தியிருக்கும் பாதிப்புகளை நம்பியாருக்கு ஆயர் எடுத்துக் கூறினார்.

(ஐ-164)

### ஒரே விமானத்தில் பாலா, மொறகொட பேர்ளின் பயணம்

பேர்ளின்,பெப்.7

விடுதலைப் புலிகளின் [illegible] ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், [illegible] மதி அடேல் [illegible] பயணமாகி நேற்று நண்பகல் (ஜேர்மன் நேரம்) விமானத்தில் லண்டனிலிருந்து பேர்ளின் வந்தடைந்தனர்.

பாலசிங்கம் தம்பதியர் பயணம் செய்த அதே விமானத்தில் அரசுத் தரப்பு பிரதிநிதி அமைச்சர் மிலிந்த மொறகொட, அரசின் சமாதான செயலணியின் தலைவர் பேர்னாட் குணதிலக ஆகியோரும் லண்டனிலிருந்து பேர்ளின் வந்தனர். (ஐ)



நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த அமெரிக்க அரசின் தென்னாசிய விவகாரங்களுக்கான பணிப்பாளர் டேவிட் குட் யாழ்.ஆயர் இல்லத்தில் ஆயரையும் ஏனைய மதப்பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடிய வேளை எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள்:தேவராஜன்)

# ஆயுதங்களைக் கைவிட புலிகள் இப்போது தயாரா?

## யாழ்.வந்த அமெரிக்க உயர் அதிகாரி கேள்வி

யாழ்ப்பாணம்,பெப்.7

விடுதலைப் புலிகள் தற்போது ஆயுதங்களைக் கைவிடத் தயாராக உள்ளனரா?

இவ்வாறு கேள்வி எழுப்பினார் அமெரிக்க அரசின் தென்னாசியப் பணிப்பாளர் டேவிட் குட்.

நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த குட் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மத்தியில் இந்தக் கேள்வியை எழுப்பினார்.

யாழ்.பீச் இன் ஹோட்டலில் நடைபெற்ற ஒரு சந்திப்பிலேயே இக்கேள்வி எழுப்பப்பட்டது.

டேவிட் குட் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் நோர்வேயின் உதவியுடன் இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் மேற்கொண்டுவரும் சமாதானப் பேச்சுக்களை அமெரிக்கா மிகவும் உன்னிப்பாகவும் விழிப்பாகவும் அவதானித்துக்கொண்டிருக்கிறது. சமாதான முயற்சிகள் சரியான முறையில் முன்னெடுக்கப்படும் பட்சத்தில் இலங்கைக்கு அமெரிக்க அரசும் உதவிகளை வழங்கத் தயாராகவுள்ளது.



டேவிட் குட்

விடுதலைப் புலிகள் இப்போதும் தமது படையில் சிறுவர்களை சேர்த்து வருகின்றார்கள் என்று பல்வேறு தரப்புக்களிடம் இருந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. எனவே, இவை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்பு இங்கு நிலைமைகள் எவ்வாறு உள்ளன, மக்களின் வாழ்க்கையில் என்ன மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை நேரடியாக அறிவதற்காகவே நான் இங்கு நேரில் விஜயம் செய்துள்ளேன். தென்னாசியாவுக்கான பணிப்பாளர் என்ற வகையில் இங்குள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு சில முன்நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள முடியும். இங்குள்ள நிலைமைகள் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் பேசுவதற்கு எண்ணியுள்ளேன். - என்றார்.

'தமிழ் மக்களுக்கு ஒரு நிரந்தரமான தீர்வு கிடைக்கும் வரையில் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிடமுடியாது. தமிழ் மக்களுக்கு ஒரு நிரந்தரத் தீர்வைப் பெறுவதற்காகவே அவர்கள் ஆயுதம் ஏந்தினார்கள். விடுதலைப் புலிகளை இப்போது ஆயுதங்களைக் கைவிடுமாறு கோருவது வேடிக்கைக்குரிய விடயம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே தெரிவித்துள்ளார். தமிழ் மக்களுக்கு ஒரு நிரந்தரத் தீர்வு கிடைத்தால் அது சாத்தியமாகும். விடுதலைப் புலிகள் சிறுவர்களைப் படைகளில் இணைத்து வருகின்றார்கள் என வெளியாகும் திரிவுபடுத்தப்பட்ட செய்திகள் சமாதான முயற்சிகளுக்கு எதிரான தீய சக்திகளின் திட்டமிட்ட பிரசாரம். எனவே, இது முற்றிலும் உண்மையானதல்ல. விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணையும் வயது குறைந்த சிறுவர்களை பெற்றோர்களிடம் மீண்டும் ஒப்படைத்துவருகின்றனர்.

- என்று பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் அமெரிக்க அதிகாரிக்கு விளக்கிக் கூறினர்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் யாழ்.குடாநாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. இயல்பு வாழ்க்கை ஏற்படுத்தப்படவில்லை.

உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் பெருமளவு மக்கள்குடியிருப்புக்கள் இராணுவ நலன்களுக்காக முடக்கி வைக்கப்பட்டுள்ளன. இதனால் சுமார் 3 ஆயிரம் குடும்பங்கள் மீளக்குடியமர முடியாத நிலையில் உள்ளனர். கண்ணிவெடிகளும் முற்றாக அகற்றப்படவில்லை. இதனால் பெருமளவு விவசாய நிலங்கள் பயிர்ச்செய்கை இல்லாமல் உள்ளன. முழுமையான மீன்பிடிக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. இவை அனைத்துக்கும் தீர்வு ஏற்பட்டாலேயே குடாநாட்டில் இயல்பு நிலை ஏற்படமுடியும் என்றும் பொது அமைப்புக்களின் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

முன்னதாக நேற்று பகல் 11.30 மணிக்கு யாழ்.ஆயர் இல்லத்துக்கு விஜயம் செய்த பணிப்பாளர் டேவிட் குட் அங்கு சர்வமதத் தலைவர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டார்.

உயர் பாதுகாப்பு வலயங்கள் இங்கு பெரும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளன. பொதுமக்களின் நலனைக் கருத்தில்கொண்டு ஒரு மனிதாபிமான ரீதியில் இப்பிரச்சினை நோக்கப்பட்டு, உயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தான பின்னரும் இவ்வாறான அசாதாரண சூழ்நிலை இங்கு நிலவுவது விரும்பத்தக்க விடயம் அல்ல. -என்று யாழ்.ஆயரும் ஏனைய மதத்தலைவர்களும் டேவிட்குக்கிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

விடுதலைப் புலிகள் இங்கு பெருமளவு வரி அறவீடுகளை மேற்கொண்டு வருகின்றனர். அவை நிறுத்தப்படவேண்டும் எனவும் - தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் பேச்சுக்களில் முஸ்லிம்களுக்கு ஒரு தனியான பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்றும் -

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட மௌலவி ஏ.எச்.நாஸர் அமெரிக்க அதிகாரியிடம் கேட்டுக்கொண்டார்.

ஆயர் இல்லத்தில் நடந்த சந்திப்பில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், அங்கிலிக்கன் திருச்சபையின் குரு முதல்வர் அருட்திரு நேசகுமார், சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவின் பிரதிநிதி அருட்திரு ஏ.ஜ.பேர்னாட் மற்றும் எஸ்.ஏ.சி.முபீன் ஆகியோருடன் தென்னாசியப் பணிப்பாளருடன் வருகை தந்த அரசியல் ஆலோசகர் ஜாசன் வெம் கோனர், அரசியல் உதவியாளர் பத்மினி இராஜதுரை ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஐ-8-10)

## மட்டக்களப்பில் மாவீரர்களின் பெற்றோருடன் புலிகள் சந்திப்பு

மட்டக்களப்பு,பெப்.7

மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட மாவீரர்களின் பெற்றோரை விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட தலைவர்கள் நேற்று முன்தினம் மாலை சந்தித்து உரையாடினர். பளுகாமம் கண்டுமணி மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் தலைமையில் இச்சந்திப்பு நடைபெற்றது. மாவீரர்களின ஆயிரக்கணக்கான பெற்றோர்கள் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

புலிகளின் சார்பில் விசேட தளபதி ரமேஷ், மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பானுகா, மகளிர் விசேட தளபதி நிலாவினி ஆகியோர் சந்திப்பில் கலந்து கொண்டனர். (ஐ)





### கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் தாக்குதல்:

## முப்பது சந்தேக நபர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் வாபஸ்!

கொழும்பு,பெப்.7

கட்டுநாயக்க விமானப் படைத்தளம் மீதான தாக்குதல் தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 30 பேர் மீதான குற்றச்சாட்டுக்கள் வாபஸ் பெறப்பட்டிருக்கின்றன. இக்குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க போதிய ஆதாரங்கள் இல்லையென சட்டமா அதிபர் உயர்நீதிமன்றத்திடம் தெரிவித்திருக்கிறார்.

இத்தாக்குதல் தொடர்பாக 105 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

மேலும் பல சந்தேக நபர்களை விடுதலை செய்வது குறித்தும் தனது திணைக்களம் ஆராய்ந்து வருகிறது எனவும் சட்டமா அதிபர் தெரிவித்திருக்கிறார்.

ஐந்து சந்தேக நபர்கள் மீதான குற்றப்பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன எனவும் சட்டமா அதிபர் உயர்நீதிமன்றத்திடம் கூறியிருக்கிறார். (ஐ)

## புனர்வாழ்வு, புனரமைப்பு சேவைகள் ஆணையாளராக பிரட்மன் நியமனம்

கொழும்பு,பெப்.7

நிவாரணம், புனர்வாழ்வு, புனரமைப்புச் சேவைகள் ஆணையாளர் நாயகமாக பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் நியமிக்கப்பட்டுள்ளார். பிரதமரின் செயலாளர் பதவிக்கு மேலதிகமாக இப்பதவியையும் அவர் வகிப்பார். வடக்கு - கிழக்கு உட்பட ஏனைய பகுதிகளின் அத்தியாவசிய அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் தனியான செயலகம் ஒன்றை அமைத்துள்ளது.

பிரதமரின் நேரடிக் கண்காணிப்பில் இயங்கும் இச்செயலகம் இதுவரை காலமும் அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனாவின் அமைச்சின் கீழ் இருந்து வந்தது. தற்பொழுது பிரதமரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

1983 ஆம் ஆண்டில் இடம்பெற்ற இனக்கலவரத்தின் பின் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகமாக பிரட்மன் வீரக்கோன் நியமிக்கப்பட்டிருந்தார். (ஐ-12)

### தீயில் எரிந்து பெண் காயம்!

யாழ்ப்பாணம்,பெப்.7

தனக்குத்தானே தீமூட்டிய பெண்ணொருவர் உடல் முழுவதும் எரிந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

கொக்குவில் ஞானபண்டித வித்தியாலயத்தடியைச் சேர்ந்த சிவகாமசுந்தரி பாஸ்கரன் (வயது 41) என்பவரே சேர்க்கப்பட்டவராவார். (ஐ-10-5)

### அமைச்சர் ஜயலத் இன்று யாழ்ப்பாணம் வருகிறார்

கொழும்பு,பெப்.7

புனர்வாழ்வு, புனரமைப்பு, அகதிகள் விவகார அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்கிறார்.

வடக்கு - கிழக்கு பாடசாலை மாணவர்கள் பரிமாற்றத் திட்டத்தை ஆரம்பித்து வைத்திருக்கும் அமைச்சர், இன்று வடக்கிலிருந்து தெற்கே செல்லும் மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு வாழ்த்து தெரிவிக்கவே இங்கு வருகிறார்.

எதிர்வரும் 10 ஆம் திகதி வடக்கிலுள்ள அகதி முகாம்களுக்கு அமைச்சர் செல்லவிருக்கிறார். தனியார்துறையினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட பாவனைப் பொருள்கள் அடங்கிய பார்சல்களை அவர் அகதிகளுக்கு வழங்குவார்.

இலங்கைக்கு விஜயம் செய்யும் பிரெஞ்சு வெளிவிவகார அமைச்சர் ரினவுட் முஸ்லியர், அமைச்சர் ஜயவர்த்தனவுடன் யாழ்ப்பாணத்தில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவிருக்கின்றார்.

### ஆங்கில இலக்கிய கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,பெப்.7

ஆங்கில படிப்புகள் வட்டம் ஏற்பாடு செய்துள்ள மாதாந்த கருத்தரங்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

'ஈழத்து ஆங்கில புனைகதைகளில் தமிழ் அடையாளம்' என்னும் தலைப்பில் யாழ்பல்கலைக்கழக வவுனியா வளாக ஆங்கில விரிவுரையாளர் கந்தையா சிறீகணேசன் உரையாற்றுவார். (ஐ)

### கல்வியியல் கல்லூரி மாணவருக்கு!

யாழ்ப்பாணம்,பெப்.7

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியில் உள்ளகப் பயிற்சியை முடித்து வெளியேறியவர்களையும் தற்போது உள்ளகப் பயிற்சியை மேற்கொள்பவர்களையும் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்வியியல் கல்லூரிக்கு வருகைதருமாறு பீடாதிபதி கமலநாதன் கேட்டுள்ளார்.

### சிறப்பு சொற்பொழிவு

யாழ்ப்பாணம், கன்னாதிட்டி திருவண்ணைநகர் அருள்மிகு காளியம்மனின் வருடாந்த மகோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றன.

இன்றைய தினம் இரவு 7.00 மணிக்கு 'சக்தி தத்துவம்' என்னும் தலைப்பில் மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் சமயப் பேருரை நிகழ்த்துவார். (ஐ)

### நாவாந்துறை கலவரம்: மேலும் 17 பேர் கைது!

யாழ்ப்பாணம்,பெப்.7

நாவாந்துறைப் பகுதியில் கடந்த மாதம் 12ஆம், 13ஆம் திகதிகளில் இரு குழுக்களிடையே இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பாக மேலும் 17பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் நேற்று யாழ்நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். அவர்களைத் தலா 15 ஆயிரம் ரூபா ஆள்பிணையில் செல்ல நீதிவான் இ.த.விக்னராஜா அனுமதியளித்தார். கடந்த மாதம் 12ஆம் திகதி மாலை யாழ்துரையப்பா விளையாட்டரங்கில் சென்.அன்ரனிஸ் மற்றும் சென்.நீக்கலஸ் விளையாட்டுக்கழகங்களுக்கிடையே இடம்பெற்ற கால்பந்தாட்டப் போட்டியைத் தொடர்ந்து இரு குழுக்களிடையே மோதல்கள் ஆரம்பித்தன. பின்னர் அது கலவரமாகி மாறியதையடுத்து அப்பகுதியில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக ஏற்கனவே 45பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டிருந்தனர். (ஐ-10)




ஆறாவது உலகக் கிண்ணத்தை பாகிஸ்தானிய முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோவிடமிருந்து பெரும் மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொள்ளும் இலங்கை அணித் தலைவர் ரணதுங்க.

# நினைவில் நின்றவை

## 6 ஆவது உலகக்கிண்ணம்

1992 உலகக் கிண்ணத்தை பாகிஸ்தான் கைப்பற்றியதை அடுத்து 1996 உலகக் கிண்ணப்போட்டியை இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் இணைந்து நடத்துவதற்கு முன்வந்தன. இதில் 12 நாடுகள் பங்குபற்றின. 6 அணிகளைக் கொண்ட இரு பிரிவுகளாக அவை பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு பிரிவிலும முதல் நான்கு இடங்களைப் பெறும் 8 அணிகள் கால் இறுதிக்கு சென்றன. அதற்கேற்ப போட்டி விதிகள் மாற்றப்பட்டு நவீனமயப்படுத்தப்பட்டன.

கொழும்பில் குண்டுவெடிப்பு சமபங்கள் இடம்பெற்றதால் ஆஸ்திரேலியா மற்றும் மே.இந்தியத் தீவுகள் அணிகள் இங்கு வந்து விளையாடுவதற்கு மறுத்துவிட்டன. இதனால் இலங்கைக்கு இரு வெற்றிகள் தாரை வார்க்கப்பட்டன. இந்தப் போட்டித் தொடரில் இரு மிக முக்கிய சாதனைகள் நிகழ்த்தப்பட்டன. அதிக சதங்களும் குவிக்கப்பட்டன. பல சுவாரஸ்யமான ஆட்டங்கள் இத்தொடரில் இருந்தாலும் அவற்றில் ஒரு சிலவற்றையே இங்கு பார்ப்போம்.

இலங்கை அப்போதெல்லாம் ஒரு எதிர்பார்ப்புக்குரிய அணியாக இருக்கவில்லை. ஆனால், அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தி தான் சந்தித்த போட்டிகள் அனைத்திலும் வென்று கிண்ணத்தைக் கைப்பற்றியது இலங்கை அணி. அது இலங்கை அணிக்கு ஒரு பொற்காலம். அதிரடி மன்னன் சனத் ஜெயசூரிய உட்பட இலங்கை அணியின் முக்கிய வீரர்கள் அனைவரும் நல்ல 'ஃபோமில்' இருந்த காலம் அது.

பெப்ரவரி 29இல் நடந்த ஆட்டம் போட்டித் தொடரின் மிகப் பெரும் அதிர்ச்சியைத் தந்தது. பிரையன் லாரா, ரிச்சர்ட்ஸன், போன்ற அபார ஆட்டக்காரர்களைக் கொண்ட மே.இந்தியத் தீவுகள் அணியை கத்துக்குட்டிகளான கென்ய அணி மண்கவ்வச் செய்து அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இரு அணிகளாலும் மறக்க முடியாத போட்டி அது. நாணயச் சுழற்சியில் வென்ற மே.இந்தியா கென்ய அணியை துடுப்பெடுத்தாடப் பணித்தது. கோட்னி வோல்ஷ், அம்புரோஸ் என்ற வேகப் புயல்களின் முன்னால் கென்யாவால் என்ன செய்யமுடியும். விக்கெட்டுக்கள மழமழவெனச் சரியத் தொடங்கின. போதாக்குறைக்கு ஹார்ப்பர் 15 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளைக் கொய்தார். முடிவு, கென்யா 49.3 ஓவர்களில் 166 ஓட்டங்களை மட்டும் சேகரித்தது. அந்த அணி வீரர் ஸ்டீவ டிகோலோ மட்டும் நல்லமுறையில் ஆடி 3பௌண்டரிகள், ஒரு சிக்ஸர்

(14ஆம் பக்கம் பார்க்க)

## லாராவின் துணையுடன் மேற்கிந்திய அணி

இதுவரை நடைபெற்ற 7 உலகக கிண்ணப் போட்டிகளில் ஆரம்பத்தில் நடைபெற்ற இரு போட்டிகளிலும் (1975,1979) கிண்ணத்தை சுவீகரித்து மேற்கிந்திய தீவுகள் அணி அதற்குப் பின்னர் நடைபெற்ற மூன்றாவது உலகக்கிண்ணப் போட்டியில் இறுதி ஆட்டத்தில் இந்திய அணியிடம் தோற்றது.

1983 ஆம் ஆண்டு இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்ற மேற்கிந்தியதீவுகள் அணி அதன்பின் 6 ஆவது உலகக்கிண்ண போட்டியில் அரையிறுதிக்கு தகுதிபெற்றிருந்தது. அதன்பின்னர் இந்த அணி அதிகம் சோபிக்கவில்லை. தொடர்ந்து வழ்ச்சியடையாமல் தூக்கி நிறுத்துவதற்கு பொருத்தமான - காத்திரமான - ஒரு தலைமை மேற்கிந்திய அணிக்கு தேவைப்பட்டது.




இந்த நிலையில் அணியின் பொறுப்பு சகல துறை ஆட்டக்காரரான கார்ல ஹூப்பரிடம் ஒப்படைக்கப் பட்டது. அதன்பின் மேற்கிந்திய தீவுகள் அணி பெரியஅளவில் எதனையும் சாதிக்காது விட்டாலும் அணியின் பெறுபேறுகள் படுமோசமானதாக இருக்கவில்லை.

கிரிக்கெட் வரலாற்றில் டெஸ்ட் மற்றும் சர்வதேச ஒருநாள் போட்டிகளில் தனக்கென தனிமுத்திரை பதித்திருந்த மேற்கிந்திய தீவுகள் அணி இன்று ஒரு சாதாரண அணியாக திகழ்கின்றது.

ஆனாலும், கடந்த வருட இறுதிப் பகுதியில் இந்தியாவில் நடைபெற்ற டெஸ்ட் தொடரில் இந்திய அணியிடம் தோல்வியடைந்த போதும் பின்னர் நடைபெற்ற ஒருநாள் ஆட்டங்களில் அபாரமாக விளையாடி 4-3 என்ற விகிதத்தில் தொடரைக் கைப்பற்றியது. அதுமட்டுமல்லாது இவ்வாட்டங்களில் மேற்கிந்தியதீவுகள் அணி விளை

(15ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையுடனான போட்டியில் கெய்ன்ஸ் பந்து வீசமாட்டார்

"உலகக்கிண்ணத்தொடரின் ஆரம்ப போட்டிகளில் நான் பந்து வீசசில் ஈடுபடமாட்டேன்" - இவ்வாறு நியூசிலாந்து அணியின் சகலதுறை வீரர் கிறிஸ் கெய்ன்ஸ் கூறினார்.

"4 வாரங்களுக்கு முன் நான் மீண்டும் போட்டிகளில் பங்குபற்ற ஆரம்பித்த போது விலாப்பகுதியில் காயம ஏற்பட்டது. அதை சமாளித்துக் கொண்டிருக்கின்றேன், நான் துடுப்பெடுத்தாடுவேன். ஆனால், ஆரம்ப போட்டிகளில் பந்து வீசமாட்டேன்"

- இவ்வாறு கெய்ன்ஸ் கூறினார்.

நியூசிலாந்து அணி எதிர்வரும் திங்களன்று தனது முதல் போட்டியில் இலங்கையுடன் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முழங்கால் உபாதைகாரணமாக இருதடவை சத்திரசிகிச்சை செய்துகொண்ட கெய்ன்ஸ், 2002 ஆம் ஆண்டு பெரும்பாலான காலம் ஓய்விலேயே இருந்தார். கடந்த டிசெம்பர் மாதம் துடுப்பாட்டவீரராக அவர் அணியில் இடம்பெற்றார். (ஏ-5)




தென்னாபிரிக்கா அணித் தலைவர் ஷோன் பொலக் ரசிகர்களுக்கு கையெழுத்திடுகிறார்.




இந்தியாவுக்கு வாழ்த்துக்கூறும் சிறுவர்கள்

## அணிகளின் விவரம்

### கென்யா

ஸ்ரீவ் ரிக்கோலா (தலைவர்) மௌரீஸ் உடும்பே, ஆஷிப் ஹரீம், அல்பேஷ்வதோர், ரவீந்து ஷா, ஹரி மேஷ்மோடி, பிரிஜால் பட்டேல், மார்டின் சுஜி, ரொனி சுஜி, தோமஸ் ஒடாயா, கென்னடி ஒபுயா, ஜோசப் அங்காரா, பீட்டர் ஓங் கோன்டா, டேவிட் ஒபுயா, கொலின்ஸ் ஒபுயா.

### கனடா

ஜோசப் விக்ரம் ஹரிஷ் (தலைவர்), டெக்ரூட் நிக்கலஸ், துரைசிங்கம் சஞ்சயன், பாகை ஆஷிஸ், பில்கிளிவ் இயன், கோட்ரிங்டன் ஆஸ்ரின், டேவிசன் ஜோன், ஜோசப் டேவிஸ், மிராஜ் இஷ்வர், பட்டேல் ஆஷிஸ், சமத் அப்துல், சந்தர் கெவின், சமத் பஸில், சீபரன் பெரி, சும்னி டெஸ்மண்ட்.

## ஷேன் வோர்னின் விரல்களில் பாதிப்பு



ஆஸ்திரேலியாவின் நட்சத்திர சுழல் பந்துவீச்சாளர் ஷேன்வோர்ன் நேற்று நடந்த பயிற்சி ஆட்டம் ஒன்றின் போது பந்து வீசும் கைவிரலில் காயமடைந்தார்.

வலது கை 'லெக் ஸ்பின்னர்' ஆன வோர்ன் வீசிய பந்தை 'நோர்தேர்ன்ஸ்' அணித் துடுப்பாளர் விளாச அதனைத் தடுக்க முயன்ற வோர்னின் வலது கை நான்காவது விரல் பாதிப்படைந்தது. உடனடியாக சிகிச்சை பெற்றுக்கொண்ட வோர்ன் தொடர்ந்தும் பந்து வீசினார். எனினும் அவரது பந்துவீச்சு நேற்று சோபிக்கவில்லை. 8 ஓவர்களில் 70 ஓட்டங்களைக் கொடுத்தார் அவர். (ம)




## மேற்கிந்திய அணியில் மீண்டும் சாமுவேல்ஸ்!

உலகக் கிண்ணப் போட்டிகளுக்கான மேற்கிந்திய கிரிக்கெட் அணியில் மார்லன் சாமுவேல்ஸ் மீண்டும் சேர்க்கப்படவுள்ளார்.

மேற்கிந்திய அணியின் புதிய துடுப்பாட்ட நட்சத்திரங்களில் ஒருவரான சாமுவேல்ஸுக்கு இருவாரங்களுக்கு முன் முழங்காலில் காயம் ஏற்பட்டது. இதனால் அவர் உலகக் கிண்ண அணியிலிருந்து நீக்கப்பட்டார். அவருக்குப் பதிலாக ரியன் ஹின்ட்ஸ் அணியில் சேர்க்கப்பட்டார். எனினும் ஆரம்பத்தில் கூறப்பட்டது போன்று சாமுவேல்ஸுக்கு ஏற்பட்டுள்ள காயம பாரதூரமானது அல்ல என தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

'சாமுவேல்ஸை பரிசோதித்த புதிய மருத்துவர்கள் அவர் சகல விதமான போட்டிகளிலும் பங்குபற்றும்

(14ஆம் பக்கம் பார்க்க)



நாளை நடைபெறவுள்ள ஆரம்ப நிகழ்வின் ஒத்திகையில் ஒரு காட்சி.

## தென்னாபிரிக்காவில் விளையாடுவதற்கு ஸிம்பாப்வே கிரிக்கெட் யூனியன் மறுப்பு!

"உலகக் கிண்ணத் தொடரில் ஸிம்பாப்வேயில் நடைபெறவுள்ள போட்டிகள் தென்னாபிரிக்காவுக்கு மாற்றப்பட்டால் அப்போட்டிகளில் ஸிம்பாப்வே அணி பங்குபற்றமாட்டாது."

- இவ்வாறு ஸிம்பாப்வே கிரிக்கெட் யூனியன் தலைவர் பீற்றர் சின்கோகா தெரிவித்துள்ளார்.

உலகக் கிண்ணத் தொடரில் முதல்சுற்றில் ஸிம்பாப்வே அணி தனது சகல (6) ஆட்டங்களையும் சொந்த மண்ணில் விளையாடவுள்ளது.

பாதுகாப்புக் காரணங்களுக்காக ஸிம்பாப்வேயில் நடைபெறவுள்ள போட்டிகளை தென்னாபிரிக்காவுக்கு மாற்ற வேண்டும் என அவுஸ்திரேலியா, இங்கிலாந்து ஆகிய நாடுகள் கோரிவருகின்றன.

எதிர்வரும் 13 ஆம் திகதி நடைபெறவுள்ள இங்கிலாந்து - ஸிம்பாப்வே அணிகளுக்கிடையிலான போட்டியை தென்னாபிரிக்காவுக்கு மாற்றுவது குறித்து உலகக் கிண்ணப் போட்டிகளுக்கான தொழில்நுட்பக்குழு நேற்று மாலை தீர்மானிக்கவிருந்தது. இந்நிலையிலேயே ஸிம்பாப்வே மேற்படி எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஸிம்பாப்வே கிரிக்கெட் யூனியன் தலைவர் பீற்றர் சின்கோகா புதனன்று பேட்டியொன்றில் கூறியதாவது:-

"சுப்பர் சிக்ஸ் சுற்றுக்காகவே நாம தென்னாபிரிக்காவுக்குச் செல்வோம். வேறு விதமான கட்டளைகள் வழங்கப்பட்டால் நீதி கிடைக்கும்வரை சகல வழிகளிலும் போராடுவோம்.

"ஸிம்பாப்வேக்கு ஆரம்பச் சுற்றில 6 போட்டிகளை நடத்தும் உரிமை

(14ஆம் பக்கம் பார்க்க)

உ
குகமயம்
ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமகா

# பருத்தித்துறை புலோலி வடக்கு, மருதடி
# அருள்மிகு குருமணல் கந்தசுவாமி கோவில்
## பஞ்சகுண்ட பக்ஷ புனராவர்த்தன அஷ்ட பந்தன பிரதிஷ்டா
# மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்
## இன்று(07-02-2003) வெள்ளிக்கிழமை

## பிரதிஷ்டா பிரதமகுருவின் அருளாசி

கலியுகவரதனாம் வள்ளிதேவசேன சமேத சுப்பிரமணியப் பெருமானின் மஹா கும்பாபிஷேகம் இனிது நிறைவேறும் இவ வேளையிலே, கலியுகத்திலே கண்கண்ட தெய்வம் வேறு இல்லை. நெஞ்சில் ஒரு கால் நினைக்கில் தண்டையணி வெண்டயங்கிங் கிணி சதங்கையுடன் குகனடியார்களுக்கு பச்சை மயில் ஏறி பறந்து வந்து காட்சி கொடுப் பார்.



அன்று தேவர்கள் வேண்ட எம் பரம பிதாவாகிய சிவபெருமான், எமது சக்தி ஆறு முகன் அவனும் யானும் வேறில்லை என்று தன்னைப்போல தனி ஆண்மகவை உலகிற் குத் தந்து, அந்த முருகன்மூலம் தேவர்கள் இடர்களைந்த வள்ளி மணாளன் திருக்கோயில் இன்று குடமுழுக்குக் காணுகின் றது. நாட்டில் சாந்தியும் சமாதான மும் பெற குருமணல் திருமுருகனை வேண்டி அருள் ஆசி கூறி அமைகிறேன்.

சிவாகம கிரியா தத்துவநிதி,
பிரம்மஸ்ரீ தாணு.வாசுதேவக் குருக்கள்.
*சட்டநாதர் கோயில், நல்லூர்.*

## பிரதேச செயலாளரின் ஆசிச் செய்தி

பருத்தித்துறை நகரில் வில்வ மரத்தை தலவிருட்சமாகக் கொண்டு வள்ளி தெய்வயானை சமேத கந்தசுவாமியாக எழில் கோலத்துடன் அடியவர்களின் வினைகளையெல்லாம் வேல் கொண்டு நீக்கி அருள்பாலித்துக் கொண்டிருக்கிறான் கந்தன். மருதடி குருமணல் அருள்மிகு கந்தசுவாமிக்கு இன்று மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சி யடைகின்றேன். மஹா கும்பாபிஷேகத்தினால் மக்களுக்குக் கந்தனின் திருவருட்கடாட்சம் கிடைக்க கந்தசுவாமியின் திருத் தாள் பணிந்து உளமாரப் பிரார்த்தித்து ஆசி கூறுகிறேன்.

ஆ.சிவசுவாமி *பிரதேச செயலர், பருத்தித்துறை.*

## பரிபாலன சபைத் தலைவரின் ஆசி

ஸ்ரீ அருள்மிகு குருமணல் கந்தசுவாமி மஹா கும்பாபிஷேகத் தினை நடத்தும் பெரும்பேற்றை எமக்குத் தந்த திருவாக்கும் இறையருளும் கும்பாபிஷேகச் சிறப்பும், மக்களின் சிறப்பும் சைவ சமய உலகத்தில் சிறப்புற எனது பிரார்த்தனையையும் நல்லா சியையும் திரிகரண சுத்தியுடன் சமர்ப்பிப்பதுடன் பெரும் சாந்தி விழா சிறப்புற நடத்த உதவிய பக்தப் பெருமக்கள் அனை வருக்கும் எல்லாம் வல்ல அருள்மிகு குருமணல் கந்தசுவாமி திருவருள் பெற வேண்டுகின்றேன்

த.ஜெயவர்த்தனராசா,
தலைவர், பரிபாலன சபை, அருள்மிகு கந்தசுவாமி கோயில்,
பிரதன வீதி, மருதடி, பருத்தித்துறை.


## செயலாளரின் வாழ்த்துச் செய்தி

அருள்மிகு புலோலி வடக்கு, குருமணல் கந்தசுவாமி கோயில், நம்முன்னோர்களால் 129 ஆண்டுகளுக்குமுன் ஸ்தாபிக்கப்பட்ட பழைமை வாய்ந்த ஆலயமாகும். எல்லாம் வல்ல முருகனின் அருளால பல திருப்பணிகள் செய்யப்பட்டு ரௌத்திரி வருஷம் தை மாதம் 27ஆம திகதி(09.02.1981) ரேவதி நட்சத்திரத்தில் புனராவர்த்தன பிரதிஸ்டா மஹா கும்பாபிஷேகம் சிறப்புடன் நடைபெற்றது.

அதன்பின் நாட்டில் ஏற்பட்ட போர் அனர்த்தங்களினால் எமது ஆலயமும் மற்றும் பல ஆலயங்கள் போல் பாதிப்புக்குள்ளாகியது. 1987ஆம் ஆண்டு ஜூன் 1ஆம் திகதி நடைபெற்ற விமானத் தாக்குத லால் கோவில் மண்டபமும் மதிலும் சிறு பாதிப்புக்குள்ளாகிய துடன் கோவில் வடக்கு வீதியும் பாதிப்புக் குள்ளாகியது. 1987ஆம் ஆண்டு ஜூன் 25-26 திகதிகளில் நடைபெற்ற 'ஒப்பரேஷன் லிபரேஷன்' இராணுவ நடவடிக்கையின்போது உலங்கு வானூர்தியின் தாக்கு தலினால் ஆலயத்தின் கிழக்கு வாசல் பகுதியும், வடக்கு மண்ட பமும் பாதிப்புக்குள்ளானது. அதன்பின் 1990ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற விமானத் தாக்குதலால் மண்டபம் சேதப் படுத்தப்பட்டுள்ளது. இக்கால கட்டங்களில் மக்களின் இடம்பெயர் வுகளாலும், நாட்டில் பதற்றமும் நிச்சயமற்ற சூழல்களாலும் கோவில் திருப்பணிகளை மேற்கொண்டு உரிய காலத்தில் கும்பாபிஷேகம் செய்து கொள்ள முடியாதநிலை ஏற்பட்டது. பரிவாரத்தில் இவ் வருடம் துர்க்கை அம்மனுக்கும் ஆலயம் அமைக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்படுகின்றது. ஆலயத்திற்குக் கிழக்கு வீதியில் முன்பிருந்த மடத்தைத்திருத்தியும் மேலும் ஒரு மடம் புதிதாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

மற்றும் பல திருத்த வேலைகள் சிறப்புடன் நடைபெற்று முரு கன் அருளால் பஞ்சகுண்ட பக்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷே கம் இன்று சித்திரபானு வருஷம் தைமாதம் 24ஆம் திகதி(07.02.2003) ரேவதி நட்சத்திரத்தில் நடைபெறுகின்றது. இத்திருப்பணி சிறப்பாக நடைபெற முருகனின் திருவருளோடு, முருகனின் அருளைப் பெற்ற உள்ளூர், வெளிநாட்டு அன்பர்களின் ஒத்துழைப்புடன் நிர்வாக சபை, பொதுச்சபை உறுப்பினர்களின் ஒத்துழைப்பும் மிகச் சிறப்பாகக் கிடைக்கப் பெற்றதை இங்கு மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

தி.சிவகடாட்சம்
செயலாளர்,
குருமணல் கந்தசுவாமி கோவில் பரிபாலன சபை.



## அருட்கந்தனின் ஆலய மகிமை

*எங்களிடத்திலே இருக்கும் நான் என்ற அகங்காரத்தையும் எனது என்ற மமகாரத்தையும் நீக்கி மானிடப்பிறவி எடுத்த எங்களைத் தன்னோடு இரண்டறக் கலக்கின்ற தன்மையை எங்களுக்கு அருளுவதற்காக பருத்தி மாநகரிலே குருமணல் பதியிலே எழுந்தருளியிருந்து அருள்பாலிக்கின்ற எம் முருகப் பெருமானுக்குச் சித்திரபானு வருடம் தைத்திங்கள் ரேவதி நட்சத்திரத்தில் குடமுழுக்குச் செய்ய அருள் பாலித்திருக்கும் வேளையில் ஆலய வரலாற்றையும் பெருமான் அற்புதங்களையும் அறிவது பெரும் பேறாகும்.*

*1875ஆம் ஆண்டு எமது முன்னோராகிய சி. வல்லியப்பர் என்கின்ற முருகன் அடியார் முருகன் அருளினாலே முருகப் பெருமானுக்கு ஓர் ஆலயம் அமைக்கவேண்டும் என்கின்ற பேரவாவோடு வடக்குப்புறம் மருத மரமும், கிழக்குப்புறம் ஒழுங்கையும், தெற்குப்புறம் குடிமனையும், மேற்குப்புறம் பிரதான வீதியும் உட்பட்ட வயல் பிரதேசமாக இருந்த குருமணல் என்ற இடத்திலே ஆலயம் அமைப்பதற்குத் தீர்மானித்து தனது உறவினர்களோடு கலந்து ஆலோசித்து 66 பேர் கொண்ட சபையை அமைத்து எல்லோரும் ஒற்றுமையாகவும், ஆர்வத்துடனும் முருகப் பெருமானுக்கு ஆலயம் அமைத் தனர். அத்துடன் ஆலயத்துக்கு முன்புறம் மடத்தையும் கட்டுவித்தனர். இரண்டு நேரப் பூசை ஒழுங்காக நடைபெற்று வருகிறது. காலத்துக்குக் காலம் நிர்வாக சபை மாற்றி அமைக்கப்பட்டு வந்தபொழுது அவர்களால் ஆலயத்திற்கு வசந்த மண்டபம், கோபுரவாசல், மிக உயர்ந்த சுற்றுமதில் போன்றன திருப்பணியாக அமைக்கப்பட்டன.*

*1932ஆம் ஆண்டு மீண்டும் திருப்பணி வேலைகள் நடைபெற்று தைத் திங்கள் ரேவதி நட்சத்திரத்தில் கும்பாபிஷேகம் செய்விக்கப்பட்டது. சில அசம்பாவிதங்கள் நடைபெற்றதனால் மீண்டும் 1935ஆம் ஆண்டு தைத்திங் கள் ரேவதி நட்சத்திரத்தில் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. முருகப் பெருமானின் அருளினால் கந்தசஷ்டித் திருவிழா, திருவாதிரை விழா, கார்த்திகைத் திருவிழா, மணவாளச் சோலை விழா முதலியன வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன.*

*அதன்பின் 1981ஆம் ஆண்டு தைத்திங்கள் ரேவதி நட்சத்திரத்தில் மீண்டும் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்று 45 நாள்கள் மண்டலா பிஷேகமும் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மண்டலாபிஷேக பூர்த்தி நாள் அன்று மூலஸ்தானத்தில் முருகப் பெருமானின் கரத்திலிருந்த வேல் தானாக ஆடிய அற்புதமும் நிகழ்ந்தது.*

*1982ஆம் ஆண்டு அலங்காரத் திருவிழா ஆரம்பிக்கப்பட்டு 10ஆவது நாள் ஆடிமாத திருவோண நட்சத்திரத்தை தீர்த்த உற்சவமாகக் கொண்டு 10 நாள்கள் திருவிழா சிறப்பாக நடைபெற்று வந்தது. அதன்பின் 1992ஆம் ஆண்டு கொடியேற்றத் திருவிழா ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இப்பொழுது முன்பிருந்த பிள்ளையார் ஆலயமும் நாக தம்பிரான் ஆலயமும் புதிதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் துர்க்கை அம்மன் ஆலயமும் பரிவார ஆலயங்களுடன் அமைக்கப்பட் டுள்ளது. "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெலாம்"*

ந.தேவராசா (போசகர்).

தெய்விகத் தொடர் இசைப் பேருரை
"மகா பாரதம்"
மண்டலாபிஷேகத்தை முன்னிட்டு
தொடர்ந்து 45 நாள்களும்
இரவு 7 மணிக்கு நடைபெறும்.
நிகழ்த்துபவர்: "கான சுதாவாரிதி"
கொக்குவில் பிரம்மஸ்ரீ சி.வை.நித்தியானந்தசர்மா

## போற்றித் துதிப்போமே!

திருமுருகா மால்மருகா வேல்முருகா!
தீராவினை தீர்க்கும் குமரேசா!
குருமணலில் உறைந்த குகனே சண்முகனே!
வள்ளிமணாளனே வடிவேலவனே!
ஒருதரமுன் பெயரை உச்சரித்திட்டால்
ஓடிவந்தே திருவருள் புரிவாய்!
பெருஞ் சாந்தி நாளில் பெருமானை நினைந்தே
போற்றித் துதிப்போமே காப்பாற்றையா!

*கவிமணி இராசையா ஸ்ரீதரன்.*

## விளம்பர அன்பளிப்பு

## ஆதீன முதல்வரின் அருளாசி

அன்பு நெஞ்சத்தீர்,

பருத்தித்துறை புலோலி எனும் பதியில் எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமானுக்கு இன்று மகா கும்பாபிஷேகம் நடைபெறுவது மகிழ்ச்சியைத் தருகின்றது. கலியுகவரதனாம் முருகப்பெருமான் இவ்வாலயத்தில் நீண்டகாலமாக எழுந்தருளியிருந்து வேண்டுவார் வேண்டுவதை வழங்கிக்கொண்டிருக்கின்றான். பன்னிரண்டு வருடங் களுக்கு ஒருமுறை நடைபெறும் கும்பாபிஷேகம் இக்கோயிலில் நடைபெறுவது இவ்வூருக்கும் இங்கு வாழ் மக்களுக்கும் புனிதத்தைத் தருவதாகும். ஆலயத்தில் நடைபெறும் விழாக்களும் கிரியைகளும் மனிதனை மனித நேயத்தோடு வாழவழிகாட்டுகின்றது. இதனை ஒவ்வொரு அன்பர்களும் பின்பற்றி ஆலயம் சென்று வழிபாடு செய்து மண்ணில் நல்லவண்ணம் வாழ்வோமாக. கும்பாபிஷேகத்தைச் செய்யும் குருமார்களுக்கும் ஆலய பரிபாலன சபையினருக்கும் ஊர் மக்களுக்கும் இறைவனுடைய அருள் கிடைப்பதாக. அவனருளையே நாடி உளமாரப் பிரார்த்தித்து ஆசி கூறுகின்றோம்.

*"என்றும் வேண்டும் இன்ப அன்பு"*
இரண்டாவது குருமகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.

## சிவத்தமிழ்ச் செல்வி ஆசி

அருள்கொழிக்கும் கந்தப்பெருமான் விரும்பி உறை யும் ஆலயங்களில் ஒன்றாக மிளிர்வது புலோலி அருள் மிகு குருமணல் கந்தசுவாமி கோயிலாகும். இவ்வாலயம மிகவும் பழைமை பெற்றதாகும். இவ்வூர் முருக பக்தர் களால் போற்றப்படுவதும் இவ்வாலயமே ஆகும். குருமணல கந்தசுவாமி ஆலயம் மீண்டும் புதுப் பொலிவு பெற்று 07.02.2003 தைமாத ரேவதி நட்சத்திரத்தன்று கும்பாபிஷே கப் பெருவிழா நடைபெற இருப்பது அறிந்து நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.

சமய வாழ்வின்மூலமே மன அமைதியும், மனநிம்மதி யும் கிடைக்கும் என்பது முற்றுமுழுதான உண்மை. இந்த வகையில், புலோலி அருள்மிகு குருமணல் கந்தசுவாமி ஆலயம் இவ்வூர் மக்களுக்கு மன அமைதியையும், ஆனந்தத தையும் அளிப்பதாகும். எம்பெருமான் கந்தப் பெருமானுக்கு குடமுழுக்கு விழா எடுக்கும் அனைத்து அன்பர்களும் பாராட் டப்படவேண்டியவர்கள். இவர்கள் அனைவரையும் வாழ்த்தி, வணங்கி ஆசி கூறுகின்றோம். எம்பிரானின் கும்பாபிஷேகப் பெருவிழா பக்திபூர்வமாக நடைபெற திருவருளைப் பிரார்த்திக்கின்றேன்.

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.

## பொருளாளரின் வாழ்த்துச் செய்தி

பருத்தித்துறை, புலோலி வடக்கு, குருமணல்பதியில் குடிகொண்டிருந்து குடிமக்களின் குறைகள் தீர்க்கும் குமரப் பெருமானுக்கும் விநாயகர், நாகதம்பிரான், துர்க்கை அம்பாள் மற்றும் சண்டேஸ்வரர், வைரவர் முதலான பரிவார மூர்த்திகளுக்கும் மகா கும்பாபிஷே கம் குதூகலமாக குறைவின்றி நடைபெற அள்ளிக் கொடுத்தோர்க்கும், கிள்ளிக் கொடுத்தோர்க்கும் குறை யாத பெருஞ்செல்வம் அனைத்தும் கிடைக்க வேண்டு மெனக் குருமணல் குமரப்பெருமானை வேண்டுகின் றேன். இத்திருப்பணியை செவ்வனே செய்துமுடிக்க உதவிய அனைவருக்கும் எனது நன்றியைத் தெரி வித்துக்கொள்கின்றேன்.

தி.சிவராசா,
*பொருளாளர்,*
*அருள்மிகு குருமணல் கந்தசுவாமி கோவில் பரிபாலனசபை*
*பிரதானவீதி, மருதடி, பருத்தித்துறை.*

## நற்பணி சிறக்க நல்லாசிகள்

அருள்மிகு பருத்தித்துறை குருமணல் கந்தசுவாமி கோயிலில் இன்று 07.02.2003 நடைபெறும பஞ்ச குண்ட பக்ஷ பிரதிஷடா மகா கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற முருப்பெருமானைப் பிரார்த் திக்கின்றோம். ஆலயத்திற்கு பல திருப்பணிகள் செய்து கும்பாபிஷேக் தத்தைச் சிறப்புற நடத்துவிப்பவர்களின் நற்பணிகள் என்றும் போற்றுதற்குரியது. அவர்களுக்கு எமது நன்றி கள்.

முருகப் பெருமானின் அருள் எல்லோருக்கும் கிடைக்க வேண்டு மெனப் பிரார்த்திக்கின்றோம்.

திரு.திருமதி மகேஸ்வரன் குடும்பம்,
திரு.திருமதி சிவநேசன் குடும்பம்,
திரு. ம.ரமணன்,
திரு ம.சுகந்தன்,
(ஜேர்மனி).

திரு.திருமதி மகேஸ்வரன் குடும்பம் (ஜேர்மனி)

திரு.திருமதி சிவநேசன் குடும்பம் (ஜேர்மனி)

திரு.ம.ரமணன், திரு.ம.சுகந்தன் (ஜேர்மனி)

(14116)

உதயன்

## நம்பியார் நாடகம்

நடப்பதெல்லாம் ஒரு நாடகமே தவிர வேறு ஒன்றுமல்ல. குறிப்பாக, உயர்பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக நடப்பது நன்கு ஒத்திகை பார்க்கப்பட்டதோர் உன்னத நாடகம். நம்பியாரை இனியும் நம்பிப் பயன் இல்லை. இப்போது இந்த முடிவுக்கு வந்துவிட்டார்கள் யாழ்.மக்கள்.

கடந்த புதன்கிழமை சதீஸ் நம்பியார் யாழ்.மக்களின் பிரதிநிதித்துவ அமைப்புக்களின் முக்கியஸ்தர்கள் மற்றும் யாழ்.எம்.பிக்கள் சிலர் முதலானோரை யாழ்.செயலகத்தில் சந்தித்துப் பேசும்வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது.

அந்தச் சந்திப்பு நம்பியாரை இனங்காட்டிக் கொடுத்துவிட்டது. அவரின் மனதில் என்ன இருக்கிறது? உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினையில் அவரின் நிலைப்பாடு என்ன? இவற்றையெல்லாம் அந்தச் சந்திப்பு தெளிவுபடுத்திவிட்டது. அதை அடுத்தே நம்பியாரில் இனி நம்பிக்கை வைத்துப் பயனில்லை என்று யாழ்.மக்கள் தெளிந்துகொண்டார்கள்.

பல வருடங்களுக்கு முன்னரே யாழ்.மக்களில் பெரும் எண்ணிக்கையினரை அவர்களுடைய வீடுகளிலிருந்து விரட்டியடித்துவிட்டு அந்த வீடுகளில் படையினர் இருக்கிறார்கள். தாம் நிலைகொண்டிருக்கும் பகுதிகளை உயர் பாதுகாப்பு வலயங்கள் என்று பிரகடனப்படுத்தித் தமது அடாத்தான செயலை நியாயப்படுத்த முனைகின்றனர். அவர்கள் பாதுகாப்பு வலயங்களைவிட்டு வெளியேற விரும்பவில்லை.

தமது வீடுகளைவிட்டு விரட்டப்பட்ட மக்கள் அகதிகளாக வெவ்வேறு இடங்களில் இருந்து அவதிப்பட்டு வருகிறார்கள்.

அவர்கள் இனிப் பொறுக்கமுடியாது என்ற நிலையில் தாங்கள் தங்களுடைய வீடுகளுக்குத் திரும்பிச் சென்று குடியமரவேண்டும்; அதற்கு அரசு படையினரை அங்கிருந்து விலக்கவேண்டும் என்று கோருகிறார்கள்.

அவர்களுடைய கோரிக்கை அரசும் புலிகளும் நடத்திவரும் சமாதானப் பேச்சுகளில் எதிரொலித்து பெரும் பிரச்சினையைக் கிளப்பியது.

அதை அடுத்தே பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான ஆலோசனை வழங்குமாறும் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் சதீஷ் நம்பியாரை இலங்கை அரசு கேட்டுக்கொண்டது.

சதீஷ் நம்பியார் இந்திய இராணுவத்தில் உயர் பதவிகளை வகித்துவிட்டு 8 ஆண்டுகளுக்கு முன்னர் ஓய்வுபெற்றவர். இலங்கை அரசுக்கும் நெருக்கமானவர். இலங்கை இராணுவ உயர் அதிகாரிகள் பலரின் நண்பன். அவ்வப்போது இலங்கை வந்து இவர்கள் எல்லோரையும் சந்தித்துச் செல்பவர்.

இவர் சிறிது காலத்துக்கு முன்னர் இலங்கை வந்தபோதே பாதுகாப்பு வலயங்கள் பற்றி அரசுக்கு ஆலோசனை கூறி அறிக்கையும் வழங்கினார் என்ற செய்தி சில தினங்களுக்கு முன்னர் பலமாக அடிபட்டது. அதுமட்டுமல்ல; அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் சில விடயங்களும் வெளியிடப்பட்டன. அவை படையினரைப் பாதுகாப்பு வலயங்களிலிருந்து அப்புறப்படுத்துவது படையினரின் பாதுகாப்புக்கு உகந்தது அல்ல என்ற தொனியில் அமைந்திருந்தன.

அரசு இவற்றையெல்லாம் மறுத்து இனிமேல்தான் சதீஷ் நம்பியார் இங்குவந்து பாதுகாப்பு வலயங்களுக்குச் சென்று நிலைமையை நேரில் அவதானித்துவிட்டு அறிக்கை தருவார் என்று கூறியது.

அதன்படியே நம்பியார் இம்முறை வந்திருக்கிறார். யாழ்ப்பாணத்துக்கும் வந்தார். யாழ்.மக்களைச் சந்தித்தபோது "உங்களைச் சந்திப்பது எனது நிகழ்ச்சநிரலில் இல்லை" என்று முதலில் ஒரு குண்டைப் போட்டார்.

ஆக, அரசின் வற்புறுத்தலின்பேரில்தான் சந்திப்பு (ஒப்புக்கு) நடந்தது என்று அர்த்தம்.

உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினை புலிகள் சம்பந்தப்பட்ட பிரச்சினை அல்ல; இது மக்கள் பிரச்சினை; மனித உரிமைப் பிரச்சினை; மனிதாபிமானப் பிரச்சினை; இந்தக் கோணத்தில்தான் பிரச்சினையை அணுகி மக்களை அவர்களின் சொந்த வீடுகளுக்குச் சென்று குடியமர வழிசெய்யவேண்டும் என்று மக்கள் அமைப்புகளின் பிரதிநிதிகளும் எம்.பிக்களும் நம்பியாரிடம் எவ்வளவோ சொன்னார்கள்.

உங்கள் கருத்துக்களை எல்லாம் கேட்டு ஆராய்வதற்கு ஒரு வருடம் தேவை. நீங்கள் மனிதாபிமானப் பிரச்சினை என்ற கோணத்தில் மட்டும் பார்க்கிறீர்கள். இதில் படையினரின் பாதுகாப்பும் சம்பந்தப்பட்டிருக்கிறது. அதுவும் ஒரு முக்கிய பிரச்சினை என்று சதீஷ் நம்பியார் அசல் இராணுவத் தளபதியாகப் பதிலளித்தார்.

ஆக, அவர் ஒரு நிலைப்பாட்டை ஏற்கனவே எடுத்துவிட்டார். இன்று பேர்லினில் ஐந்தாவது சுற்றுப்பேச்சு நடக்க இருக்கின்றது. அதில் பாதுகாப்பு வலயப் பிரச்சினை எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது. இனிமேல்தான் நம்பியார் அறிக்கை தயாரித்தும் கொடுக்கப்போகிறார்.

விடயம் முடிந்துவிட்டது. ஆனால், நாடகம் தொடர்கிறது. இன்னும் திரைவிழவில்லை. அவ்வளவுதான்.

### நஷ்டமேற்படுவதைத் தடுக்கும் வகையில்

# மன்னார் விவசாயிகளின் நெல்லை சதொசமூலம் கொள்வனவு செய்க!

## அமைச்சரிடம் அடைக்கலநாதன் எம்.பி.கோரிக்கை

மன்னார் மாவட்டத்தில் விளையும் நெல்லை "சதொச நிறுவனம்" கொள்வனவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளும்படி வர்த்தக அமைச்சர் ரவி கருணாநாயக்கவிடம் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.அடைக்கலநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பல வருடங்களாக காலபோக நெல் அறுவடையின் பின்னர் தங்களது நெல்லை விற்பனை செய்வதற்கு தனியார் வியாபாரிகளையே மன்னார் மாவட்ட விவசாயிகள் நம்பியிருந்தனர். தனிப்பட்ட வியாபாரிகள் என்ன விலையை நிர்ணயம் செய்கின்றார்களோ அந்த விலையிலேயே விவசாயிகள் தமது நெல்லை விற்கும் நிலையே நீண்டகாலம் நிலவிவந்தது.

2002ஆம் ஆண்டில் அரசின் "சதொச நிறுவனம்" நெல கொள்வனவு செய்யும் பணியில் இறங்கியபோது தனிப்பட்ட விவசாயிகளின் பிடியிலிருந்து விடுபட்டு தங்களது நெல்லைக் கூடிய விலையில் விற்கும் நிலை உருவாகியதன் பின் விவசாயிகள் கூடுதலான வருமானத்தையும் பெற்றனர்.

தற்போது மன்னார் மாவட்டத்தில் நெல் அறுவடைக்காலம் ஆரம்பமாகப் போகிறது. "சதொச நிறுவனம்" நெல் கொள்வனவில் இறங்காத பட்சத்தில் திரும்பவும் தாங்கள் தனிப்பட்ட வியாபாரிகளின் பிடியில் சிக்க நேர்ந்தால் தங்களது நெல்லைக் குறைந்த விலையில் விற்கும் நிலை உருவாகலாமென விவசாயிகள் அஞ்சுகின்றனர்.

கடந்த வருடம் போன்று "சதொச நிறுவனம்" இவ்வருடமும் நெலலைக் கொள்வனவு செய்யும் என்ற நிலைப்பாட்டை உருவாக்குவதன் மூலம் மன்னார் விவசாயிகள் காலபோக நெல்லை கூடுதலான விலையில் விற்பனை செய்ய வழிவகுக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன் - என்று கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

# வலி.தென்மேற்கு, மேற்கில் நெல்லின் விலையில் வீழ்ச்சி

## நஷ்டம் குறித்து விவசாயிகள் கவலை

வலிகாமம் தென்மேற்கு, வலிகாமம் மேற்கு ஆகிய பகுதிகளில் நெல்லின் விலை வீழ்ச்சியடைந்து வருகின்றது. காலபோக நெற்செய்கையின் அறுவடை ஆரம்பமாகியுள்ளதை அடுத்தே இந்த விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

தற்போது 69 கிலோகிராம் நிறையுள்ள ஒரு மூடை நெல் 800ரூபாவிலிருந்து 850 ரூபாவரை விற்கப்பட்டு வருவதாகவும் -

தனிப்பட்ட வியாபாரிகளே விவசாயிகளிடம் இந்த விலைக்கு நெல்லை கொள்வனவு செய்து வருவதாகவும் - கூறப்படுகின்றது.

காலபோக நெற்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் எரு, உரம், கிருமிநாசினி, களைகொல்லி, கூலி என்று பலவற்றிற்கும் செலவு செய்து முதலிட்டு வந்துள்ளதால் உற்பத்தி செலவுகள் அதிகமாக இருந்தது. அதனால், இந்த விலை வீழ்ச்சி தங்களைப் பெரிதும் பாதித்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஒரு மூடை நெல்லை (69கிலோ) ஆயிரத்து இருநூறு ரூபாவுக்கு விற்பனை செய்தால்தான் நஷ்டம் ஏற்படாது தவிர்க்க முடியும் என்று விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

பல வருடங்களுக்கு முன்னர் நெற் சந்தைப்படுத்தும் சபை விவசாயிகளிடமிருந்து நியாயமான விலைக்கு நெல்லை கொள்வனவு செய்து வந்தது. தற்போது இச்சபையின் செயற்பாடு எதுவும் இல்லை என்றும் தெரியவருகின்றது.(ஒ-135)

### மே 2முதல் 5வரை கொழும்பில் நடைபெறும்

# இந்து மாநாட்டின் தொனிப்பொருள் 'தர்ம வழியில் அமைதி காண்போம்'

யாழ்ப்பாணம்,பெப்.7

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சு ஏற்பாடு செய்துள்ள இரண்டாவது உலக இந்து மாநாடு எதிர்வரும் மே மாதம் 2ஆம் திகதி தொடக்கம் 5ஆம் திகதிவரை கொழும்பில் நடைபெறவுள்ளது.

அங்குரார்ப்பண வைபவம் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் 2ஆம் திகதி காலை 9.30மணிக்கு இடம்பெறும். ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இதில் பிரதம அதிதிகளாகக் கலந்துகொள்வர்.

மொரீஸியஸ் நாட்டின் பிரதமர், இந்திய சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் மற்றும் சிங்கப்பூர் அமைச்சர்கள், ஆதீன கர்த்தாக்கள் உட்பட சமயப் பெரியார்கள் ஆகியோரும் இந்த மாநாட்டில் பங்குகொள்வர்.

மாநாடு இடம்பெறும் நான்கு நாள்களும் கொழும்பிலுள்ள பிரதான மண்டபங்களில் கலாசார நிகழ்ச்சிகள் இடம்பெறும். இலங்கை, இந்தியக் கலைஞர்கள் இவற்றில் பங்குகொள்வர். இந்து கலாசாரத்தையும், வரலாற்றையும் பிரதிபலிக்கும் கலாசாரக் கண்காட்சியும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை - மாநாட்டை முன்னிட்டு வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, கண்டி, யாழ்ப்பாணம், பதுளை ஆகிய நகரங்களிலும் பிராந்திய மாநாடுகள் இடம்பெறும்.

வெளிநாடுகளிலிருந்து வருகைதரவுள்ள ஆதீன முதல்வர்கள், ஆய்வாளர்கள், கலைஞர்கள் ஆகியோரும் பிராந்திய மாநாடுகளில் பங்கேற்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

மாநாடு தொடர்பாக இரண்டு தொகுதிகளாக ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் ஆராய்ச்சிபூர்வமான கட்டுரைகள் அடங்கிய சிறப்புமலர்களும் வெளியிடப்படவுள்ளன.

'தர்மவழியில் அமைதி காண்போம்' என்ற தொனிப்பொருளில் இரண்டாவது உலக இந்து மாநாடு இடம்பெறும். (எ)

# காலந்தாழ்த்தாது நிவாரணத்தை விநியோகிக்கும்படி கோரிக்கை

வலி.மேற்கு,பெப்.7

ஏ-9 தரைவழிப் பாதை திறக்கப்பட்ட பின்னர், வன்னியில் இருந்து வந்து மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கான இலவச உலர் உணவு நிவாரணத்தைக் காலந்தாழ்த்தாது அந்தந்த மாதங்களில் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மீளக்குடியமர்ந்தவர்கள் வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

இலவச உலர் உணவு நிவாரணம் தற்போது காலந்தாழ்த்தியே விநியோகிக்கப்படுவதாகவும் -

கடந்த டிசெம்பர் மாதத்திற்கான நிவாரணம் தற்போதுதான் வழங்கப்படுவதாகவும் - கூறப்படுகிறது. ஆகவே, அந்தந்த மாதங்களுக்கான நிவாரணத்தைச் சீராக விநியோகிப்பதற்கு சம்பந்தப்பட்ட அனைவரும் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென வன்னியிலிருந்து வந்து மீளக் குடியமர்ந்த குடும்பங்கள் வேண்டுகோள்விடுத்துள்ளன.

கிராமிய நல்லிணக்கக் குழுவினர் நிவாரணத்தை அந்தந்த மாதங்களில் விநியோகிப்பதற்கு அரச அதிபர் நடவடிக்கை எடுக்கவேண்டுமென பிரதேச நல்லிணக்கக் குழுவினரிடம் கோரிக்கை விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஒ-175)

**நாளை**

தை 25
சனிக்கிழமை
(08.02.2003)
திதி : ஸப்தமி
பின்னிரவு 2.44 வரை.
நட்சத்திரம்: அச்சுவினி
பிற்பகல் 1.51 வரை.
ரதஸப்தமி
சுபநேரம் : 3.35 - 5.05
ராகுகாலம் : 9.35 - 11.05
(பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

வயது அதிகமாக இருந்தால் அனுபவமும் அந்தளவுக்கு இருக்கும் என்று எண்ணுவது தவறு.

# வெள்ளவடிகால் அமைத்துத் தரும்படி விவசாய சம்மேளனம் கோரிக்கை

சுதுமலை அம்மன் கோவிலடியைச் சுற்றியுள்ள விவசாய நிலப்பரப்பில் மழைகாலத்தில் வெள்ளம் நிரம்பி காலத்துக்கு காலம் பாரிய அழிவை ஏற்படுத்தி வருகின்றது. இதனைத் தடுக்க சுதுமலை அம்மன் கோவில் குளத்திலிருந்து வடிகால் பாதை ஒன்று அமைத்து வெள்ளம் கடலுக்குச் செல்லக் கூடியதாக நடவடிக்கை மேற்கொள்ளும்படி சுதுமலை வடக்கு - தெற்கு விவசாய சம்மேளனம், உடுவில் கமநல சேவை நிலையத்தினரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

வடிகாலமைப்பு பாதை ஏற்படுத்துவதன்மூலம் மழை காலத்தில் ஏற்படும் குடிப்பெயர்வுகளைத் தடுக்கலாம் எனவும் -

40 ஏக்கருக்கு மேற்பட்ட நிலத்தில் கோடைகால விவசாயத்தை மேற்கொள்ள இதன்மூலம் வாய்ப்பு ஏற்படுமெனவும்-

தமது கோரிக்கையில் விவசாய சம்மேளனத்தினர் சுட்டிக் காட்டியுள்ளனர். (ஒ-152)

### இடம்பெயர்ந்த வேளையில்

# புதைத்து வைத்த நகை, பணம் 12 வருடங்களின் பின் மீட்பு!

## பலாலிப் பகுதியில் சம்பவம்

தென்மராட்சி,பெப்.7

இடம்பெயர்ந்தபோது புதைத்து வைத்துவிட்டு வந்த நகைகளையும், ரொக்கப் பணத்தையும் சுமார் 12 வருடங்களின் பின்னர் ஒருவர் சென்று மீட்டுள்ளார்.

தற்போது கொழும்பில் வசிக்கும் ஜோன் செல்வநாயகம் என்பவரே தனது உடைமைகளை மீட்ட அதிர்ஷ்டசாலியாவார்.

இவர் முன்னர் பலாலியில் அடகு பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டு வந்ததாகவும் -

1990ஆம் ஆண்டில் அங்கிருந்து இடம்பெயர்ந்தபோது பாதுகாப்புக் கருதி தன்னிடமிருந்த 45 பவுண் தங்க நகைகள் மற்றும் 65ஆயிரம் ரூபா ரொக்கப் பணம் ஆகியவற்றைப் பலாலியில் வீட்டருகே புதைத்து வைத்துவிட்டு இடம்பெயர்ந்ததாகவும் - கூறப்படுகிறது.

மீண்டும் தற்போது வீடு பார்க்கச் சென்ற அவர், தான் புதைத்து வைத்த உடைமைகளை மீட்டுள்ளார்.

நீண்டகாலமாகப் புதைந்திருந்ததால் பெரும்பாலான நோட்டுக்கள் முற்றாகச் சேதமடைந்துள்ளதாகவும் -

ஆயினும், சுமார் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான நோட்டுகளின் இலக்கப் பகுதிகள் சேதமடையாததால் அவற்றை மத்திய வங்கியில் மாற்ற வாய்ப்புள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை புதைந்திருந்த நகைகள் சேதமின்றி முழுமையாக மீட்கப்பட்டதாக அறியவருகிறது. (ஒ-117)

# ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1978 - 03 - 25 | 1996 - 02 - 24 |

## அமரர் கந்தையா இராசேஸ்வரன்

(ராசன்)

(A/L 97 கலைப்பிரிவு, யா/ ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரி)

திதி: 07.03.2003

*சூரியன் இருண்டதோ சுடரொளி மங்கிற்றோ*
*கிப்ரினினால் வானம் கறுத்ததோ வட்டநிலா*
*மறைந்ததடா ராசா!*

உன் நினைவில் எந்நாளும் வாழ்ந்துகொண்டே இருக்கின்றோம்.

சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி. (14064)

கந்தையா
குடும்பத்தினர்.

# 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 08 - 07 - 1955 | 24 - 01 - 1988 |

## திருமதி
## காயத்திரி ஆனந்தரமணி தர்மசோதி

[காலஞ்சென்ற திரு. திருமதி சபா ஆனந்தரின்
கனிஷ்ட புத்திரி, (விஞ்ஞான ஆசிரியை,
மன்/காக்கயன் குளம் மகா வித்தியாலயம்)]

திதி: 07.02.2003 வெள்ளிக்கிழமை

அம்மா உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

"ஸ்ரீசாலினி"
கே.கே.எஸ்.வீதி,
இணுவில். (14155)

-குடும்பத்தினர்.

## இலவச பாடநூல் விநியோகத்தில் குறைபாடு

வடமராட்சி கிழக்கு,பெப்.7

மருதங்கேணி கல்விக்கோட்டப் பாடசாலைகளில் கற்கும் ஐந்தாம்தர மாணவர்களுக்கு வழங்குவதற்கான இலவச பாடநூல்களில் தமிழ் பாட நூல் மட்டுமே வந்து சேர்ந்துள்ளது.

புதிய கல்விச் சீரமைப்புக்கு ஏற்ப இவ்வருடம் ஐந்தாம் தரத்திற்கு சகல பாடநூல்களும் மாற்றப்பட்டுள்ளன. இந்நிலையில் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு, ஏனைய நூல்கள் கிடைக்காததால் பாதிப்பு ஏற்படுமெனக் கூறப்படுகிறது. (ஒ-182)

## வடக்கு-கிழக்கு நூலகர்களுக்கு பதவியுயர்வு

யாழ்ப்பாணம்,பெப்.7

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள நூலகங்களில் நூலகர்களாக கடமைபுரிந்துவரும் சகல நூலகர்களும் இணைந்த நூலகப் பொறுப்பாளர் பதவிக்கு உள்ளெடுக்கப்படவுள்ளனர்.

மேற்படி நூலகர்களை இணைந்த சேவைக்கு உள்ளெடுப்பதற்கான விண்ணப்பப்படிவங்கள் அரச நிர்வாக சுற்றறிக்கை மூலம் சகல திணைக்களங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இப்பதவிக்கு விண்ணப்பிப்போர் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஊடாக விண்ணப்பிக்குமாறு அரச நிர்வாக முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (ஒ-8)

## அனுமதியின்றி மது எடுத்துவந்தவர் நீதிமன்றில் ஆஜர்

யாழ்ப்பாணம்,பெப்.7

அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிகமாக மதுபான வகைகளை எடுத்து வந்த நபர் ஒருவர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டு நேற்று முன்தினம் யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த அருள்நாதன் சஞ்சீவன் என்பவரே ஆஜர் செய்யப்பட்டவராவார்.

கோப்பாய் பொலீஸாரால் கோப்பாயில் வைத்து கடந்த செவ்வாய்க் கிழமை கைதுசெய்யப்பட்ட இவர் நேற்றுமுன்தினம் மன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

இவரை 10ஆயிரம் ரூபா தண்டப் பணமாகச் செலுத்துமாறு நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டார். (ஒ-10)

# 31 ஆவது நாள் நினைவஞ்சலி



## அமரர்
## கந்தையா ஆறுமுகம்

*(சரசாலை)*

திதி: 07.02.2003

அன்போடும் பண்போடும் வாழ்ந்த உங்களது ஆத்மா சாந்தி அடைவதாக.

இன்று (07.02.2003) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தோற்றம் : 05.04.1926
மறைவு : 08.01.2003

*ஏழாலை மத்தி,*
*ஏழாலை.* (14147)

- பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# ஈர விழிகளுடன் ஓராண்டு நினைவஞ்சலியும் திருப்பலி ஒப்புக் கொடுத்தலும்



| ஆனந்த மலர்வு | அகால உதிர்வு |
|---|---|
| 1977 - 09 - 27 | 2002 - 02 - 07 |

## அமரர் ஜெயக்கொடி ஜெயரஞ்சிதன்

(மெத்தை ரஞ்சன் - பிரபல வணிக முகவர்)

*காற்றோடு வந்த சேதி கதிகலங்க வைத்ததடா!*
*நம் உறவில் ஏற்பட்ட விரைவான இடைவெளிக்கு*
*நாதம் பாடும் வீணை நட்டு வைத்த*
*இரும்புச் சட்டம் தான் காரணமா மகனே...?*
*எத்தனை தடவை இவ்வீதித் தடையை*
*கடந்து சென்றிருப்பாய்....*
*அப்பொழுதெல்லாம் நிச்சயமாய் நினைத்திருக்கமாட்டாய்*
*இதுதான் உனது வாழ்க்கைத் தடையென*
*அன்றாட வாழ்வில் உன்னோடு அடிபடும்*
*நாம் மன்றாடி கேட்கிறோம்*
*அன்னையொடு மறுபிறப்புத் தா... என்று*
*உன்னை நினைக்கும் போதெல்லாம்*
*ஏன் இந்த வாழ்க்கை என*
*இரத்தக் கண்ணீர் வடிக்குதடா இதயம்.*

இன்று (07-02-2003) வெள்ளிக்கிழமை புதியநேரம் மாலை 4.00 மணிக்கு அல்லைப்பிட்டி அர்ச் உத்தரியமாதா தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

முகவரி:
3ஆம் வட்டாரம்,
அல்லைப்பிட்டி. (சி-26403)

என்றும் உன் நினைவில்:
ஜெயக்கொடி குடும்பத்தினர்.

அம்பாள் துணை
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம!

# யாழ். வண்ணை கன்னாதிட்டி அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம் சித்திரபானு வருஷ மஹோற்சவம் - 2003



## கொடியேற்றம்

இன்று (07.02.2003)
வெள்ளிக்கிழமை
காலை 10.00 மணி.



கன்னாதிட்டி உறைபவளே காளிதாயே
எண்ணியவை நிறைவேற்ற கொடியேற்று!
*வண்ணையிலே உறைபவளே! காளிதாயே!*
*வையகத்தை வாழ்விக்க கொடியேற்று*
*எண்ணியவை நிறைவேற்றும் காளிதாயே!*
*எங்களது துயர்தீர்க்க கொடியேற்று*
*தண்ணளியை பெருக்குகின்ற காளிதாயே!*
*தமிழ்நிலத்தில் சமாதானம்தர கொடியேற்று*
*நின்விழியால் எமைநோக்கு காளிதாயே!*
*நிரந்தரமாய் தீர்வுதர கொடியேற்று!*

(ஆக்கியோன் - மதுரகவி காரை. எம்.பி. அருளானந்தன்)

(C-26398)

### கொடியேற்ற விழா சிறப்புற வாழ்த்துவோர்:

| | | |
|---|---|---|
| நவ நாகரிக நகைகளுக்கு சிறந்த இடம்: **சிறி நதியா நகை மாளிகை** 01,கஸ்தூரியார் வீதி, யாழ். 021 - 2709 | அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு: **சிறி நதியா நகை மாளிகை** 56, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | நவீன டிசைன் நகைகளுக்கு நாடுங்கள்: **சானுயா நகை மாளிகை** 1/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். |

# பதவி வெற்றிடம்

கிளிநொச்சியில் இயங்கிவரும்
வடகிழக்கு கட்டட தொழில்நுட்ப நிறுவனத்தில்
பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு
தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- கணக்காய்வாளர்
- தொழில்நுட்பவியலாளர்
- கணக்குப் பதியுநர்
- களஞ்சியக்காப்பாளர்
- எழுதுநர்
- மேசன் வேலை செய்வோர்
- பட வரைஞர்
- மேற்பார்வையாளர்
- தச்சு வேலை செய்வோர்

**சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்**

பொருத்தமானவர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை 21.02.2003 வெள்ளிக் கிழமைக்கு முன்னர் கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். நேர்முகத்தேர்வு தொடர்பான விபரம் விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி

வடகிழக்கு கட்டட தொழில்நுட்ப நிறுவனம்
திருவையாறு மேற்கு
கிளிநொச்சி.

முகாமையாளர்
வடகிழக்கு கட்டட தொழில்நுட்ப நிறுவனம்

**வடகிழக்கு கட்டட தொழில்நுட்ப நிறுவனம்**
**NORTH EAST CONSTRUCTION & TECHNICAL ORGANIZATION**
கிளிநொச்சி KILINOCHCHI

# ஈராக்கிலுள்ள ஐ.நா. பரிசோதகர்களுக்கு மேலும் கால அவகாசம் வழங்க வேண்டும்!

## பாதுகாப்புச் சபையின் முக்கிய நாடுகள் வலியுறுத்து

நியூயோர்க், பெப்.7

ஈராக்கில் பேரழிவு தரும் ஆயுதங்களைத் தேடிவரும் ஐ.நா. ஆயுதப் பரிசோதகர்களுக்கு மேலும் கால அவகாசம் வழங்கவேண்டும் என்று ஐ.நா. பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு நாடுகள் மூன்று மீண்டும் வலியுறுத்தியுள்ளன. தேவையேற்படின் ஈராக்கில் உள்ள ஐ.நா. பரிசோதகர்களின் எண்ணிக்கையை மும்மடங்காக அதிகரிக்கவேண்டும் என்று பிரான்ஸ் தெரிவித்துள்ளது.

ஈராக் பேரழிவுதரும் ஆயுதங்களான அணு ஆயுதங்களையும், இரசாயன, உயிரியல் ஆயுதங்களையும் தொடர்ந்தும் மறைத்து வைத்திருப்பதாக அமெரிக்க வெளிவிவகாரச் செயலர் கொலின் பவல் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் தெரிவித்ததன் பின்னர் இந்தக் கருத்து வெளியாகியுள்ளது.

நேற்றுமுன்தினம் ஐ.நா பாதுகாப்புச் சபையில் உரையாற்றிய கொலின் பவல் ஈராக்கில் உள்ள பேரழிவு தரும் ஆயுதங்கள் பற்றி உரையாற்றினார். அதற்கான ஆதாரங்கள் என்று அவரே கூறும் சிலவற்றையும் அவர் பாதுகாப்புச் சபையில் சமர்ப்பித்தார்.

ஐ.நா. ஆயுதப் பரிசோதகர்களின் பணியை எவ்வாறு தடுத்து நிறுத்தலாம் அல்லது குழப்பலாம் என்பது குறித்து ஈராக்கிய அதிகாரிகள் பேசியுள்ளார்கள். அவர்களது தகவல் தொடர்புகளை இடைமறித்துக் கேட்டதில் இது தெரியவந்துள்ளது. அதற்கான ஆதாரங்கள் எம்மிடம் உள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.


ஐ.நாவில் கொலின் பவல் உரை

ரொக்கெட் போன்ற ஆயுதங்கள் பலவற்றையும் அம்மை நோயைப் பரப்பக்கூடிய இரசாயனப் பொருள்கள் பலவற்றையும் ஈராக் அதிகாரிகள் அவர்களது வீட்டில மறைத்து வைத்திருந்ததாகவும் அவர் கூறினார்.

"சதாம் ஹுசைன் தனது அதிகாரிகளுடன் பேசிய உரையாடல்களை ஒட்டுக்கேட்டதில் இருந்து ஈராக் தயாரித்த அதி நவீன ஆயுதங்கள் பற்றி தெரிந்து கொள்ள முடிந்தது. அந்த உரையாடலின் ஒலிநாடா ஆதாரம் எம்மிடம் உள்ளது" - என்றும் பவல் சொன்னார்.

செயற்கைக் கோள்கள் மூலம் எடுக்கப்பட்ட படங்களையும் அவர் பாதுகாப்புச் சபையில் சமர்ப்பித்தார். அவற்றில் 15இற்கும் மேற்பட்ட ஆயுத குவியல்கள் அடங்கிய சேகரிப்பு மையங்கள் இருப்பதாகவும் -

இவற்றில், நான்கு மையங்களில் மிகக் கொடிய இரசாயன பொருள்கள் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாகவும் - பவல் சொன்னார்.

அவரது இந்தக் குற்றச்சாட்டை ஈராக் மறுத்துள்ளது. ஈராக் மீதான குற்றச்சாட்டுக்கள் யாவும் பவலினால் உருவாக்கப்பட்டவையே என்றார் அதிபர் சதாமின் ஆலோசகர் அமீர்-அல்-சட்தி.

ஆனால், இந்த விடயத்தில் அமெரிக்காவின் கருத்துக்கு பாதுகாப்புச் சபையில் பெருமளவு ஆதரவு இல்லை. அதன் நிலைப்பாட்டை பிரிட்டனும் ஸ்பெயின் மற்றும் பல்கேரியாவுமே ஆதரிக்கின்றன. எதிராக பிரான்ஸ், ரஷ்யா, சீனா, ஜேர்மனி, சிரியா ஆகிய நாடுகள் இருக்கின்றன. அங்கோலா, கெமரூன், சிலி, கினியா, மெக்ஸிக்கோ, பாகிஸ்தான் ஆகியவை எந்தப் பக்கம் சாயும் என்று தெரியாத நிலையில் இருக்கின்றன.

ஈராக்குக்கு எதிராக போர் தொடுக்கும் பிரேரணை ஒன்றை பாதுகாப்புச் சபையில் நிறைவேற்ற அமெரிக்காவுக்கு குறைந்தது 9 நாடுகளின் ஆதரவு தேவை. அதுவும் எந்த ஒரு நிரந்தர நாடும் தனது வீற்றோ அதிகாரத்தை பாவிக்காத நிலையில் அந்த ஆதரவை அமெரிக்கா நிரூபிக்க வேண்டும். (ம)

# வைகோவை பெர்னாண்டஸ் சிறையில் சந்திப்பார்

பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவை மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ஜோர்ஜ பெர்னாண்டஸ் மீண்டும் நாளை சிறையில் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

இந்தத் தகவலை ம.தி.மு.க. அரசியல் ஆலோசனைக் குழு உறுப்பினர் என்.சுப்பிரமணியம் வேலூரில் செய்தியாளர்களிடம் பேசும் போது தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசினார் என்று கூறி ஜெயலலிதா அரசு வைகோவை பொடா சட்டத்தின் கீழ் இரு மாதங்களுக்கு முன்னர் சிறையில் அடைத்தது. சிறையில் அடைக்கப்பட்ட சில நாள்களில் அவரை பெர்னாண்டஸ் முதலில் ஒரு தடவை சந்தித்துப் பேசியிருந்தார். இப்போது அவர் வைகோவை சிறையில் சந்திக்க இருப்பது இரண்டாவது முறையாகும்.

என்ன நோக்கத்துக்காக அவர் வைகோவை சந்திக்கின்றார் என்று தெரிவிக்கப்படவில்லை. (ம)

# கல்பனாவுக்கு புஷ் உருக்கமாக அஞ்சலி

வாஷிங்ரன்,பெப்.7

கொலம்பியா விண் ஓட விபத்தில் உயிரிழந்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அதிபர் புஷ், இந்திய விண்வெளி வீரர் கல்பனாவைப் புகழ்ந்து உருக்கமாகப் பேசினார்.

ஹூஸ்டன் நகரிலுள்ள ஜோன்சன் விண்வெளி மையத்தில் நடைபெற்ற இந்த சிறப்பு அஞ்சலி நிகழ்ச்சியில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர். அதிபர் புஷ் இதில் 9 நிமிடங்கள் பேசினார்.

இந்தியாவின் கல்பனா சாவ்லா பற்றிக் குறிப்பிட்டு புஷ் உருக்கமாகப் பேசியதாவது:-

நட்சத்திரங்களை எட்டவேண்டும் என்பதே கல்பனாவின் கனவாக இருந்தது. இன்று நமது விண்வெளி வீரர்கள் யாரும் செல்லமுடியாத நீண்ட தூரத்துக்கு அவர் சென்றுவிட்டார். மாணவியாக இந்தியாவில் இருந்து அமெரிக்கா வந்த கல்பனா, இன்று நூற்றுக்கணக்கான மைல்களுக்கு உயரே நட்சத்திரங்களோடு நட்சத்திரமாக கலந்து தனது தாய்நாட்டை அவர் பார்த்துக்கொண்டு இருப்பார். அவருடைய தாய்நாட்டில் கல்பனாவின் நினைவுகள் போற்றப்படுவது போல் தத்து எடுத்துக்கொண்ட அமெரிக்காவிலும் இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது.

- இவ்வாறு புஷ் உணர்ச்சிகரமாகப் பேசினார்.

இஸ்ரேல் நட்டைச் சேர்ந்த இலான் ரமோன் உள்ளிட்ட மற்ற விண்வெளி வீரர்களின் சாதனைகளையும் அவர் பாராட்டினார். தேசப்பற்று மிகுந்தவரான இஸ்ரேல் வீரர் ரமோன், தாய்நாட்டைக் காக்க இருமுறை போரில் குதித்தவர் என்றும் புஷ் புகழாரம் சூட்டினார்.

தனது சாதனையின் உன்னதமான நேரத்தில் அவருக்குப் பிடித்தமான இடத்தில் அவர் நேசித்தவர்களுடன் நம்மை விட்டுப் பிரிந்து சென்றுவிட்டார் என்று ரமோனின் மனைவி ரோனா நெகிழ்ச்சியுடன் கூறினார்.

இந்த நிகழ்ச்சியின்போது, விண்வெளி வீரர்களின் உறவினர்கள் சிலர் கண்ணீர்விட்டு அழுதனர். அவர்களிடம் அதிபர் புஷ் "நீங்கள் இப்போது தனித்து விடப்படவில்லை. உங்களுக்காக ஆண்டவனிடம் நாங்கள் பிரார்த்திக்கின்றோம்" என்று ஆறுதல் கூறினார்.

தனது பேச்சின் இறுதியில், பலியானவர்களின் குழந்தைகளை குறிப்பிட்டு பேசும்போது துக்கத்தால் புஷ்ஷின் குரல் கம்மியது. "தாய் - தந்தையரை இழந்த குழந்தைகளே, அவர்கள் உங்கள்மீது காட்டிய பாசமும் நேசமும் எப்போதும் உங்களுடன் இருக்கும். உங்கள் வாழ்நாளில் அவர்களை நினைத்து பெருமைப்பட்டுக் கொள்ளலாம்" என்று நாதழுதழுக்கக் கூறினார்.

நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக தலைக்கு மேலே மொத்தமாக சீறிப் பாய்ந்த ஜெட் விமானங்கள் ஒன்றை விட்டு மற்றொன்று பிரிந்து உயர உயர பறந்து மறைந்த காட்சி, பலியான விண்வெளி வீரர்களை நினைவூட்டுவதாக அமைந்திருந்தது. இதைப் பார்த்ததும் குறிப்பாக அந்த விண்வெளி வீரர்களுக்குப் பயிற்சி அளித்தவர்களும் நண்பர்களும் துயரம் தாங்காமல் விம்மி விம்மி அழுதனர்.(ம)

# யுகோஸ்லாவியா மறைந்து புதிய நாடு உதயம்

பெல்கிரேட்,பெப்.7

உலக வரைபடத்தில் இனி யுகோஸ்லாவியா என்றொரு நாடு இருக்காது. அது இருந்த இடத்தில் செர்பியா - மான்டெக் நெக்ரோ என்ற புதிய நாடு ஒன்று உருவாகியுள்ளது.

ஐரோப்பாவில் 1918ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதலாம் திகதி உருவான நாடு யுகோஸ்லாவியா.

செர்பியர், குரோஷியர், ஸ்லோவேனியர் இன மக்களுக்காக இருந்த தனித்தனி நாடுகள் ஒன்றாக இணைக்கப்பட்டு யுகோஸ்லாவியா உருவாக்கப்பட்டது.

2ஆவது உலகப் போருக்குப் பிறகு, அதிபர் டிட்டோ தலைமையில யூகோஸ்லாவியா கமியூனிஸ்ட் நாடானது. அவர் 40 ஆண்டுகள் நாட்டை ஆண்டார்.

ரஷ்யாவில் கமியூனிஸ்டு ஆட்சி கவிழ்க்கப்பட்டதும் பொஸ்னியா, குரோஷியா, மெசிடோனியா, ஸ்லோவாகியா, செர்பியா, மான்டெனக்ரோ எனப் பல நாடுகளாக யுகோஸ்லாவியா சிதறியது.

1992ஆம் ஆண்டு செர்பியாவும், மான்டெனக்ரோவும் சேர்ந்து யுகோஸ்லாவியா கூட்டமைப்பை உருவாக்கின. யுகோஸ்லாவியா அதிபர் மிலோசெவிக் ஆட்சிக் காலத்தில் மான்டெனக்ரோ தனியாகப் பிரிந்து செயறபடத் தொடங்கியது.

இப்போது இந்த இரு நாடுகளும் சேர்ந்து புதிய நாட்டை உருவாக்க சம்மதித்துள்ளன. இதற்காகக் கடந்த 9 மாதங்களாகப் பேச்சு நடந்தது.

யுகோஸ்லாவியா நாடாளுமன்றத்தில் அதைக் கலைக்கும் தீர்மானம் கொண்டுவரப்பட்டு அதன்மீது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

யுகோஸ்லாவியாவைக் கலைப்பதற்கு ஆதரவாக 84 வாக்குகளும், எதிராக 31 வாக்குகளும் கிடைத்தன. இதன்மூலம் 1992ஆம் ஆண்டு அரசியல் சட்டம் செல்லுபடியற்ற தாக்கப்பட்டது.

புதிய மத்திய சட்டசபை சில வாரங்களில் அமைக்கப்பட இருக்கிறது. அதுவரை நாடாளுமன்றம் தற்காலிகமாகப் பொறுப்பை வகிக்கும்.

செர்பியா - மான்டெனக்ரோ என்ற புதிய நாட்டுக்கு அனுமதி அளிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. புதிய அரசியல் சட்டமும் நிறைவேற்றப்பட்டது.

புதிய அரசியல் சட்டம் 2 நாடுகளுக்கும் சுயாட்சி உரிமையையும், 3 ஆண்டுகளுக்குப் பிறகு பிரிந்து செல்லவிரும்பினால் அதற்காக வாக்கெடுப்பு நடத்த உரிமையையும் அளித்துள்ளது.

புதிய நாட்டின் அதிபர் விரைவில் நாடாளுமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்படுவார். (ம)

# செயற்கைக் கோளுக்கு கல்பனாவின் பெயர்

## இந்தியப் பிரதமர் வாஜ்பாய் அறிவிப்பு

கடந்த சனியன்று வெடித்துச் சிதறிய கொலம்பியா விண் ஓடத்தில் இருந்து உயிரிழந்த இந்தியரான கல்பனா சாவ்லாவின் பெயர் இந்திய வானிலை செயற்கைக் கோள் ஒன்றுக்குச் சூட்டப்படும்.

- இவ்வாறு தெரிவித்தார் இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய். புதுடில்லி நாடாளுமன்ற வளாகத்தில் நடந்த கல்பனாவின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசியபோதே வாஜ்பாய் அதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த ஆண்டு செப்ரெம்பர் 2002 ஆம் ஆண்டு இந்தியா வானில் செலுத்திய 'மெட்சாட்' செயற்கைக் கோள் இனிமேல் 'கல்பனா -1' என்று அழைக்கப்படும். இதே வரிசையில் இனி அனுப்பப்படும் மெட்சாட் செயற்கைக் கோள் அனைத்தும் கல்பனாவின் பெயராலேயே அழைக்கப்படும்.

கல்பனாவும் அவருடன் சென்ற ஏனைய 6 பேரும் உயிரிழந்த பெப்ரவரி முதலாம் திகதி அவர்களது நினைவு தினமாக ஒவ்வொரு ஆண்டும் அனுஷ்டிக்கப்படும்.

செவ்வாய்க் கிரகத்தில் போய் இறங்க வேண்டும் என்ற கல்பனாவின் கனவு நனவாகவில்லை. ஆனால், அவரது இந்தக் கனவை நமது இளைஞர்கள் என்றாவது ஒரு நாள் நிறைவேற்றுவார்கள். - இப்படி வாஜ்பாய் தெரிவித்தார். (ம)


கல்பனா சாவ்லாவின் உருவப் படத்திற்கு அஞ்சலி செலுத்தும் இந்தியப் பிரதமர் வாஜ்பாய்.

# ஹொங்கொங் செல்ல இப்படியும் ஒரு வழி



ஹொங்கொங்,பெப்.7

சீனாவின் வளமான தனி நிர்வாகப் பிரதேசம் ஹொங்கொங். கமியூனிஸ்ட் சீனாவின் கட்டுப்பாட்டிலுள்ள இங்கே அதிகமாக சம்பாதித்து சொந்த ஊருக்கு பணம் அனுப்ப முடியும் என்பதால் பல ஆசிய நாடுகளில் உள்ளவர்கள் குடியேற ஆசைப்படுகின்றார்கள்.

இதனால், அவர்கள் சீனாவுக்குச் சுற்றுலா பயணிகளுக்கான விசாவில் சென்று, அங்கிருந்து தரகர்கள்மூலம் ஹொங்கொங் செல்கிறார்கள். இதற்கான தரகர்கள் ஹொங்கொங் டொலர் 1000 ரூபா பெற்றுக்கொண்டு அவர்களை துளியான சூட்கேஸ் பெட்டியில் அடைத்து தங்களுடன் எடுத்துக்கொண்டு ஹொங்கொங் சென்று, அங்கு அவர்களை விட்டுவிட்டு திரும்புகிறார்கள்.

வியட்னாம், கம்போடியா, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் இப்படி திருட்டுத்தனமாக ஹொங்கொங்கில் குடியேறுகிறார்கள். (ம)

# பொலிகண்டி கந்தவனம் அருள்மிகு ஸ்ரீ

## ஜீர்ணோர்த்தாரண அஷ்டபந்தன புனரா

# மஹா கும்பாபிஷே

## தை மாதம் 24ஆம் நாள், இன்று (07.02.2003) வெ


**இந்திரா கபே**
பிரதான வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

**திசா ஸ்ரோர்ஸ்**
பிரதான வீதி, நெல்லியடி,
கரவெட்டி.

**ஹப்பி ரெக்ஸ்ரைல்ஸ்**
பிரதான வீதி,
நெல்லியடி, கரவெட்டி.
தொலைபேசி: 021 2263287

**நடனமுருகன் மருந்தகம்**
பிரதான வீதி, நெல்லியடி,
கரவெட்டி.

**சாயி மெடிக்கல்**
ம.மகா வித்தியாலயம் வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.

**ஜமுனா ஸ்ரோர்ஸ்**
பிரதான வீதி, நெல்லியடி,
கரவெட்டி.
தொலைபேசி: 021 2263217

**N.S.R.வெல்டிங்**
பிரதான வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.

**விண்மீன் அங்காடி**
பிரதான வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.

**சுபாஸ் பேக்கரி**
பிரதான வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.

**அம்சனா**
பிரதான வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.

**சுதா இரும்பகம்**
பிரதான வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.

**தமிழ் பூங்கா அச்சகம்**
பிரதான வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.


### பரம்பரை ஆதீனகர்த்தரின் ஆசிச்செய்தி

பொலிகண்டி கந்தவனம் ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி மகா கும்பாபிஷேகம் இன்று நடைபெறுகிறது. சிக்கலில் விரலிழந்து எட்டுக் குடியில் கையிழந்து, எண்கண்ணில் கண்ணிழந்த சிற்பியே கந்தவனத்தில் ஆறுமுக அழகனாய் வீற்றிருந்து அருள்பாலிக்கும் "கல்யாண வேலனை" வணங்கி அருள் பெற்றான். இந்த ஒரே சிற்பி வடித்த ஒரே திருவுருவங்களை வேறெங்கும் பார்க்கமுடியாது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கே அமையப்பெற்ற கந்தவனப் பெரும்பதியில் இந்த அழகன் முருகனுக்கு தைத்திங்கள் 24ஆவது நாள் இன்று (07.02.2003) வெள்ளிக்கிழமை சிறப்பாகப் புனரமைக்கப் பெற்ற இத்திருத்தலத்தில் மகா கும்பாபிஷேகம் நிகழ்கின்றது. இத்தலம் பல சிறப்புகளும் புதுமையும் வாய்ந்ததும் அருணகிரிநாதரால் திருப்புகழ் பாடப்பெற்றதும் உடுப்பிட்டி சிவசம்புப் புலவர், நாவலியூர் சோமசுந்தரப் புலவர் முதலிய பெரியோர்களால் அருட்பாக்கள் பாடப்பெற்றதுமான சிறப்புடையது. இப்பதியில் அருள்பாலிக்கும் ஆறுமுகநாயினார் அழகொழுகும் அதிசிறப்புடையவர். அதிலும் காலஞ்சென்ற ஆதீனகர்த்தர் திரு.திக்கம் செல்லையாபிள்ளையவர்களால் இத்தலத்திலேயே சிறந்த சிற்பிகளைக்கொண்டு வடிப்பிக்கப் பெற்றவர். திருப்பணிச் சபையினர், அடியவர்கள் எல்லோரினதும் பேருதவியைக் கொண்டு நிகழும் இக்குடமுழுக்கைத் தரிசித்து கந்தவனத்து கல்யாண வேலனின் பேரருள் பெற்றுய்யுமாறு அனைவரையுமே வேண்டும்.

பரம்பரை ஆதீனகர்த்தர் செல்வி பா.திக்கம் செல்லையாபிள்ளை

### சர்வதேச இந்துமத குருபீட யாழ்மாவட்ட அமைப்பாளரின் ஆசிச்செய்தி

பொலிகண்டி, கந்தவனக்கடவை கந்தனுக்கு இன்று மகா கும்பாபிஷேகம்.

"மஹா கும்பாபிஷேகம் செய்வதால் கிராமமே தெய்வ சான்னித்தியம் பெறுகின்றது" என்பது ஆகம வாக்கியம்.

மஹா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு ஆலயம் புதுப்பொலிவு கண்டுள்ளது. இக்கிராமமே "இந்திர விழா" போன்று கோலாகலமாகத் திகழ்கின்றது. ஜனங்களின் மனங்களில் சந்தோஷத்தின் பூரிப்பு.

மஹா கும்பாபிஷேகத்தில் கலந்துகொள்ளும் ஒவ்வொருவருமே பாக்கியவான்கள். ஊர் ஜனங்களின் ஒத்துழைப்புடன் ஆலய நிர்வாகத்தினர் முன்னெடுக்கும் இப்புனித கைங்கரியம் மிகச் சிறப்பாக அமையும்.

இந்தக் கும்பாபிஷேகத்தை பிரதிஷ்டா பிரதம குருவாக இருந்து நடத்திவைக்கின்ற "கிரியா கலாமணி" சிவப்பிரம்மஸ்ரீ சுவைத்தியநாதக் குருக்கள் முருகன் திருவருள் கைவரப்பெற்ற ஆசார சீலர். மிகவும் பக்திபூர்வமாக கிரியைகளைச் செய்பவர்.

சமாதானத்திற்கான அமைதிக்காலத்தில் இப்புனித கைங்கரியம் நிகழ்வது பொருத்தமானது. அதி விரைவிலேயே இப்புண்ணிய தேசத்தில் சாந்தியும் சமாதானமும் நிலவ முருகனது பாதாரவிந்தங்களைப் பணிந்து ஆசிகள் கூறுகின்றோம்.

சிவப்பிரம்மஸ்ரீ சிவ.நித்தியானந்த சிவாச்சாரியர்

### இணைச்செயலரின் வாழ்த்துரை

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற அருள் வாக்கிற்கிணங்க மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முச்சிறப்புக்களையும் தன்னகத்தேகொண்டு "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்ற முதுமொழிக்கிணங்க அலைகடலின் ஓசையோடு வேண்டுவோர் வேண்டுவதை ஈந்தருளும் வெள்ளரித் தோட்டத்தில் தோன்றிய வேலாயுதனாகவும், கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாகவும், கருணாநிதியாகவும், கற்பூரக்கந்தனாகவும், காத்திமாவடி வேலனாகவும், அருணகிரிநாதரால் திருப்புகழ்மாலை பாடப்பட்டவருமாகிய யாழ். வடமராட்சி பொலிகை சண்முகப் பெருமானுக்கு இன்று (07-02-2003) வெள்ளிக்கிழமை ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகப் பெரும் சாந்திவிழா நடைபெறுகின்றது.

இக்கும்பாபிஷேக சாந்தி விழாவில் கலந்துகொள்ளும் அடியவர்க்கும், ஆலயத்தொண்டர்களுக்கும், மக்களுக்கும் எம்பெருமானின் திருவருள் கிடைக்கப் பிரார்த்தித்து எமது நாட்டிற்கும் மக்களுக்கும் சாந்தியும் சமாதானமும் சுபீட்சமும் நிறைந்த வாழ்வும் மலர பிரார்த்தித்து அமைகிறேன்.

சி.சிவபாலசிங்கம் - இணைச்செயலாளர், ஆலய திருப்பணிச்சபை.

### கந்தவனக் கடவை முருகன் திருப்புகழ்

இவ்வாலயத்தின்மீது அருணகிரிநாதர் திருப்புகழ் பாடினார். அத்திருப்புகழ் பின்வருமாறு:-

உறவு சிங்கிகள் காமகாரிகள்
    முறைமை சங்கிகளாசா வேசிகள்
உதடு கன்றிகள் நாணா வீனிகள் தகரோமக
உடைய கொங்கையின் மீதே தாகங்கள்
    பிணைமெனும்படி போய்நீராகிய
உணவை உண்டுடைசேர் கோமாளிகள் கடல் ஞாலத்
உறவு வெஞ்சுபோ லாமா பாவிகள்
    வறுமை தந்திடு பாழ் மூதேவிகள்
அளி நெருங்கிக் ளாசா பாசண மடமாதர்
அழகுயர்ந்த பொய்மாய ஆபிகள்
    கலவியின்பமே ளாவே சோருதல்
அலமந்தடு மாறா தோர்கதி அருள்வாயே
பறவை யென்கிற கூடார் மூவரன்
    முறையிருந்தமர் வானோர் தேரி
பகழி குன்றவி லாலே நீறெழ ஒரு மூவர்
பதவி னைந்து விடாதே தாள்பெற
    அருள்புரிந்த பிரானார் மாபதி
பரவு கந்த சுவாமி கானகம் அதின் மேவும்,
குறவர் தங்கள் பிரானே மாமரம்
    தெறநெறண்டடி வேரோட நிலை
குலைய நெற்றி கொள் வேலே ஏவிய புயவீரா
குயில்கள் அன்றில்கள் கூகூகூவென
    மலர்கள் பொங்கிய தேன்வீழ் காவிசை
குரவர் சுக்கி யோடே கூடிய பெருமாளே.
    [illegible]
    [illegible]



இலங்கை, இலங்காபுரி, இரத்தினதுவீபம், என்றெல்லாம் அழைக்கப்படுகின்ற ஈழத்திலே வடபால் யாழ்மாவட்டத்தில் வடமராட்சியில் பொலிகண்டி என்னும் கிராமத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது. "பொலி" என்பதற்கு சிங்களத்தில் பொருள் [illegible] திராவிடச்சொல்லிலனல் [illegible] உள்ள மணியைப் பொலி என்பது தமிழர்க்கும், [illegible] பூமியை பொலிகண்டி எனல் பொருத்தமான பெயராம்.

கிராமிய மக்களது இப்பெயர் தொடர்பான வேறு விளக்கமும் தரப்படுகின்றது. இங்கு வேளாண்மைத் தொழிலும், மீன்பிடித்தொழிலும் முதன்மைபெற்றுக் காணப்பட்டமையினால் இருவகைத் தொழிலாளர் வழக்கிலுள்ள இருசொற்களும் இணைந்து [பொலி (நெல்) + கண்டி (ஒரு வகை மீன்பிடிக்கருவி) = பொலிகண்டி] பொலிகண்டி ஆயிற்று என்பர்.

இந்த எழிலுறு பொலிகண்டியின் கடலோரத்தில் கந்தவனமாலயம் அமைந்துள்ளது. இவ்வாலயத்தில் இயற்கைச் சூழலாக மருது, நிழல்வாடி, அரசு, இலுப்பை, மா, வேம்பு ஆகிய நிழல்தரு விருட்சங்களைப் பெரிதும் உடையதாகவும் [illegible] பாங்கான [illegible] பெரிதும் உடையதாகவும் இவ்விடம் அமைகின்றது.

#### ஆலய அமைப்பு

இந்தியாவிலிருந்து முருகப்பெருமான் தனது படைகளோடு திருமலைக்காட்டிலிருந்து (வேதாரணியம்) [illegible] தென்னிலங்கை நோக்கிப் புறப்பட்டு கடல்மார்க்கமாக [illegible] வந்து, இறங்கி அங்கிருந்து [illegible] போராக நடந்துவந்து, [illegible] (கந்தவனம்) அடைந்து, இங்கு தங்கி தேவர்கள் வழிபாடு [illegible] ஏற்று, இளைப்பாறி, அவர்களுக்கு ஆசிகள் கூறி, [illegible] ஒன்பதாம் (9ஆம்) [illegible] உள்ளது.

பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரி சுவாமிகள் இவ்வாலயத்திற் பாடிய திருப்புகழில் மிகவும் தெளிவாக கூறியுள்ளார். மேற்குறித்த காரணிகளால் இவ்வாலயத்தின் பழமையையும் தொன்மையையும் திட்டவட்டமாக கூறமுடியமாக உள்ளது.

### கந்தனின் [illegible]

#### கனவிலே காட்சி

வெள்ளரிக் கொல்லை அம்மையார் முருகே [illegible] வெள்ளரிக்கொல்லை வைத்திருந்தார். வெள்ளரிக் கொல்லைக்கு காவலாக [illegible] வந்தார். இராக்காலங்களில் ஒரு பிரகாசமான ஒளி தென்படலாயிற்று. அடிக்கடி [illegible] அந்த ஜோதி [illegible]

ஒருநாள் நித்திரையில் இருந்த இப்பெரியவருக்கு முருகப்பெருமான் கனவில் காட்சி கொடுத்து அசரீரியாக "இவ்விடத்திலே நான் வந்து இருக்கிறேன் என்னை ஆதரிப்பாயாக" என்று கூறினார். திடுக்குற்று கண் விழித்தெழுந்த இப்பெரியவர் அழகிய வெள்ளி வேல் வெள்ளரிக் கொல்லையின் நடுவே காட்சி அளித்ததைக் கண்டார்.

உடனே அப்பெரியவர் ஆனந்தப் பிரவாகங்கொண்டு பக்திப் பரவசத்தால் [illegible] பொழுது விடிந்ததும், தனக்கு நடந்த சம்பவங்களை அயலில் உள்ள மக்களுக்குத் தெரியப்படுத்தினார். மக்களெல்லாம் ஒன்று கூடி பக்தியுடன் முருகப்பெருமானிற்கு ஒரு சிறு குடிலமைத்து வழிபாடாற்றத் தொடங்கினார்கள்.

வெள்ளரிக்கொல்லையின் நடுவே வேல் தோன்றியபடியால் இன்றும் இவ்வாலயப் பெருமானை "வெள்ளரிக் கொல்லை வேலன்" என்று சொல்லிவழங்கக் காணக்கூடியதாக இருக்கின்றது. கந்தர் என்பவரால் வெள்ளரித்தோட்டம் அமைத்து பரிபாலித்தபடியால் இவ்வாலயத்திற்கு கந்தவனம் என்ற பெயர் ஏற்படலாயிற்று. [illegible] கந்தவனமாகியது.

எம்பெருமானுடைய அருட்பிரவாகத்தினாலும் அடியார்களுடைய அருட்பொலிவினாலும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக முருகப்பெருமானுடைய அருட்பிரவாகம் பெருகிவரத்தொடங்கியது. [illegible] இறைவனுடைய திருவருட் பொலிவினாலும் சிறு குடிலாக இருந்த ஆலயத்தை [illegible] அமைத்து வேற்பெருமானை பிரதிஷ்டை செய்து வழிபாடாற்றி இன்றுவரை வந்துள்ளனர்.

#### நெல்லுக்குள் விக்கிரகம்

முல்லைத்தீவு மாவட்டம் குமாரபுரம் என்ற முருகனுடைய ஆலயத்தில் வைத்து பூசித்து வழிபட்டு வந்த கருங்கல்லினால் செதுக்கப்பட்ட வள்ளி, தெய்வானை சமேத ஆறுமுகசுவாமி விக்கிரகம் போர்த்துக்கேயர் காலத்தில் இருந்து அந்நியர்களால் அழிக்கப்பட்டபொழுது [illegible] நெல்லு வியாபாரம் செய்வதற்காக வடமராட்சி பொலிகண்டி கிராமத்தில் இருந்து வன்னிக்கு சென்ற மக்கள் [illegible] வள்ளி, தெய்வயானை சமேத ஆறுமுகசுவாமி விக்கிரகம் இருக்கக்கண்டனர். முருகப் பெருமான் கந்தவனத்திற்கு [illegible] கொண்டார் போலும் அவரருளால் நெல் வியாபாரிகள் இரகசியமாக அவ்விக்கிரகத்தை பொதிகளோடு பொதிகளாகக் கட்டி [illegible] ஏற்றிக்கொண்டு வந்து வடமராட்சி கிழக்கிலுள்ள [illegible] இரகசியமாக. பின் அவ்விக்கிரகத்தை தான்தோன்றியாகத் [illegible] கந்தவனக் கடவைக்குக் கொண்டுவந்தனர். இவ்விக்கிரகத்தை [illegible] மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்து [illegible] வேல் [illegible] பிரதிஷ்டை செய்தனர்.

#### கல்யாண வேலவர்

எட்டுக்குடி, எண்கண், சிக்கல் போன்ற இடங்களில் [illegible] விக்கிரகங்களைச் செய்த [illegible] புகழ் பெற்ற சிற்பியினால் இவ்விக்கிரகம் முருகப்பெருமானின் அருளுடன் செதுக்கப்பட்ட [illegible] இவ்விக்கிரகம் பெட்டியிலே வைக்கப்பட்டு இந்தியாவிலிருந்து கடலிலே விடப்பட்டு மிதந்து வந்து, முல்லைத்தீவிலே கரை தட்டியபோது [illegible] அது [illegible] வழிபாட்டு வந்தது.


**கணேசன் ஹாட்வெயர்**
பிரதான வீதி,
நெல்லியடி,
கரவெட்டி,
தொலைபேசி : 021 - 2263290

**கீறோ சிறப்பு பல்பொருள் அங்காடி**
பிரதான வீதி, நெல்லியடி,
கரவெட்டி,
தொலைபேசி : 021 - 2263235

## யாழ்ப்பாண - மாநகரசபை

**அரியாலைச் சந்தை பகிரங்க ஏலத்தில் குத்தகைக்கு விடுதல் அறிவித்தல்**

மேற்படி மாநகர எல்லைக்குள் உள்ள அரியாலை சந்தையை 15.02.2003 ஆம் திகதி முதல் 31.12.2003 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு நடத்துவதற்காக எதிர்வரும் 14.02.2003 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு மாநகரசபை அலுவலகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விடப்படும். கேள்வியில் சித்திபெறுவோர் அன்றைய தினமே அதன் அரைவாசித் தொகையையும் 20% பெறுமதிசேர் வரியையும் சேர்த்து செலுத்தி உடன்படிக்கை செய்துகொள்ளல் வேண்டும என்பதையும் அறியத்தருகின்றேன்.

ஏலத்தில் பங்குபற்றி கேள்விகளைக் கேட்க விரும்புவோர் பிணைப்பணமாக ரூபா 2,500/= ஐ சபையில் வைப்புச் செய்தல் வேண்டும்.

ஆகக்குறைந்த கேள்வித் தொகை ரூபா 40,000/= ஆகும். மேலதிக விவரங்களை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
2003.02.05 (C/26412)

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தைச் சேர்ந்த யா/173 சுழிபுரம் மத்தி கிராம உத்தியோகத்தர்

### திரு.நா.குமரகுருநாதன் அவர்கள்

கிராம உத்தியோகத்தர் தரம் Iஇற்குப் பதவியுயர்வு அடைந்ததையிட்டு அவரைப் பாராட்டி மேலும் பல பதவி உயர்வுகள் பெற்று அவரின் சேவைகள் வளர்ச்சிபெற இறைவன் அருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.

சுழிபுரம் மேற்கு
கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்,
கலைமகள் சனசமூக நிலையம்,
அரிகர புத்திர ஐய்யனார்
ஆலய பரிபாலன சபை,
குகன் குல சங்கம்.

*சுழிபுரம் மேற்கு,*
*சுழிபுரம்.*
(C/26409)

## INFORMATION TECHNOLOGY PARK

272, Stanley Road, Jaffna, Sri Lanka.

தகவல் தொழில் நுட்பப் பூங்காவின் விசேட பயிற்சி நெறியான Diploma Information Technology (Basic Level) Batch-1 முடிவுற்றது. அக் கற்கைநெறியை பூர்த்தி செய்தவர்களுக்கு அதன் அடுத்த பிரிவானது ஆரம்பிக்கப்பட இருக்கிறது. முன்னர் மேற்படி கற்கைநெறியில் கற்ற மாணவர்கள் ஆரம்பிக்கப்பட இருக்கும கற்கைநெறிக்கான பதிவுகளை மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இந்த வருடத்திற்கான அதன் Basic Level 2ஆவது பிரிவு ஆரம்பிக்கப்பட இருப்பதனால் மாணவர்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

***பதிவுகள் அனைத்தும் எதிர்வரும் 15.02.2003இற்கு முன்னர் மேற்கொள்ளப்படல் வேண்டும்.***

**முக்கிய அறிவித்தல்**

தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இணையசேவையை மீண்டும் ஆரம்பித்திருப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம். அங்கத்தவர்கள் மீண்டும் தாங்களின் பதிவினை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(c-26407) -பணிப்பாளர்.

## RAMCO CEMENT

## ராம்கோ சிமெந்து

தற்பொழுது ராம்கோ சிமெந்து பருத்தித்துறை இறங்கு துறையில் இறக்கப்படுகின்றது. சிமெந்து தேவைப்படுவோர் கீழ்க்கானும் விலாசத்துடன் தொடர்புகொள்ளவும்.

**ராம்கோ சிமெந்து ஏக இறக்குமதியாளர்**

**ஈஸ்வரபக்ஸான் கொம்பனி**

91, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்,
*T.Phone: 021-222 2350*
(14191)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,பெப்.7

சங்கானை நிகரை ஞானவைரவர் ஆலயத்தின் அலங்கார உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது. (எ)

★ ★ ★

குருநகர்,பெப்.7

யாழ். மடம் வீதிக்கு அருகில் அமைந்துள்ள திரு இருதய ஆண்டவர் சிற்றாலயத்தின் வருடாந்த திருவிழா கடந்த 3ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

திருநாள் திருப்பலி எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறும். (ஒ-51)

★ ★ ★

வடமராட்சி,பெப்.7

பருத்துறை புலோலி வடக்கு மருதடி குருமணல் அருள்மிகு கந்த சுவாமி கோவில் பஞ்சகுண்ட பக்ஷ புனராவர்த்தன அஷ்டபந்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.45 மணிமுதல் 9.30 மணிவரையுள்ள சுபவேளையில் நடைபெறும். (எ-173)

★ ★ ★

வடமராட்சி,பெப்.7

பொலிகண்டி கந்தவனம் அருள்மிகு ஸ்ரீசுப்பிரமணிய சுவாமிகோவில் ஜீர்ணோர்த்தாரண அஷ்டபந்தன புனராவர்த்தன நவகுண்ட பக்ஷ உத்தம யாக மகா கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.21 மணிக்கும் 9.54மணிக்கும் இடையில் உள்ள சுபவேளையில் நடைபெறும். (எ-173)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.7

சங்கானை கூடத்து மனோன்மணி அம்பாள் ஆலயமகாகும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிமுதல் நடைபெறவுள்ளது.

முன்னதாக இன்று காலை 5 மணிமுதல் கிரியைகள் நடைபெறும்.

இந்நிகழ்வில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாவட்ட உதவிப் பணிப்பாளர் தி.சிவதெட்சணாமூர்த்தி சிறப்புரை வழங்குவார். (ஒ-9-29)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.7

யாழ்.வண்ணை - கன்னாதிட்டி காளியம்மன் ஆலய வருடாந்த உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்தஉற்சவமும் நடைபெறவுள்ளன. (ஒ-9)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.7

நல்லூர் ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ பால பரமேஸ்வரி அம்பாள் ஆலய (ஸ்ரீ வாலையம்மன்) அலங்கார உற்சவம் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகினறது. எதிர்வரும் 18ஆம் திகதி வரை உற்சவம் நடைபெறும். 16ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ஐ)

## ஈசன் கல்வி நிலையம்

ஆரம்பமாகிவிட்டது

**இரசாயனவியல்**
**A/L 2004**
**PAPER CLASS**

அடிப்படை இரசாயனத்தில் இருந்து அலகு ரீதியாக 1979 - 2002 வரையான அனைத்து வினாக்களுக்குமான வினா விடை வகுப்பு

திரு. சிவத்திரன (B.Sc.)
Mon., Wed.:- 6.00 a.m.
(14202)

## University of Jaffna Sri Lanka

***FACULTY OF GRADUATE STUDIES***

**Post Graduate Diploma in Education Semester - I (Full - Time/Part Time I&II) Examination - 2003**

The above Examination will be commence on 26.02.2003 Candidates could collect the application form at the office of the Dean, Faculty of Graduate Studies. Completed applications should be submitted at the same office on or *before 14th February 2003.* (C/26413)



## பழம்வீதி விநாயகனின் குடநீராட்டு பாங்கான தீர்வினைத் தந்திட்டும்!

மங்கள வாழ்வருளும் பழம்வீதி சித்திவிநாயகருக்கு
மாண்புடன் நடந்திடும் குடநீராட்டு மங்கலம்
எங்களின் வாழ்வினில் ஏற்ற தீர்வினைத் தந்திடட்டும்
ஈழமானிலமெங்கும் சமாதானம் மலர்ந்திடட்டும்
பொங்கிய பகையும் தடையுமிங்கே விலகிடட்டும்
புதுயுகமாக தேசமிங்கு பூத்திடட்டும்
தங்கிடும் அமைதி நிரந்தரமாக நிலைத்திடட்டும்
தமிழரின் விடிவுக்கு விநாயகர் அருள் பெருகிடட்டும்.

**கவியாக்கம்: கவிமாமணி மதுரகவி கரை. எம். பீ. அருளானந்தன்**

கந்தர்மடம் பழம்வீதி விநாயகப்பெருமானின் கும்பாபிஷேகம் இன்று (2003. 02. 07) வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெறுகின்றது. நாட்டில் நல்தோர்தீர்வினைத்தர விநாயகப்பெருமானினை பிரார்த்திப்பவர்கள

**"விநாயகர் பல்பொருள் வாணிபம்"**

*இல 9, பழம்றோட்* (14193) கந்தர்மடம்,யாழ்ப்பாணம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பருத்தித்துறை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த J/404 தும்பளை கிராம உத்தியோகத்தர்

### *திரு. சோமசுந்தரம் வசந்தகுமார்*

அவர்கள் கிராம உத்தியோகத்தர் தரம் I இற்கு பதவி உயர்வு பெற்றுக் கொண்டதையிட்டு, அவரைப் பாராட்டி அவர் மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று, அவரின சேவை வளர்ச்சியுற வாழ்த்துகின்றோம்.

*தும்பளை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம்.*
*தும்பளை தெற்கு சிக்கனகடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம்.*
*தும்பளை தெற்கு திருவள்ளுவர் சனசமூக நிலையம்.*

*தும்பளை தெற்கு,*
*பருத்தித்துறை.*
(14186)

## D.A.M. பட்டதாரிகள் சங்க வைத்தியர்களுக்கான கலந்துரையாடல்

D.A.M. பட்டதாரிகள் சங்க நிர்வாக பொதுச்சபை உறுப்பினாகளுக்கான அவசிய கலந்துரையாடல் நாளை (08.02.2003) சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு

**நடன முருகன் வைத்திய நிலையத்தில்**

***(222, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்)***

நடைபெறவுள்ளது. முக்கய பிரமுகர்களும் கலந்து கொள்ள இருப்பதால் அனைத்து உறுப்பினர்களும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நேற்றைய எமது விளம்பரத்தில் சகல வைத்தியர்களும் எனக் குறிப்பிடப்பட்ட தவறுக்கு வருந்துகின்றோம்.

**சிங்க அரியரத்தினம்**
செயலாளா
(14192)

**செ.பரமசிவம்பிள்ளை**
தலைவர்

## எழுந்திரு! விழித்திரு!

## சுவாமி விவேகானந்தர் கண்காட்சி

இடம்: யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி

இன்று (07.02.2003) வெள்ளிக்கிழமை காலை 10.00 (பு.நேரம்) மணிக்கு அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படும்.

*பாடசாலை மாணவர்கள் யாவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.*

*முக்கிய குறிப்பு:-* ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்சிரமம் மைசூர் (இந்தியா) தயார் செய்த 40 படங்கள் மொத்தச் செலவு ரூபா 16 லட்சம் தமிழ், ஆங்கிலத்தில் விளக்கக் குறிப்புகள் உண்டு.

செயலாளர்
ஸ்ரீ இராமகிருஷ்ணசாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை.
(C/26405)

## துயர் பகிர்கின்றோம்

எமது சங்கத்தின் முன்னாள் தலைவரும் சிரேஷ்ட பத்திரிகையாளருமான திரு. எம்.ரூபனின் அன்புத் தாயாரான கரவெட்டியைச் சேர்ந்த

**கலாபூஷணம், சங்கீதபூஷணம்**


### திருமதி இராசம்மா மரியாம்பிள்ளை

மறைந்த செய்திகேட்டு ஆழ்ந்த கவலை அடைகின்றோம். அன்னாரின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த துயரைப் பகிர்கின்றோம்.

*குமாரசாமி வீதி,*
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.* (சி.26416)

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம்

## 3ஆம் ஆண்டு நினைவு



செல்வன்
**இராசரத்தினப்பத்தர் சுகந்தன்**

மலர்வு 19.09.1975
உதிர்வு 07.02.2000

"என்றென்றும் உன் நினைவுகளுடன்"

நேசம் அழகு நகை
சாவகச்சேரி/
சங்கானை.

*பொற்தொழிலாளர் வீதி,*
*சங்கத்தானை, சாவகச்சேரி.* (14181)

# மக்களை வாழவைக்கும் மருந்துகளின் விலைகள் குறைக்கப்படவேண்டும்

## இறக்குமதி முகவரான ஏ.ஏ.எஸ். அதிகாரி கருத்து

*கேள்வி:* நீங்கள் கடந்து வந்த பாதையைப் பற்றிக் கூறுங்கள்?

*பதில்:* இந்த நிகழ்ச்சிக்கு என்னை அழைத்ததிற்கு நன்றி. நான் குருநாகல் வீரகெட்டியாவ பகுதியைச் சேர்ந்தவன். எங்கள் குடும்பத்தில் ஆறு பேர், எனது தந்தை ஒரு விஷ வைத்தியர். அதேபோல் சிறந்த விவசாயியும் கூட. கல்வியை முடித்த பின்பு தந்தையின் தொழிலை பின்பற்றுவதா இல்லையா என முதலில் தீர்மானிக்க முடியாதிருந்தது. அதன் பின்பு ஆங்கில மருந்து விற்பனையை ஆரம்பித்தேன். முதலில் இத்துறை தொடர்பான அறிவைப் பெற்றேன். 25 ஆண்டுகளுக்கு முன்னர் எனது சொந்த வியாபாரத்தை ஆரம்பித்தேன். மிகுந்த கஷ்டத்துடன் நான் முன்னேறினேன். பல இடையூறுகளைச் சந்தித்தேன். பல பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டன. ஆனால் நான் சளைத்துவிடவில்லை.

1990 ஆம் ஆண்டில் எமது பகுதிக்கு செலான் வங்கி வந்த பின்பு அது எமக்கு பெரும் உதவியாக அமைந்தது. சம்பிரதாய வங்கி செயற்பாடுகளிலிருந்து அவர்கள் வேறுபட்டு செயற்பட்டதால் எமக்குப் பல வழிகளிலும் வசதியாக இருந்தது.

எமது மூலதனப் பிரச்சினை தீர்ந்தது.

*கேள்வி:* தேசிய வங்கி என்ற ரீதியில் எமக்கும் சில கடமைகள் உள்ளன. எமது சேவையை மேலும் திறம்பட வழங்க என்ன செய்யவேண்டும் என்று நினைக்கிறீர்கள்?

*பதில்:* செலான் செயற்திறன் மிக்க வங்கி. ஊழியர்கள் திறமையானவர்கள். இவ்வங்கி எமது பிரதேசத்திற்கு வந்ததினால் எமது கொடுக்கல் வாங்கல்கள் இலகுவாக்கப்பட்டன.

அதேவேளை, கடன் மீதான வட்டி வீதம் குறைக்கப்படுமாயின் அது வர்த்தக சமூகத்திற்கு செய்யும் பெருதவியாக இருக்கும்.

*கேள்வி:* நீங்கள் விற்பனை செய்யும் மருந்துகளின் விலைகள் பிரச்சினையை ஏற்படுத்துவதில்லையா?

*பதில்:* மருந்துகளின் விலை நாளுக்குநாள் அதகரிக்கிறது. அது ஏற்றுக்கொள்ளக்கூடிய உண்மை. ஆனால், இறக்குமதி செய்யப்படும் மருந்துகள் மீதான வரி வீதத்தை அரசாங்கம் குறைக்கவேண்டும். அது மக்களுக்கு செய்யும் சேவையாக இருக்கும். மக்களை வாழச்செய்யும் மருந்துகளின் விலையைக் குறைப்பது அவர்களின் தார்மீகப் பொறுப்பு.

*கேள்வி:* இறக்குமதி செய்யப்படும் மருந்துகள் மீதான வரிவிதிப்பு எவ்வாறு உள்ளது?

*பதில்:* மருந்து மீது வரி விதிப்பு இல்லை என்றே கூறப்படுகின்றது. ஆனால், அவற்றின் விலை மட்டும் நாளுக்குநாள் அதிகரிக்கிறது. அது எப்படி நடக்கிறது என்று தெரியாது. அரசு இதற்கு கண்டிப்பாக நடவடிக்கை எடுத்து மக்களைக் காப்பாற்ற வேண்டும்.

*கேள்வி:* எந்த அடிப்படையில் மருந்து விலை அதிகரிக்கிறது?

*பதில்:* விலை அதிகரிப்பு எந்தக் கட்டுப்பாடும் இன்றி அதிகரிக்கிறது. அதன் அடிப்படையைக் கூறமுடியாது. இதனை நிறுத்துமாறு நானும் பலரிடம் கோரிக்கை விடுத்துள்ளேன்.

*கேள்வி:* உங்களது எதிர்காலத் திட்டங்கள் என்ன?

*பதில்:* மருந்து விற்பனையில் முன்னேறவே விரும்புகிறேன். ஏனெனில் அது மக்களை வாழவைக்கும் ஒரு துறை.

அத்துடன் உல்லாசப் பயணத் துறையிலும் எனது பங்களிப்பை முன்னேற்றும் நோக்கம் உள்ளது.

- இவ்வாறு கூறினார் ஏ.ஏ.எஸ். அதிகாரி.




ரீ.என்.எல் தொலைக்காட்சி 'நேருக்கு நேர்' நிகழ்ச்சியில் ஏ.ஏ.எஸ.அதிகாரியை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்கிரமவும், 113 கம்பனிகளைக் கொண்ட சீலிங்கோ குருப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி காண்கின்றார்கள்.

**வர்த்தக ஸ்பெஷல்**

ரீஎன்.எல்.தொலைக்காட்சியின் வர்த்தக ஸ்பெஷல் - நேருக்கு நேர் நிகழ்ச்சியில் கடந்த 4ஆம் திகதி தோன்றி, தனது தொழில் முன்னேற்றம் பற்றி விளக்கினார் ஏ.ஏ.எஸ்.அதிகாரி.

தந்தையின் வழியில் மருத்துவத்துறையில் மகன் ஈடுபட்டாலும் தந்தை செய்த சுதேச வைத்தியத் துறையை விடுத்து ஆங்கில மருந்து விற்பனையில் ஈடுபடுபவர் ஏ.ஏ.எஸ். அதிகாரி.

குருநாகலை சொந்த இடமாகக் கொண்ட இவர், வெளிநாட்டு மருந்து நிறுவனம் ஒன்றின் முகவராகச் செயற்படுகிறார். மக்களை வாழவைக்கும் மருந்துகளின் விலைகளைக் குறைக்க அரசாங்கம் முன்வரவேண்டும் என்று வலியுறுத்துகிறார் சிலாபம் ஏ.ஜன் சீஸ் நிர்வாக இயக்குநரான அதிகாரி.

ரீ.என்.எஸ்.தொலைக்காட்சியில் அதிகாரியை அறிவிப்பாளர் சமுதிக சமர விக்கிரமவும், 113கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குருப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி கண்டனர்.

செவ்வியை இங்கே படித்துப் பாருங்கள்

# வடக்கு - கிழக்கைவிட தெற்கில் சிறுவர் துஷ்பிரயோகம் அதிகம்!

## மனித உரிமை பயிற்சிப்பட்டறையில் தெரிவிப்பு

வலி.வடக்கு,பெப்.7

வடக்கு - கிழக்கில் சிறுவர் துஷ்பிரயோகம் மிகவும் குறைந்து காணப்படுகின்றது. இதேநேரம் தென்னிலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகம் மிகவும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

தென்னிலங்கையில் காணப்படும் பல குற்றச்செயல்களின் பின்னணியில் படையில் இருந்து தப்பியோடியவர்கள் இருப்பதையும் கண்டுகொள்ளக் கூடியதாக உள்ளது. இத்தகைய செயல்பாடுகளுக்கு கடந்த காலத்தில் இடம்பெற்ற போரும் ஒரு காரணமாக அமைகின்றது.

சமாதானத்திற்கும் ஜனநாயகத்திற்குமான அமைப்பின் செயலாளர் க.சிவகுருநாதன் இவ்வாறு குறிப்பிட்டார்.

யாழ்.மாவட்ட சர்வோதய அமைப்பின் அனுசரணையுடன் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நடத்தப்பட்ட மனித உரிமைகள் சம்பந்தமான பயிற்சிப் பட்டறை அண்மையில் நல்லூர்க் கல்வித் திணைக்களத்திற்கு முன்பாக உள்ள முன்பள்ளிகள் மூலவள நிலையத்தில் இடம்பெற்றது.

இப்பயிற்சிப்பட்டறையில் கலந்துகொண்டு உரையாற்றிய க.சிவகுருநாதன் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று ஏற்பட்டுள்ள இந்தச் சமாதானச் சூழலையும் அமைதியையும் நிலையானதாக அல்லது நீண்டகாலம் நிலைக்கக்கூடிய ஒரு சமாதானமாக மாற்ற வேண்டும். இதற்கு எம் மத்தியில் இருக்கக்கூடிய முரண்பாடுகளை சரியான முறையில் இனம் கண்டு உணர்ந்துகொள்ளவேண்டும்.

ஒருவரின் உரிமையை மற்றவர்கள் மதிக்கவேண்டும். இந்நிலைமை காணப்படுமாக இருந்தால் எம்மத்தியில் உள்ள முரண்பாடுகளைத் தீர்த்து நல்லதொரு முடிவை எட்டக்கூடியதாக இருக்கும்.

தற்போது எந்தவொரு விடயத்திலும் ஒரு குழுமமாக நின்று சிந்திக்கும், செயற்படும் தன்மையே இன்று காணப்படுகின்றது. இதன்மூலம் ஏனையவர்களின் உரிமைகளை மதிக்கின்ற- ஏற்றுக்கொள்கின்ற - தன்மை மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது.

இலங்கை பன்முகப்படுத்திய சமூகங்களைக் கொண்ட ஒரு நாடாகும். இதில் ஒவ்வொருவரும் தத்தமது சமூகத்தின் நன்மைகளை மட்டும் பிரதிபலிக்காது, ஏனைய சமூகத்தினரையும் மதிக்கப் பழகிக்கொள்ளவேண்டும்.

ஏனையவர்களுடைய மதம், மொழி, கலாசாரம், பழக்கவழக்கங்களையும் ஏற்று மதிக்கக்கூடியவர்களாக நாம் ஒவ்வொருவரும் இருக்க வேண்டியது அவசியம் ஆகும். இதில எந்த வகையான பாரபட்சம் காட்டுவதற்கோ அன்றி ஓரம் கட்டுவதற்கோ இடம் தரக்கூடாது.

இதேபோன்று, மாற்றுக் கருத்துக் கொண்டவர்களையும் மதிக்கவேண்டும். இவ்வாறு மனிதர்களை இனம், மதம், மொழி கொள்கைகளுக்கு அப்பால் நின்று மனிதர்களாக மதிக்கக் கூடிய அமைப்புக்களை உருவாக்க வேண்டும்.

கிராம அலுவலர்பிரிவு, பிரதேச செயலாளர்பிரிவு, மாவட்ட மட்டம், மாகாண மட்டம், தேசிய மட்டம் என இத்தகைய அமைப்புக்கள் உருவாக்கப்பட்டு ஏனைய மக்களையும் மதிக்கக் கூடிய சக்திகளைப் பரவலாக உருவாக்கவேண்டும்.

இந்த நாட்டில் தற்போது போர் நிறுத்தம் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில் சிறுபான்மை இன மக்களின் உரிமைகளை நாம் அறிந்து கொள்வதும் புரிந்து கொள்வதும் அதிக பயன்பாட்டை எதிர்காலத்தில் ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும்.

போர் நிறுத்தம் ஏற்படுவதற்கு முன்னர் சிறுபான்மையினர் எவ்வாறு பெரும்பான்மை இன மக்களினால் நோக்கப்பட்டார்கள் என்பதை இந்நாட்டில் உள்ள ஒவ்வொருவரும் உணர்ந்துகொள்ளவேண்டும்; புரிந்து கொள்ளவேண்டும். தற்போது பெரும்பான்மை, சிறுபான்மை இன மக்களிடையே முன்னைய நிலையிலிருந்து ஓரளவுக்கு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் இம் மண்ணில் இடம்பெற்ற கொடிய போர் காரணமாக எத்தனையோ தமிழ், சிங்களப் பெண்கள் விதவைகள் ஆக்கப்பட்டுள்ளார்கள். அதிலும் தமிழ்ச் சமூகத்தைப் பொறுத்தவரை விதவையென்று கூறி ஒதுக்கி வைக்கப்படுவதுடன் அமங்கலமானவர்களாகவும் இத்தகையவர்கள் நோக்கப்படுகின்றார்கள்.

வாழ்வு இழந்த பெண்களுக்கும் இம் மண்ணில் சந்தோஷமாகவும், குடும்பமாகவும் வாழ உரிமை உண்டு. இத்தகைய பெண்களின் மறுவாழ்வுக்கு வேண்டிய நடவடிக்கைகளை சமூகக் கட்டுப்பாட்டுக்கு அப்பால் நின்று நாம் அனைவரும் மேற்கொள்ளவேண்டும்.

இதற்கான மனமாற்றத்தை சமூக மட்டத்தில் நாம் அனைவரும் வாழ்விழந்த பெண்களின் வாழ்வியல் உரிமைக்காகக் கொண்டுவர உழைக்க வேண்டும்.

அபிவிருத்தியை நோக்கி ஒரு நாடு அல்லது சமூகம் செல்ல வேண்டுமாக இருந்தால் அங்கு அமைதியும் ஒரு ஸ்திரத்தன்மையும் காணப்பட வேண்டியது அத்தியாவசியமாகும். இதற்கு இம்மண்ணில் உள்ள சிறுபான்மையினரின் உரிமைகளைப் பேணிப்பாதுகாக்க வேண்டியது இந்நாட்டில் உள்ள ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

இந்நாட்டில் வாழும் சிறுபான்மையினரின் உரிமைகள் தொடர்ச்சியாக பெரும்பான்மையினரால் காலத்திற்குக் காலம் மறுக்கப்பட்டு வந்துள்ளன. காலத்திற்குக் காலம் ஆட்சி செய்த அரசுகள் சிறுபான்மையினருடைய பிரச்சினைகள் உள்நாட்டுப் பிரச்சினையென்று கூறிவந்தன.

ஆனால், உள்நாட்டுப் பிரச்சினை என்று அரசுகள் கூறியபோதிலும் நாடுகள் இப்பிரச்சினையில் ஈடுபட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. உலக நாடுகளின் இந்தத் தலையீட்டுக்குக் காரணமாக அமைந்தது பெரும்பான்மையினர் என்று கூறிக் கொள்பவர்கள் சிறுபான்மையினரின் உரிமைகளை அப்பட்டமாக மீறியுள்ளார்கள் என்றார் அவர்.

யாழ்.மாவட்ட சர்வோதய அமைப்பின் இணைப்பாளர் க.சங்கரப்பிள்ளை இந்நிகழ்வில் உரையாற்றும்போது கூறியதாவது:-

இம்மண்ணில் வாழுகின்ற சிறுபான்மை இனத்தவர்கள் பலதடவைகள் பல்வேறு அரசியல் கட்சிகளினாலும் ஏமாற்றப்பட்டுள்ளனர். ஆனாலும தற்போது அரசுக்கும் புலிகளுக்கும் இடையே ஒரு சமாதானப் பேச்சு இடம்பெற்றுக்கொண்டு இருக்கின்றது.

பல தடவைகள் ஏமாற்றப்பட்ட அனுபவத்தின் வாயிலாக இச்சமாதானப் பேச்சிலும்கூட ஏமாற்றப்படலாமோ என்று தமிழர்கள் அஞ்சுகின்றனர். ஆனால் இப்படி சமாதானம் குழம்பக்கூடிய ஒரு நிலைமை எதிர்காலத்தில் ஏற்படக்கூடாது என்று அவர் தெரிவித்தார்.

(ஒ-86)

### படகுக் கட்டணம் ரூ.10ஆல் குறைப்பு

நெடுந்தீவுக்கும் குறிகாட்டுவானுக்கும் இடையில் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுவரும் நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கத்தின் பயணிகள் படகுக்கான பயணக்கட்டணம் 10ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் புதிய தலைவர் சு.கோபாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் மேற்படி படகுக்கான பயணக்கட்டணமாக 20ரூபா அறவிடப்பட்டு வந்தது. (எ-10)

### துரையப்பா வித்தியாலயம் இடம் மாற்றம்

இடப்பெயர்வின் பின்னர் தற்காலிகமாக கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் இயங்கி வந்த கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம் கடந்த புதன்கிழமை தொடக்கம் பாடசாலையின் நிரந்தரக் கட்டடத்துக்கு அண்மையிலுள்ள ஆனந்தன் வடலி வீதியில் அமைந்துள்ள சாயி சிறுவர் இல்லத்தில் இயங்க ஆரம்பித்துள்ளதாக அதிபர் எம்.மகேந்திரன் அறிவித்துள்ளார். (எ)

### விபத்தில் இருவர் படுகாயம்

விளானில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர்.

விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிளை ஓட்டிச்சென்றவரான, மன்னாரைச் சேர்ந்த மார்க்குப்பிள்ளை நேசரட்ணம் (வயது 52) என்பவரும், பின்னால் அமர்ந்து சென்றவரான தாவடியைச் சேர்ந்த கிருபாகரன் சத்தியசீலன் (வயது 19) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

படுகாயமடைந்தவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (எ-15)

### மெய்வன்மைப் போட்டி

அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தின் வருடாந்த விளையாட்டுப்போட்டி இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு வித்தியாலய அதிபர் கே.சிறீஸ்கந்தராசா தலைமையில் நடைபெறவுள்ளது. தீவகக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜி.வி.இராதாகிருஷ்ணன் இந்தப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (எ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## கல்வி

மணிக்கு 10 ரூபா வீதம் 60 மணித்தியால பகல் இரவு செய்முறை வகுப்புகளில் தனிப்பட்ட கவனிப்பில் தட்டெழுத்து முழுமையாக கற்பிக்கப்படுகிறது. 149(37), சிவன்பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.

(14168)

## தேவை

அமரர் ஆத்மஜோதி முத்தையா எழுதிய முப்பெரும் சித்தர்கள், திருமுறைக்காட்சி ஆகிய நூல்கள் தேவை. தொடர்பு: ஆத்மஜோதி தியான மணிமண்டபம், ஏழாலை.

(14130)

இரு பல்கலைக்கழக மாணவியரைக் கொண்ட ஒரு குடும்பத்திற்கு வளாகத்திற்கு அண்மையில் வீடு வாடகைக்குத் தேவை. தயவுசெய்து தொடர்பு கொள்ளவும் வ.சின்னத்தம்பி, 93, அரசடி றோட், கந்தர்மடம். T.P. 222-2277. 0777-733685. (14180)

## அபூர்வ ஜோதிடம்

சித்தர் பாவித்த தேவமண்டல சிகிச்சையில் தீராத நோய் உடன் குணப்படல், அதிர்ஷ்டபலன் அறிதல சனி, ஞாயிறு 8.30-2.00 p.m சேச் முன்லேன், முதலி கோவிலடி, கொக்குவில் மேற்கு. (14167)

## புத்தகங்கள்

கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல்கள் 1.நாடகம் எழுதுவது எப்படி? 2.யாழ்ப்பாணமா? கொழும்பா? 3.யாழ்ப்பாணம் 4.இலக்கியக் கட்டுரைகள் 5.வீடற்றவன் நாவலின் விளக்கமும் விமர்சனமும் 6.ஒரு காதலின் கதை 7.எங்கள் நாடு 8.இலக்கிய விமர்சனம்.

(14134)

## தவறிவிட்டன

செல்வி பகீரதி சிவசுப்பிரமணியக குருக்கள் என்பவரின் தேசிய அடையாள அட்டையும் (666590317V) ஏனைய ஆவணங்களும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம், கொழும்புத்துறை என்ற விலாசத்தில் ஒப்படைத்துதவவும்.

(14156)

## கோழிக்குஞ்சு விற்பனை

அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. Gampura, Raniket தடுப்பு மருந்துகள் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8.00 மணிக்கு பெற்றுக்கொள்ளலாம் 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (14172)

## உடனடி தேவை

மீசாலை வடக்கில் வசிக்கும் வயதான தமது தாயாரைப் பராமரிக்க, நற்குணமுடைய, வசதிகள் குறைந்த பெண் ஒருவரைப் பிள்ளைகள் தேடுகின்றனர். 35-40வயதிற்கு மேற்பட்ட, பாசமுடன் தாயாரைப் பராமரிக்கக் கூடிய குணம் கொண்டவர்களாக இருக்குமிடத்து அவருக்கு தங்குமிட வசதி, சாப்பாட்டுடன் நாள் ஒன்றுக்கு 75ரூபா முதல் தகுதிக்கேற்ப நல்ல சம்பளம் கொடுக்கப்படும். பிள்ளைகளால் கைவிடப்பட்டவர்கள், கணவனை இழந்தவர்கள் விரும்பப்படுவர்.

தொடர்புகளுக்கு:

Miss M.கேதீஸ்வரி,
வள்ளுவர் அக்கடமி, உரும்பிராய்.
T.P: 222 3813

சி.காளிராசா,
மீசாலை வடக்கு, கொடிகாமம்.
(A.P.C. காரியாலயத்திற்கு அண்மையில் காளிராசா வீடு என்று கேட்கவும்.)

(14126)

## பட்டம் வழங்கி கௌரவிப்பு

ஊரெழு ஸ்ரீ மீனாட்சி அம்மன் தேவஸ்தான வருடாந்த உற்சவதினங்களில் தொடர் சொற்பொழிவு நிகழ்த்திய சிவத்திரு. வ.குமாரசாமி ஐயர் "செந்தமிழ் அரசு" பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இந்துகலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், சிவத்திரு.வ.குமாரசாமி ஐயருக்கு இந்தப் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார். (எ)

## கிராம அலுவலர்கள் 6 பேர் மீள் நியமனம்

தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவில் ஆறு கிராம அலுவலர்கள் மீள்நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

க.தில்லையம்பலம் (கல்வயல்), குணாளன் (கைதடி மத்தி), வேலாயுதபிள்ளை (மந்துவில் கிழக்கு), கணேசன (வரணி இயற்றாலை), அம்பலவாணா (மட்டுவில் வடக்கு), நவரத்தினம் (மட்டுவில் கிழக்கு) ஆகியோரே கடந்த முதலாம் திகதி தொடக்கம் பொறுப்பேற்றுள்ளனர். (ஒ-117)

## பாதீனிய செடிகள் பரவி வருகின்றன

புன்னாலைக் கட்டுவன் - புத்தூர் வீதியில் பாதீனியச் செடிகள் பரவி வளர்ந்துள்ளன. இவை கடந்த காலங்களில அழிக்கப்படாமையினால் தற்போது உயரமாக வளர்ந்துள்ளன. (எ)

## விற்பனையாகின்றன

1. தற்காலப் புவியியல் O/L
2. செய்முறைப் புவியியல் O/L
3. புவிவெளியுருவவியல் - I

ஆக்கியோன்:
த.தியாகராசா
எங்கும் கிடைக்கும்

(14179)

## பொருத்துநர் தேவை (WELDERS)

காஸ், எலக்ரிக் வெல்டிங் வேலை தெரிந்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

காலம்:- நாளை 08.02.2003 காலை 10மணி

E.U.T.
741, கே.கே.எஸ்.றோட்,
யாழ்ப்பாணம்.
(யாழ். இந்துக்கல்லூரி முன்பாக)

(14169)

## திருமண அழைப்பு

ஓம்

பேரன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருடம் தை மாதம் 25ஆம் நாள் நாளை (08.02.2003) சனிக்கிழமை சுக்கிலபட்ச ஸப்தமி திதியும் அஸ்வினி நட்சத்திரமும் சித்தயோகமும் மீனலக்கினமும் கூடிய சுபதினத்தில் முற்பகல் 11.00 மணிமுதல் 12.30 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்



எமது கனிஷ்ட குமாரன்
திருவளர் செல்வன
**சிவசங்கர்**
அவர்களுக்கும்

எமது சிரேஷ்ட குமாரி
திருவளர் செல்வி
**ரோஜநிர்மலா**
அவர்களுக்கும்

திருமணம் செய்ய இறைவன் திருவருள் முன்னிற்க பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அவ்வமயம் சுற்றம் சூழ வருகை தந்து மணமக்களை வாழ்நலம் சூழ என வாழ்த்துமாறு அன்புரிமை தழுவி அழைக்கின்றோம்.

*திருமணம் நடைபெறும் இடம்:* சிட்னி முருகன் கோயில் மண்டபம்
217, கிரேட் வெஸ்ரேன் பெரிய வீதி, மேயிஸ் கில், நியூசவுத் வேல்ஸ் 2145, ஆஸ்திரேலியா.

இவ்வண்ணம் தங்கள் நல்வரவை நாடும்:

திரு.ஆ.சந்தானகிருஷ்ணன்
திருமதி ஸ்ரீரஞ்சனி சந்தானகிருஷ்ணன்
ஆஸ்திரேலியா.

(14081)

இரு வீட்டார் அழைப்பு

திரு.வெ.முத்துக்குமாரசாமி (உதயன் பணிமனை),
திருமதி வசந்தா முத்துக்குமாரசாமி
நிரந்தர முகவரி: முள்ளி வீதி, அரியாலை.
தற்காலிக முகவரி: 158/1, கண்டி வீதி, அரியாலை.

## MASTER NUMEROLOGY

எண்சோதிடக்கலையில் இதுவரை காலமும் நடைமுறையில் இருந்து வந்த ஆங்கில எழுத்துக்களும், அதற்குரிய எண்களிலும் (8) எட்டு எழுத்துக்களுக்கு வழங்கி வந்த எண்களில், பிழைகண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஒலி,ஓசை வழி ஒழுங்கில் திருத்தம் பெற்ற புதிய எண்கள் இன்று நடைமுறையில்

திருத்தம் பெற்ற புதிய எண்கள் இதோ

| | | |
|---|---|---|
| 1. AiJY | 4. DT | 7. SLM |
| 2. BRK | 5. FHNXZ | 8. EP |
| 3. CGQ | 6. UVW | 9. O |

நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் ஆங்கில பெயர்க்கையொப்பம் வழங்கிவரும் செல்லப் பெயர்களை திருத்தம் பெற்ற புதிய எண்களைப் பயன்படுத்திக் கணக்கிட்டுப் பாருங்கள்! எந்த எண்கள் வருகின்றதோ, அந்த எண்களே உங்களை வழிநடத்துகிறது என்பதனை நீங்கள் அறிந்து கொள்வீர்கள.

*உங்கள் வாழ்வின் எண்சோதிட அதிஷ்ட இரகசியங்களை அறிந்துகொள்ள விரும்பின் நேரில் சந்திக்கலாம்.*

சனி-ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களில

நேரில் சந்திக்க முடியாதவர்கள் கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சரியான சுயவிலாசமிடப்பட்ட முத்திரை ஒட்டிய கடித உறையுடன் விபரத்திற்கு கடிதம் எழுதவும்.

MASTER NUMEROLOGIST
C.C.K.SHRIEERAJARAJEASHWAREN
VITHTHANAI LANE, VALVETTITURAI.

(14090)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

*தாய் மடியில்* 03 . 11 . 1916



*இறைவன் அடியில்* 08 . 01 . 2003

### திருமதி சரஸ்வதி மகேசன்

அன்போடு பழகி பண்போடு வாழ்ந்த உங்கள் ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்.

இன்று (07.02.2003) வெள்ளிக்கிழமை நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளிலும் எமது இல்லத்தில் நிகழ்கின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*இல.10, சந்தையடி ஒழுங்கை, மானிப்பாய்.* (14151) - குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

*தோற்றம்* 04 - 06 - 1927



*மறைவு* 08 . 01 . 2003

### அமரர் பிச்சையம்மா தருமலிங்கம்

எமது அன்புத் தாயாரின் மறைவுச் செய்தியறிந்து நேரில் வந்து அஞ்சலி செலுத்தியோருக்கும், ஆறுதல் கூறியோருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று (07.02.2003) வெள்ளிக்கிழமை எமதில்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*முகவரி:*
*30/1, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,*
*சுண்டிக்குளி,*
*யாழ்ப்பாணம்.*

(14176)

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி



04.02.2003 செவ்வாய்க்கிழமை விண்ணகம் எய்திய

### திருமதி சின்னப்பு பிரகாசம்மா

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

(14174) - *உறவினர்.*

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னப்பு பிரகாசம்மா

செபஸ்தியார் வீதி, கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த திருமதி சின்னப்பு பிரகாசம்மா 04.02.2003 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்புவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிமியோன் மற்றும் ஞானஉதயம், அம்பிரட், எட்லினம்மா (ஜேர்மனி), திருச்செல்வம் (ஜேர்மனி), சிறிகரன் (ஜேர்மனி), டெவிற ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (07.02.2003) வெள்ளிக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*செபஸ்தியார் வீதி,*
*கோண்டாவில் வடக்கு.*

(14173)

தகவல்:
குடும்பத்தினர்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

# 11 ஆம் ஆண்டு நினைவுகூரல்



தோற்றம் 25 . 02 . 1943

மறைவு 09 . 02 . 1992

## அமரர் மு.இரத்தினவேலு (சந்தணம்)

திதி: 07.02.2003

பாசத்தின் திருவுருவமாய்
பண்பின் உறைவிடமாய்
எங்களுக்கெல்லாம் அன்பு காட்டி
அரவணைத்த எம் தெய்வமே!
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து
பதினோர் ஆண்டு அல்ல
பல ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவு எங்கள்
நெஞ்சங்களை விட்டு
என்றும் மாறாதையா!

இன்று (07.02.2003) வெள்ளிக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*சேச் லேன்,*
*சுழாவடி,*
*ஆனைக்கோட்டை.*

நினைவு கூரல்
பிறேம் நகை மாடம்
தங்க நகை வியாபாரம்
(22கரட் தங்க நகைகள் செய்து கொடுப்ப தற்கு தலைசிறந்த ஸ்தாபனம்)
*யாழ். வீதி, மானிப்பாய்* மகன்: பிறேமகுமார்

(14178)

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமகன், மருமகள்,
பேர்த்தி, பேரன்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



## திருமதி நடராஜா வள்ளியம்மாள்

மண்ணுலகில் 01.08.1915

விண்ணுலகில் 10.01.2003

எங்கள் அன்புத் தாயின் மறைவுச் செய்தி கேட்டு உடன் ஆறுதல் தந்து உதவிகள் செய்தோருக்கும் அனுதாபச் செய்திகள் தெரிவித்தோருக்கும் இறுதிக்கிரியைகளில் உதவி புரிந்தோருக்கும் நன்றி தெரிவிப்பதோடு, எதிர்வரும் (2003.02.09) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

பிள்ளைகள்:
1.ந.சிவரட்ணம் - *முகாமையாளர் 2ஆம் கிளை, இலங்கைவங்கி, யாழ்ப்பாணம்.*
2.ந.அரியரட்ணம் - *அதிபர், யா/வல்வை சிதம்பரக்கல்லூரி.*
3.ந.யோகரட்ணம் - (AFRO ASIAN MARKET) LEVER KUSSEN GERMANY
4.*திருமதி த.தங்கேஸ்வரி-அம்மாள்,ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை.*
5.ந.குணரட்ணம் - திருச்சி *(இந்தியா)*
6.ந.இராசரட்ணம் (வடிவேல்) *(டென்மார்க்)*

*"யோகரத்தினம் ஸ்ரோர்ஸ்"*
*ஊரிக்காடு,*
*வல்வெட்டித்துறை.* (சி.26391)

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

07.02.2003




மானிப்பாய் வீதி, மருதனார்மடத்தைச் சேர்ந்த
திரு.திருமதி இராஜேந்திரன் - சுபாஷினி
தம்பதிகளின் செல்வப் புதல்வன்

## ஜனாங்கனன்

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (07.02.2003) வெள்ளிக் கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, சித்தப்பா, ஆசைமாமா, ஹொலண்டில் வசிக்கும் மாமா, அத்தை, சகான மச்சாள், சஜீவ் அத்தான், துர்க்கா மச்சாள், பிரான்ஸில் வசிக்கும் பெரியமாமா, அத்தை, அன்ரா, நிருபன் அத்தான், நிவேதன் அத்தான், நிருத்திகா மச்சாள், ஜேர்மனியில் வசிக்கும் சின்னமாமா, அத்தை, கஜீவன் அத்தான், கஜாவன் அத்தான், பூட்டிமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோர் உடுவில் ஸ்ரீ மீனாட்சி அம்மன் அருளுடன் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்க என்று வாழ்த்துகின்றனர்.

*4ஆம் ஒழுங்கை,*
*மானிப்பாய் வீதி,*
*மருதனார்மடம்.*

(14136)

அன்புடன்
அப்பப்பா.

# கண்ணீர் அஞ்சலி

எமது சபையின் தலைவர்
திரு.சுடர் இ.மகேந்திரன் அவர்களின் பாசமிகு தாயார்

## திருமதி குழந்தைநாச்சன் இராஜதுங்கம்

அவர்கள் மரணமான செய்தி அறிந்து சபையினர் துயரடைவதுடன், அன்னாரின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த துயரத்தையும் தெரிவிக்கின்றோம். ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*66, கல்லூரி வீதி,*
*நீராவியடி, யாழ்ப்பாணம்.* (14171) சைவ பரிபாலன சபை.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 07 - 01 - 1929

மறைவு 20 - 01 - 2003

பண்ணாகம்

## அமரர் சின்னத்தம்பி வெற்றிவேலு

(சங்கானை ப.நோ.கூ.சங்க கிளை முகாமையாளர்)

திதி: 07.02.2003

*எங்களை இப்புவியில் ஏற்றமுற வைத்த அப்பு!*
*ஆண்டொன்று சென்றிடினும் மறப்போமோ உங்கள் நினைவை?*
*ஆலடியான் அரவணைப்பில் அப்பு*
*அமர்ந்திருந்து வாழ அவன் அருளை வேண்டுகின்றோம்!*

*பண்ணாகம்,*
*சுழிபுரம்.*

(14152)

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# 6 ஆவது உலக....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

உட்பட 29ஓட்டங்களைப் பெற்றார். அந்த இனிங்ஸின் அதி கூடிய ஓட்ட எண்ணிக்கை என்ன தெரியுமா? மே.இந்தியா வீசிய உதிரிகளின் எண்ணிக்கைதான். 40 உதிரிகளைக் கொடுத்தனர் மே.இந்தியர்கள்.

தென்னாசிய மைதானங்களில் 166 என்பது ஒரு ஓட்ட இலக்கே அல்ல. மே.இந்தியாவுக்கு சுலபமான வெற்றி என்றுதான் எல்லோரும் நினைத்தனர். ஆனால், கென்ய அணி பந்துவீச்சாளர்கள் மார்ட்டின் சூஜி, அலி ஆகியோர் வெகு சிக்கனமாகப் பந்து வீசினர். அனைத்து வீரர்களும் களத்தடுப்பை அருமையாகச் செய்தனர். மே.இந்தியா ஆரம்ப விக்கெட்டுக்களை வெகு சீக்கிரத்திலேயே இழந்தது. 22 ஓட்டங்களுக்கு 2 விக்கெட் இழப்பு. லாரா 8 ஓட்டங்களுடன் ஆடிக்கொண்டிருந்தார். அப்போது விழுந்தது மே.இந்தியாவுக்கு பேரிடி. அலியின் பந்தில் இக்பாலிடம் பிடி கொடுத்து லாரா வெளியேறினார். அப்போது பிடித்தது தான் அந்த அணிக்கு சனி. பின் விடவேயில்லை. தொடர்ந்து வந்த ஆர்தாடன், சந்தர்போல், அடம்ஸ், ஹூர்ப்பர் ஆகியோர் வந்த வேகத்தில் 'பெவிலியனைப்' பார்க்கத் திரும்பிக்கொண்டிருந்தனர். கென்ய வீரர் மாரிஸ் உடும்பே 10 ஓவர்கள் வீசி, வெறும் 15 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களைக் கொய்தார்.

ரசிகர்கள் வைத்தகண் வாங்காது ஆச்சரியத்தில் வாய்பிளந்து பார்த்துக கொண்டிருக்க கிரிக்கெட் ஜாம்பவான் அணி ஒன்று கத்துக்குட்டி அணியால கபளீகரம் செய்யப்பட்டுக்கொண்டிருந்தது. இறுதியில் யாரும் எதிர்பாராத, மே.இந்தியா கனவிலும் நினைத்திராத அந்த முடிவு பெறப்பட்டது. 35.2 ஓவர்களில் வெறும் 93 ஓட்டங்களுக்குள் சுருண்டது மே.இந்திய அணி. வாழ்நாளில் மறக்கமுடியாத வெற்றியை கென்ய வீரர்கள் பெற்றார்கள். உடும்பே அன்றைய ஆட்டநாயகன்.

மற்றொரு ஆட்டம் தென்னாபிரிக்காவுக்கும் ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கும் இடையில் நடந்தது. விறுவிறுப்பான ஒரு ஆட்டமல்ல இது. ஆனால், தென்னாபிரிக்க வீரர் கெரி கேர்ஸ்ட்டன் சாதனை நிகழ்த்திய ஆட்டம். 159 பந்துகளில் 188 ஓட்டங்களை விளாசிக் குவித்தார் அவர். இன்று வரை உலகக் கிண்ணப் போட்டிகளில் பெறப்பட்ட தனி நபர் அதியுயர் ஓட்ட எண்ணிக்கை அதுதான். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஐக்கிய எமிரேட்ஸ் அணியால் கேர்ஸ்ட்டனின் எண்ணிக்கையைக் கூட எட்ட முடியவில்லை. 152 ஓட்டங்களுக்குள் அந்த அணி சுருண்டது.

இத்தொடரின் மற்றொரு சுவாரஸ்யமான ஆட்டம் இந்திய - இலங்கை அணிகள் இடையே நடந்த அரையிறுதி ஆட்டம். ரசிகர்களால் வரலாற்றில் நிலையான இடத்தைப் பிடித்த ஆட்டம். மார்ச் 13ஆம் திகதி கல்கத்தாவின் ஈடன்கார்டன் மைதானத்தில் பகல் இரவு ஆட்டமாக நடந்தது அது. மக்கள் வெள்ளம் மைதானத்தில் நிரம்பி வழிந்தது. அப்போதுதான் எழுச்சி பெற்று வந்த இலங்கையின் நவீன ஹீரோக்கள் மற்றும் அதிரடி நாயகன் சச்சின் டெண்டுல்கர் என்று இந்திய ரசிகர்களுக்கு ஒரு அற்புதமான ஆட்டம் அன்று காத்திருந்தது.

ஆட்டத்துக்கு முன்னான களநிலை வர அறிக்கையில் மாலைக்குப் பின்னர் ஆடுகளத்தில் பந்துகள் தாறுமாறாகத் திரும்பும் என்று தெரிவிக்கப்பட்டது. எனவே முதலில் துடுப்பெடுத்தாடும் அணிக்கே வெற்றி வாய்ப்பு அதிகம். ஆனால், அட்டிலதெல்லாம் இரண்டாவதாகக் களமிறங்கி இலக்கைத் துரத்துவதில் இலங்கை வீரர்கள் அசகாயசூரர்கள். எனவே எதுவும் நடக்கலாம் என்ற நிலை. நாணயச்சுழற்சிக்காக இந்தியத் தலைவர் அசாருதீனும் இலங்கைத் தலைவர் ரணதுங்கவும் மைதானத்தின் நடுவில் நிற்கின்றனர். வென்றவர் அசாருதீன். யாரும் எதிர்பார்க்காத விதத்தில் இலங்கையை முதலில் ஆடப் பணிக்கின்றார் அவர். இலக்கைத் துரத்துவதில் வல்லவர்களான இலங்கையர்களை இரண்டாவதாக ஆடவிடுவது தப்பு என்று அவர் நினைத்திருக்கக் கூடும். ஆனால் அதுவே தமக்கு விலலங்கமானதாக அமையும் என்று அவர் கருதியிருக்க நியாயமில்லை.

ஆனாலும், அசாருதீன் எதிர்பார்ப்பிற்கமைய ஆரம்பத்தில் தடுமாறியது இலங்கை. மிக மோசமான ஆரம்பம். ஸ்ரீநாத்தின் முதல் ஓவரிலேயே அதிரடி ஜோடியான ஜெயசூரியவும் களுவிதாரணவும் 'பெவிலியன்' திரும்புகின்றனர். ஓட்டங்கள் ஆக ஒன்று மட்டுமே. 1 ஓட்டத்துக்கு 2 விக்கெட் இழப்பு. ஆனால், இலங்கை பயந்து விடவில்லை. தொடர்ந்து வந்த அரவிந்த டி சில்வா எதற்கும் கவலைப்படாமல் வந்தவேகத்தில் பந்துகளை விளாசினார். தொடர்ச்சியான பௌண்டரிகள் சில பறந்தன. எண்ணிக்கை 35க்குத் தாவியது. இப்போது குருசிங்கவின் விக்கெட்டை மீண்டும் ஸ்ரீநாத் சரிக்கின்றார். வந்தவர் மஹாநாம. டி சில்வாவுடன் இணைந்து ஓட்டங்களைக் குவித்தார். டி சில்வா நிதானமாக அதேநேரம் அதிரடியாகவும் ஆடினார். 32 பந்துகளில் 11 பௌண்டரிகள் சகிதம் அரை சதத்தை எட்டினார் அவர். பின்னரும் 3 பௌண்டரிகளை விளாசினார். 44 பந்துகளில் 66 ஓட்டங்களைக் குவித்தார். கும்ளேயின் பந்தில் 'கிளீன் போல்ட்' ஆனார். அப்போதும் இலங்கையின் நிலை தடுமாற்றமாகத்தான் இருந்தது. 85 ஓட்டங்களுக்குள் 4 விக்கெட்டுக்களைக் காவு கொடுத்தது அது. ஆனால், மஹாநாம (58), ரணதுங்க (35), திலகரத்ன (32), சமிந்த வாஸ் (23) என்று ஒவ்வொருவரும் அணியைத் தூக்கி நிறுத்தினர். இலங்கை 251 ஓட்டங்களைப் பெற்றது. இலங்கைக்கு வீசப்பட்ட இறுதி ஓவர்களின் போதே பந்து களத்தில் விழுந்து தன் இஷ்டத்துக்குத் திரும்ப ஆரம்பித்திருந்தது.

பதிலுக்கு களமிறங்கியது இந்தியா. ஆரம்பத்திலேயே சித்துவை 3 ஓட்டங்களுடன் 'பெவ்லியனு'க்குத் திருப்பினார் வாஸ். அவருக்குப் பதிலாக வந்த மஞ்ரேகர் டெண்டுல்கருடன் இணைந்து நிதானமாக ஆடஆரம்பித்தார். அவர் ஒற்றைகளாகப் பொறுக்கிக்கொண்டிருக்க டெண்டுல்கர் இடையிடையே பௌண்டரிகளைச் செலுத்தினார். அணியின் எண்ணிக்கை 90ஐ எட்டியது. அப்போது 65 ஓட்டங்களுடன் ஆடிக்கொண்டிருந்தார் டெண்டுல்கர். பந்து வீச வந்தவர் ஜெயசூரிய. உயரே எழுந்து வீழ்ந்து வந்த பந்தை முன்னே வந்து 'ஸ்வீப்' செய்ய முயன்றார் டெண்டுல்கர். நிலை தடுமாறிவிட்டது. அவரைத் தாண்டி இடது திசையில் வெளியேறிய பந்தை பாய்ந்து கௌவிய களு அருமையாக 'ஸ்டொம்ஸ்' செய்தார். டெண்டுல்கர் அவுட்.

தொடர்ந்து நடந்ததை இந்திய அணியால் ஜீரணிக்க முடியவில்லை என்றால் ரசிகர்களால் அது குறித்து சிந்திக்கவே முடியவில்லை. ஜெயசூரியவின் சாதாரண பந்துகளே 'லெக ஸ்டொம்'முக்கு வெளியே வீழ்ந்து கன்னா பின்னாவென்று திரும்பி துடுப்பாளர்களை வலது புறத்தில் கடந்து சென்றுகொண்டிருந்தது. என்ன நடக்கின்றது என்று இந்தியர்கள் உணரு முன்னரே ஜடேஜா, மொங்கியா, சூர், ஸ்ரீநாத் என்று அடுத்தடுத்து விக்கெட்டுக்களை பறிகொடுத்தது இந்தியா. பெறப்பட்டதோ மேலதிகமாக ஒரு 20 ஓட்டங்கள் மட்டுமே. இப்போது களத்தில் நின்றுகொண்டிருப்பவர் காம்ளி. உள்ளே நுழைந்தவர் கும்ளே. அவர் ஒரு பந்தைக் கூட முழுமையாகச் சந்திக்கவில்லை. ஈடன் கார்டன் பற்றி எரிய ஆரம்பித்தது. போத்தல்களும் குப்பைகளும் ரசிகர்கள் மத்தியில் இருந்து மைதானத்தை நோக்கி பறக்க ஆரம்பித்தன. எல்லைக் கோட்டுப் பகுதி குப்பைத் தொட்டி போலானது.

ரசிகர்களின் கோபம் கட்டுமீறிப் போவதைப் பார்த்த ஆட்ட நடுவர் அணியினரை மைதானத்தில் இருந்து அழைத்துச் சென்றார். மீண்டும் ஆட்டம் நடைபெறவேயில்லை. இலங்கை வென்றதாக அறிவிக்கப்பட்டது. அரவிந்த ஆட்ட நாயகன்.

இலங்கை இறுதிப் போட்டிக்குத் தெரிவானது. மறுபுறத்தில் மே.இந்தியத் தீவுகள் அணிக்கு அதிர்ச்சித் தோல்வியைக் கொடுத்து ஆஸ்திரேலியா இறுதிப்போட்டிக்கு தெரிவானது. இரு அணிகளுமே இந்தப் போட்டித் தொடரில் இறுதியில் மோதும் என்று யாரும் எதிர்பார்த்திருக்கவில்லை.

பாகிஸ்தானின் லாகூர் நகரில் இறுதி ஆட்டம் நடந்தது. இரவு பகல ஆட்டம் அது. இதற்கு முன்னர் நடந்த 5 உலகக் கிண்ண இறுதியாட்டங்களிலும் முதலில் துடுப்பெடுத்தாடிய அணியே வென்றது என்ற எழுதப்படாத சாஸ்திரத்தின் பின்னணியில் நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை முதலில் ஆஸ்திரேலியாவை துடுப்பெடுத்தாடப் பணித்தது. களம் ஆடுபாட்டத்துக்கு சாதகமானது. களமிறங்கிய ஆஸி. அணி முதலிலேயே மார்க வோவ்வை இழந்தது. பொண்டிங்கும் டெய்லரும் இணைந்து எண்ணிக்கையை 137க்கு உயர்த்தினர். 27 ஆவது 'ஓவரில் ஆஸியின் எண்ணிக்கை 137. இழந்தது ஒரு விக்கெட் மட்டும். டெய்லர் ஆட்டமிழந்தார். ரணதுங்கவின் அற்புதமான தலைமைத்துவமும் களத்தடுப்புக்கு அவர் வகுத்த வியூகமும் ஆஸி. அணியின ஓட்ட எண்ணிக்கையை கட்டுப்படுத்தின. நட்சத்திரப் பந்துவீச்சாளர் முரளி 10 ஓவர்கள் வீசி 31 ஓட்டங்களை மட்டும் கொடுத்தார். ஒரு விக்கெட்டையும் பறித்தார். ரணதுங்கவின் வியூகம் 25 ஓவர்கள் ஆஸி. அணியை பௌண்ரி எதுவும் அடிக்கவிடாமல் கட்டுப்படுத்தியது. பின்னால் வந்தவர்களில் மைக்கேல் பெவன் மட்டும் 36 ஓட்டங்கள் எடுத்தார். 50 ஓவர்கள் முடிவில் ஆஸி. அணி 7 விக்கெட் இழப்புக்கு 241 ஓட்டங்களைப் பெற்றது.

அப்போது இலங்கை அணி இருந்த '.'.போர்மு'க்கு இது ஒன்றும் பெரிய இலக்கல்ல. இருந்தாலும் களமிறங்கிய இலங்கை அணி தனது அதிரடி ஜோடியை ஆரம்பத்திலேயே இழந்தது. இப்போது வெற்றி சாத்தியமா என்ற கேள்வி எழுந்தது. இலங்கை ரசிகர்களின் இதயத்துடிப்பு லாகூர் வரைக்கும் கேட்டது. களத்தில் குருசிங்கவும் அரவிந்தவும். இருவரும் இணைந்து நிதானமாக அதே நேரம் போதியளவு அதிரடியுடன் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர். 3ஆவது விக்கெட்டுக்காக அவர்கள் 125 ஓட்டங்களைக் குவித்தனர். ஒரு புறத்தில் நின்று நிதானமாக நிலைத்தாடிக்கொண்டிருந்தார் அப்போது தமிழ் ரசிகர்களால் 'கவசவாகனப் பிரிவு' என்று செல்லமாக அழைக்கப்பட்ட அரவிந்த. அவரது அற்புதமான ஆட்டம் இலங்கையின் கனவு நனவாகும் தூரத்தைக் குறைத்துக்கொண்டே வந்தது. 13 பௌண்டரிகளையும் ஒரு சிக்ஸரையும் விளாசிய அரவிந்த 107 ஓட்டங்களைக் குவித்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் நின்றார். 65 ஓட்டங்களில் குருசிங்க ஆட்டமிழந்தார். அவருக்குப் பதிலாகக் களமிறங்கிய ரணதுங்க அதிரடியாக ஆடினார். அவர் 37 பந்துகளில் 4 பௌண்டரிகள், சிக்ஸர் ஒன்று உட்பட 47 ஓட்டங்களை விளாசினார். ஆஸி. அணியின் நட்சத்திர சுழல் பந்துவீச்சாளர் ஷேன் வோர்ன் 10 ஓவர்கள் வீசி 58 ஓட்டங்களை அள்ளிக்கொடுத்தார்.

இலங்கை அணியின் 47 ஆவது ஓவர். உலகின் சிறந்த வேகப் பந்து வீச்சாளர் கிளென் மக்ராத்தின் 9 ஆவது ஓவர் அது. இரண்டாவது பந்து, வேகமாக வந்து ஆக்ரோஷமாக வீசுகின்றார் மக்ராத். தூக்கி அடிக்கப்படுகின்றது. பறந்து பின் விரைந்து சென்ற பந்து எல்லைக்கோட்டைத் தாண்டுகின்றது. தடுப்பதற்கு பெரும் முயற்சிகள் எதுவும் இல்லை.

அவ்வளவுதான்! இலங்கை அணியின் கனவு நனவாகின்றது. மகிழ்ச்சிக் களிப்பில் மைதானத்துக்குள் நுழைந்த அணியின் ஏனையவர்கள் அரவிந்தவைத் தூக்கி வைத்துக் கொண்டாடினர். இலங்கை முதற்றடவையாக கிரிக்கெட் உலகக் கிண்ணத்தை தன் கைகளில் வாங்குகின்றது. கிண்ணத்தை வென்ற மூன்றாவது ஆசிய அணி என்ற பெருமையையும் பெறுகின்றது.

ஆட்டநாயகன் அரவிந்த டி சில்வா, தொடர் நாயகன் சனத் ஜெயசூரிய.

*- கனிமொழி*

## மேற்கிந்திய....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் உள்ளார் என அறிவித்துள்ளனர்.' - இவ்வாறு மேற்கிந்திய கிரிக்கெட் சபையின் தலைவர் வெஸ்லி ஹோல்ஸ் கூறினார். இதை அடுத்து சாமுவேல்ஸை அணியில் சேர்ப்பதற்கு ஐ.சி.சி. அனுமதியை மேற்கிந்திய கிரிக்கெட் சபை கோரியுள்ளது.

காயமடைந்த வீரர்களை மாற்றுவது தொடர்பான விடயங்களுக்கு பொறுப்பான உலகக் கிண்ண ஏற்பாட்டுக்குழு அதிகாரி பிறையன் பாசன் இது தொடர்பாக கூறுகையில் 'மருத்துவ அறிக்கைகளின் படியே இவ்விடயம் கையாளப்பட்டது. மீண்டும் அதே நடைமுறையே பின்பற்றப்படும். அவர்கள் மருத்துவ அறிக்கைகளின் பிரதிகளை எம்மிடம் சமர்ப்பித்தால் போதும். இவ்விடயத்தில் சிக்கல் எதுவும் ஏற்படும் என நான் கருதவில்லை. உலகக் கிண்ணப் போட்டிகளில் சிறந்த வீரர்கள் விளையாடவேண்டும் என்றே அனைவரும் விரும்புகின்றனர்.' - என்றார்.

22வயதான சாமுவேல்ஸ், அண்மையில் இந்தியாவுடனான டெஸ்ட் போட்டியொன்றில் சதம் குவித்ததன் மூலம் பலரின் கவனத்தை தன் மீது ஈர்த்தார். அதன் பின் அவர் ஒரு நாள் போட்டி ஒன்றில் 75 பந்து வீச்சுக்களில் 108 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (மு-5)

## தென்னாபிரிக்கா.....

(3 ஆம் பக்கம் தொடர்ச்சி)

வழங்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட அணிகள் இப்போட்டிகளில் பங்குபற்றுவதன் மூலம் தமது உடன்படிககையை கௌரவிக்க வேண்டும்.

"இங்கு விஜயம் செய்த ஐ.சி.சி. பிரதிநிதிகள் குழுவினர் உலகக் கிண்ணப் போட்டிகளை நடத்துவதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக திருப்தி தெரிவித்தனர்.

"அவர்கள் இறுதியாக விஜயம் செய்தபின் ஸிம்பாப்வேயில் நிலைமை மோசமடையவில்லை."

- இவ்வாறு சின்கோகா கூறினார். ஆனால், ஸிம்பாப்வே எதிர்க்கட்சிகள் உலகக் கிண்ணப் போட்டிகள் நடத்துவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றன.

# மரண அறிவித்தல்கள்

## முத்து தெய்வேந்திரம்

211/21 கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முத்து தெய்வேந்திரம் அவர்கள் நேற்றுமுன்தினம் (05.02.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்து - தெய்வானை தம்பதகளின் அன்பு மகனும் கண்மணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சோதியம்மா மற்றும் கனகம்மா ஆகியோரின் சகோதரரும் தர்மராசா (கொலண்ட்), தனபாலசிங்கம் (வவுனியா), பேரின்பராணி (கனடா), பூபாலசிங்கம் (லண்டன்), அமுதா (நல்லூர்), ஜெயராஜசேகரம் (இந்தியா), குகேந்திரராசா (கொலண்ட்) ஆகியோரின் தந்தையும் சரோஜினிதேவி, றஞ்சினிதேவி, சுபத்திராதேவி, சகுந்தலாதேவி, ராகினிதேவி, சசிரேகா, சரஸ்வதி, செல்வராசா, கனகராசா, சற்குணராசா, நவரட்ணராசா, சந்திரராசா, மகேந்திரராசா, குமுதினி, அருமைநாயகம் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*211/21 கோயில் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.* (14203)

தகவல்:
தெ.சிறீ (பேறாமகன்)

## பாலசுப்பிரமணியக் குருக்கள்

கட்டுவனைப் பிறப்பிடமாகவும் இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியக குருக்கள் (செலவம் ஐயா) 04.02.2003 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குணரத்தினக்குருக்கள் மற்றும் இராசம்மா தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற பஞ்சரத்தினத்தின் கணவரும் பிரேமா (ஜேர்மனி), காலஞ்சென்ற சித்திரா மற்றும் நிர்மலாவதி, அனுஷா (ஜேர்மனி) ஆகியோரின் தந்தையும் விஷயபாலன் (ஜேர்மனி), மோகன், வின்சன் ஆகியோரின் மாமனாரும் செல்வமோகன், ஜெயமோகன், சகலா, ராஜமோகன் (ஜேர்மனி), மொறின், ஜனுசன், பவித்திரன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2003) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப. 10.30 மணியளவில் தகனக்கிரியைக்காக இருபாலை கிழக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கற்பகப் பிள்ளையார் கோயிலடி,*
*இருபாலை.* (14204)

தகவல்:
வி.பிரேமா (மகள்)

## திருமதி நல்லதம்பி தங்கம்மா

கொம்மாந்தறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லதம்பி தங்கம்மா நேற்று (06.02.2003) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான திரவியம், இராசதுரை, இராசரத்தினம், செல்லத்துரை மற்றும் மணிமாலை, பொன்னுத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவபாக்கியம், இராசரத்தினம்மா, சிவானந்தம் (மல்லாவி), சர்வானந்தம், காலஞ்சென்ற சேகரானந்தம் மற்றும் செல்வானந்தம், கிருஷ்ணானந்தம், காலஞ்சென்ற பவானந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற ஜெயகுணரட்ணம் மற்றும் இராசரத்தினம் (வேலணை), அன்னராணி (மல்லாவி), கமலா, புஷ்பராணி, விஜயராணி, மஞ்சுளா ஆகியோரின் மாமியும் தர்ஷினி, சுதர்ஷன், சிலானி, பிரதீபா, பிரஷாந், பிரமதுரா, சுபாஷினி, சிவரூபன், சிவதாசன், மாலதி (சுவிஸ்), வரதராஜ் (ஜேர்மனி), சர்வதனி, சர்பவான், கஜந்தன், வினோதா (சுவிஸ்), பமிலா, நிஷாந், நிமால், நிறோஜ், ரஜீவ், றஜினா, சஞ்சீவ்தாஸ், பவா, காலஞ்சென்ற ரூபன் மற்றும் றூபா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பிரதீபா, பிரவீனா (மல்லாவி), சுலக்ஸன், அபிஷா (சுவிஸ்) ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2003) வெள்ளிககிழமை 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மயிலியதனை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கொம்மாந்தறை,*
*வல்வெட்டித்துறை.* (14206)

தகவல்:
சர்வானந்தம்
(கிளியன் - மகன்)

## கதிரேசு முருகேசு

இடைக்குறிச்சி, வரணியை பிறப்பிடமாகவும் எருவன், கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரேசு முருகேசு 25.01.2003 சனிக்கிழமை குவைத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரேசு - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பத்மாவதியின் அன்புக் கணவரும் பத்மநந்தினி, ஜெயக்குமார் (கனடா), அசோக்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசம்மா, நடராசா (C.T.B. சாரதி யாழ்.), இராசமலர், இராஜேந்திரம் (புகையிரதப் பகுதி, வவுனியா) ஆகியோரின் சகோதரனும் கனகதுரையின் (பிரதேசசபை, சாவகச்சேரி) மாமனாரும் தர்ஷன், தசிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.02.2003) சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொடிகாமம் கட்டைபறித்தான் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பருத்தித்துறை வீதி,*
*எருவன், கொடிகாமம்.* (14194)

தகவல்:
மு.அசோக்குமார் (மகன்)

## திருமதி கணபதிப்பிள்ளை தங்கரத்தினம்

வட்டுக்கிழக்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணபதிப்பிள்ளை தங்கரத்தினம் அவர்கள் நேற்று (06.02.2003) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் (முன்னாள் வர்த்தகர், சங்கானை) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஆ.க.வேலுப்பிள்ளை, கனகம்மா அவர்களின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சங்கரத்தையிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (07.02.2003) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவிததலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோகுலன் ஐஸ்கிறீம்,*
*சங்கரத்தை.* (14207)

தகவல்:
குகராஜன் (பேரமகன்)
வசந்தா (மருமகள்)

# இணுவில் கிருஷ்ணன் ஆலயத்தில் தெய்வங்களின் சிலைகள் திருட்டு!

யாழ்ப்பாணம்,பெப்.7

நள்ளிரவு வேளையில் கிருஷ்ணர் ஆலயத்திற்குள் புகுந்த திருடர்கள் அங்கிருந்த இரண்டு தெய்வங்களின் உருவச்சிலைகளை திருடிச்சென்றுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை இணுவில் கிழக்கிலுள்ள அண்ணமார் கிருஷ்ணர் ஆலயத்தில் இச்சம்பவம் இடம் பெற்றது.

கிருஷ்ணர் ஆலயமூலஸ்தானத்துக்கு முன்பாக அமைந்துள்ள மண்டபத்தின் இரு புறமும் அமைக்கப்பட்டிருந்த பாமாதேவி, ருக்குமணிதேவி விக்கிரகங்களே திருட்டுப்போயுள்ளன.

கருங்கல்லில் செதுக்கப்பட்டிருந்த இந்த இருதெய்வச்சிலைகளும் அவற்றின் இருப்பிடங்களில் இருந்து தகர்த்து எடுத்துச்செல்லப்பட்டிருக்கின்றன.

பாமாதேவி, ருக்குமணிதேவி சமேதராக இருந்து அருள்புரிந்த கிருஷ்ணபரமாத்மா திருடர்களின் பாதகச் செயலால் தனித்துப்போயிருப்பதை கண்டு பக்தர்கள் அதிர்ச்சியும் கவலையும் அடைந்திருக்கின்றார்கள்.

கடந்த முதலாம் திகதி நாவற்குழியில் உள்ள விநாயகர் ஆலயத்தில் 2 லட்சம் ரூபா பெறுமதியான எழுந்தருளி விக்கிரகங்கள் திருட்டுப்போயுள்ளமை தெரிந்ததே.

அண்மைக்காலமாக குடாநாட்டில் உள்ள ஆலயங்களில் விக்கிரகங்கள் திருடப்பட்டு வருவது மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

(ஐ-4)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,பெப்.7

சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை முதல் யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இன்று பிற்பகல் 2.45 மணிமுதல் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரங்கள் வருமாறு:-

**15 வயதுப் பிரிவு**

★ யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம்.

★ வட்டு மத்திய கல்லூரி எதிர் அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம்.

★ விக்ரோறியாக் கல்லூரி எதிர் சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயம்.

★ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் எதிர் பண்ணாகம் மெய கண்டான் மகா வித்தியாலயம்.

**17 வயதுப்பிரிவு**

★ யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்.

(ஓ-5)

✪ ✪ ✪

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 20 ஓவர்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள் நாளையும், நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் காலை 8 மணிமுதல் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்திலும் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்திலும் நடைபெறவுள்ளன.

போட்டியில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் போட்டி தொடர்பான விவரங்கள் பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஓ-10)

## லாராவின் துணையுடன்....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாடிய விதத்தைப் பார்க்கும் போது முன்னைய பலம் அவ்வணிக்கு மீண்டும் வந்துவிட்டதோ என்ற எண்ணத்தை இரசிகர்கள் மத்தியில் ஏற்படுத்தத் தவறவில்லை.

அண்மைக்காலத்தில் இவ்வணி தூள்கிளப்பக்காரணம் அவ்வணியில் இடம்பெற்றுள்ள பெரும்பாலான இளந் துடுப்பாட்டவீரர்களின் அபார ஆட்டம்.

இவ்வணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கும் வேவல் ஹிண்ட்ஸ், கிறிஸ்கைல் ஆகியோர் எத்தகைய பந்துவீச்சுக்களையும் எதிர்கொண்டு ஓட்டங்களை குவிக்கக்கூடியவர்களாக விளங்குகின்றனர். கடந்த சில வருடங்களாக இவ்வணியில் நிரந்தரமான. நிதானமான ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள் இல்லை என்ற பெரும் குறை இருந்து வந்தது. அதனை போக்கும் வகையில் இவ்விருவரும் விளையாடி வருவது அணியின் வெற்றிக்கு மேலும் துணைநிற்கிறது.

இவர்களுக்கு பின்னர் துடுப்பெடுத்தாட களமிறங்கும் ராம்நரேஷ், சர்வான், சந்திரபோல், லாரா, சாமுவேல மற்றும் அணித்தலைவர் ஹூப்பர் ஆகியோர் நிதானமாகத் துடுப்பெடுத்தாடி ஓட்டங்களைக் குவிக்கக்கூடியவர்கள இந்த உலகக்கிண்ண போட்டிகளிலும் இவர்கள், சிறப்பாக விளையாடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அண்மைக்காலமாக நடைபெற்ற ஒருநாள் போட்டிகளில் உடலில் ஏற்பட்ட உபாதைகள் காரணமாக அல்லற்பட்டு வந்த பிரையன் லாரா ஓய்வின்பின் புதுத்தென்புடன் மீண்டும் களமிறங்குவது இவ்வணிக்கு மேலும ஒருபடி கூடுதல் பலத்தை தந்துள்ளது. காரணம் சச்சினைப்போல, மைக்கல் பெவனைப்போல இவரும் தனது அபார ஆட்டத்தின வாயிலாக ஆட்டத்தின் போக்கை தன்னணிக்கு சாதகமாக மாற்றவல்லவர்.

துடுப்பாட்டத்தில் சிறந்த அணியாக விளங்குகின்ற அணி பந்துவீச்சிலும் சளைத்தது அல்ல.

மேர்வின் டிலான், வெஸ்ட்பர்ட் டிரெக்ஸ், கொறிகொலமோர், ஜேர்மைன் லோர்சன், பெட்ரோ கொலின்ஸ் போன்ற வேகப்பந்துவீச்சாளர்களைக் கொண்டது. தென்னாபிரிக்காவில் தற்போது ஆட்டங்கள் நடைபெறவுள்ள பெரும்பாலான மைதானங்கள் வேகப் பந்து வீச்சாளர்களுக்கு சாதகமாக அமைந்துள்ளதாக கணிக்கப்படுவதால இவர்களின் பந்துவீச்சின் மூலம் அணி பல அதிசயிக்கக்கூடிய வெற்றிகளைப் பெற வாய்ப்புள்ளது.

ஏனைய அணிகளோடு ஒப்பிடுகையில் துடுப்பாட்டம். பந்துவீச்சு ஆகியவற்றில் பலம்பொருந்தியதாக அமைந்துள்ளபோதிலும் மேற்கிந்திய அணியின் களத்தடுப்பில் பலவீனம் உடையதாகவே காணப்படுகின்றது.

அநுபவமில்லாது அணியில் இடம் பெற்றுள்ள இளம் வேகப்பந்து வீச்சாளர்கள் உதிரிகளாக அதிகளவு ஓட்டங்களை வழங்குவதும், அநாவசியமான முக்கிய பிடிகளைத் தவறவிடுவதும் இவ்வணியின் மற்றொரு பலவீனமாகும்.

கடந்த வருடத்தில் நடைபெற்ற 23 ஆட்டங்களில் 12 ஆட்டங்களில் வெற்றியும் 9 போட்டிகளில் தோல்வியையும் 2 போட்டிகளில் சமநிலையையும் இந்த அணி பெற்றுள்ளது.

ஆக மொத்தத்தில் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் சிறப்பாக ஆடி வரும் மேற்கிந்திய அணி உலகக் கிண்ணத்தை வெல்லும் வாய்ப்பு குறைவாக காணப்பட்டாலும் 'சுப்பர்சிக்ஸ்' வரை முன்னேறக்கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன. ஆயினும மேற்கிந்திய வீரர்களின் ஆட்டம் இரசிகர்களுக்கு விருந்தாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## தெல்லிமாநகர் பாலர் ஞானோதய சபையின்
## 56 ஆவது ஆண்டு இசை விழாவும் பரிசளிப்பும்

*இடம்* : காசிவிநாயகர் தேவஸ்தான ஸ்ரீ.மு.சிவகடாக்ஷக்குருக்கள் இசையரங்கு

*காலம்* : 07.02.2003, 08.02.2003, 09.02.2003 ஆகிய மூன்று தினங்கள்

**07.02.2003 (வெள்ளி)** நிகழ்வாக மாலை 5.00 மணிக்கு காசிவிநாயகருக்கு விசேட பூசைகள், மாணவர் கூட்டுப்பிரார்த்தனை, மாணவர் நிகழ்ச்சிகள் நடைபெறும்.

**08.02.2003 (சனி)** நிகழ்வாக மாலை 3.00 மணிக்கு நிகழ்வுகள்
*தலைமை:* திரு. அ. பரமநாதன் (முன்னாள் உபஅதிபர்)
*கௌரவ விருந்தினர்:* மாண்புமிகு தி. மகேஸ்வரன் (இந்து கலாசார அமைச்சர்)
சிவஸ்ரீ சே. சிவபாலசர்மா அவர்களின் நீண்டகாலச் சேவையை பாராட்டி கௌரவித்து விருது வழங்கும் வைபவம்
*ஆசியுரை வழங்கிக் கௌரவித்து விருது வழங்குபவர்:* சிவஸ்ரீ சி. கணேசலிங்கக்குருக்கள்
*பாராட்டுரையும், பாராட்டுப்பத்திரம் வாசித்தலும்:* மகாவித்துவான் சிவஸ்ரீ ந. வீரமணிஐயர்
*இன்னிசைக்கச்சேரி:* செல்வி சுபஹரி வெங்கடேஸ்வரசர்மா, செல்வி ஸ்ரீகௌரி வெங்கடேஸ்வரசர்மா

**09.02.2003 (ஞாயிறு)** நிகழ்வாக மாலை 3.00 மணிக்கு
*தலைமை:* திருமதி மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம் (முன்னாள் அதிபர்)
*அருளுரை வழங்கல்:* ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
*வயலின் இசைக்கச்சேரி:*
*வயலின்:* செல்வி மதுரா வரதராஜசர்மா
*மிருதங்கம்:* பிரம்மஸ்ரீ சு. வரதராஜசர்மா
வாழ்வக மாணவர்களின் பண்ணிசை நிகழ்ச்சியும், நாட்டிய நிகழ்ச்சியும்

*பாலர் ஞானோதயசபை,*
*காசிவிநாயகர் தேவஸ்தானம்,*
*தெல்லிப்பழை.*

சி.கணேசலிங்கக்குருக்கள்
தலைவர்.

(சி-26414)

## 31 ஆம் நாள் நினைவலைகளும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 1945 - 03 - 04



மறைவு 2003 - 01 - 08

### திருமதி இராசேஸ்வரி அம்சநாதன்

அன்னாரின் இல்லத்தில் இன்று (07.02.2003) வெள்ளிக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்தியம் மற்றும் மதிய போசனத்திலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நாகம்மாள் வீதி,
உடுவில், சுன்னாகம்.

அ.சுதர்சன்
அ.றொபின்சன்
(குடும்பத்தினர்)

(14198)

## காணவில்லை



படத்தில் காணப்படும் முருகேசு மாணிக்கம் என்பவர் நேற்று யாழ் போதனா வைத்தியசாலையில் இருந்து காலை 8 மணிமுதல் காணாமல் போய்விட்டார். இவர் பற்றிய தகவல் அறிந்தோர் கீழ் கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

மா.குலேந்திரன்
அரசடி வீதி, வடலியடைப்பு
பண்டத்தரிப்பு.
T.P:070-212647.

(14208)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 1934 - 12 - 25



உதிர்வு 2003 - 01 - 06

### திருமதி அன்னபூரணம் கந்தசாமி

அன்னையைப் போல ஒரு தெய்வமில்லை, எங்கள் நல்வாழ்வுக்காக
காலமெல்லாம் தன்னை அர்ப்பணித்து வாழ்வாங்கு
வாழ்ந்து தெய்வமாகிவிட்ட அன்னையே!
உம் நினைவுகள் என்றும் எம் நெஞ்சைவிட்டு அகலாது.

**இன்றைய தினம் (7.2.2003) வெள்ளிக்கிழமை எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பாகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

*பண்ணாகம் தெற்கு,*
*சுழிபுரம்.*

பிரிவால் துயருறும்
கந்தசாமி (கணவர்)
(இளைப்பாறிய ஆசிரியர்)
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(14200)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மண்ணில் 04 - 07 - 1936



விண்ணில் 09 - 01 - 2003

### திருமதி செல்லையா செல்லமுத்து

அன்பினால் எமையெல்லாம் உம் சிறகால் அரவணைத்தீரே!
ஆறவில்லை எம் இதயம் மாதம் ஒன்று சென்றாலும்

இந்நாளில் உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கிறோம். நாளை (08.02.2003) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியை, ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் மற்றும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்,

*கலிகை சந்தி,*
*துன்னாலை கிழக்கு,*

தகவல்:
பிள்ளைகள்.

(14205)

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் கணேசரத்தினம் (மகாலிங்கம்)

வியாபாரிமூலையைப் பிறப்பிடமாகவும் வதிரியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கணேசரத்தினம் அவர்கள் 04.02.2003 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் ஆறுமுகம் - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும் இராஜலட்சுமியின் (தங்கமணி) அன்புக் கணவரும் காலஞ்சென்ற சந்திரசேகரம்பிள்ளை (ஆசிரியர்) - மீனாட்சிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் ஜெயசுதா (லண்டன்), ஜெயதர்சினி (லண்டன்), விஜிதா (யாழ்.பல்கலைக் கழக கலைப்பீடம், 2ஆம் வருடம்), நகுலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவகுமாரின் (லண்டன்) மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2003) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அரச வீதி,*
*வதிரி, கரவெட்டி.*

தகவல்:
குடும்பத்தினர்.

(14209)

யாழ்ப்பாணம்.
4 ஆவது வாரமாக
வசீகரா
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30

சாங்கானை
சூர்யா, ஜோதிகா நடித்த
உயிரிலே கலந்தது
(கா.நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே.)
THE MUMMY RETURNS

சுன்னாகம்.
இன்றுமுதல்
(ரீலஸ்)
காட்சிகள் தினசரி: 11.00, 3.00, 6.30 (பு.நே.)

# அரசின் கொள்கைப்படி நடக்காத அமைச்சு அதிகாரிகளுக்கு ஆபத்து!

## பதவி நீக்கப்படுவர் என்று பிரதமர் எச்சரிக்கை

கொழும்பு,பெப்.7

அரசின் கொள்கைப்படி செயலாற்றாத அமைச்சு அதிகாரிகள் பதவிகளிலிருந்து நீக்கப்படவேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே பிரதமர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

"ஐ.தே.முன்னணி அரசு பொது மக்களுக்காகவே பணியாற்றுகிறது. அதிகாரிகளின் தேவைகளை நிறைவேற்ற அது பணியாற்றவில்லை என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்" என்று பிரதமர் அங்கு கூறினார்.

புதிய நீர்ப்பாசனத்திட்டமொன்றை அமுல்படுத்த தான் எண்ணியிருப்பதாக நீர்ப்பாசன அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேரா கூட்டத்தில் தெரிவித்த போதே பிரதமர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

அமைச்சு அதிகாரிகள் சிலரின் ஆலோசனையின் பேரிலேயே அமைச்சர் பெரேரா பேசுகிறார் என்பதை உணர்ந்து கொண்ட பிரதமர் "அரசின் கொள்கையையே எதிர்காலத்தில் பின்பற்றவேண்டும் என்பதை எல்லா அமைச்சு அதிகாரிகளிடம் கூறுங்கள்" எனவும் சொன்னார்.

அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா கலந்துகொள்ளவில்லை. அதனால் பிரதமரின் தலைமையிலேயே கூட்டம் நடைபெற்றது.(ஐ)

# தெல்லிப்பழை கூட்டுறவுச் சங்கத்தை சொந்த இடத்தில் இயக்க முயற்சி!

வலி.வடக்கு,பெப்.7

தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைமைச் செயலகத்தை மீண்டும் தெல்லிப்பழைச் சந்திக்கு அண்மையில் உள்ள சொந்தக் கட்டடத்தில் இயக்குவதற்கு புதிய நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நீண்ட காலமாகத் தமது பாவனையில் இருந்த சங்கத்தின் தலைமைக் கட்டடத்தைப் படையினர் கடந்த ஐந்து மாதங்களுக்கு முன்னர் சங்க நிர்வாகத்திடம் மீண்டும் கையளித்துள்ளனர்.

சங்கக் கட்டடங்கள் மற்றும் கூரைகள் பலத்த சேதமடைந்துள்ளமையினால் உடனடியாக மேற்படி கட்டடத்தை பயன்படுத்த முடியாத நிலைமை காணப்பட்டதும் அத்துடன் ஊழியர்கள் சங்கப்பகுதிக்குச் சென்று வருவதிலும் பல்வேறு பிரச்சினைகள் எதிர்நோக்கப்பட்டன.

உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் இந்தக் கட்டடத் தொகுதிகள் காணப்படுகின்றன. இப்பகுதிக்கு மக்கள் சென்று வருவதாக இருந்தால் இராணுவத்தினரின் உடல் சோதனைக்கு உட்படுத்தப்படுவதுடன் அடையாள அட்டைகளைக் கையளித்துவிட்டே செல்லமுடியும்.

இது குறித்து சங்கத் தலைவர் 515 ஆவது படையணியின் கட்டளைத் தளபதியுடன் தொடர்புகொண்டுள்ளார்.

(எ-86)

# பொது நூலகத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும் நூலகம் சிங்களப் பேரினவாதிகளின் அடக்குமுறை ஆட்சியின் பிரதிபலிப்பான சிங்களக் கூலிகளினால் மே31,1981 ஆம் ஆண்டு இரவோடிரவாகத் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. இது எம் நெஞ்சில் மாற்ற முடியாத கறைபடிந்த ஒரு நிகழ்வாகவே இன்றும் எம் நினைவில் நிற்கின்றன. இதை நினைத்து இன்றும் கண்ணீர் வடிப்பவர்கள் பலர்.

இந்தக் கறைபடிந்த வரலாற்றை மாற்றி அமைப்பதற்காக அதே சிங்கள தேசத்தின் அரசுகள் தம்மை இப்பழியில் இருந்து விடுவித்துக் கொள்வதற்காக முண்டியடித்துக்கொண்டு "ஆனைப்பசிக்கு சோழன் பொரி" போன்று ஏதோ வழங்கினார்களாம். நூல் நிலையமும் ஏதோ ஒரு வகையில் அரைகுறையாகப் புனரமைக்கப்பட்டுள்ளது. ஆனால் அதன் முழுமையான தேவைகள், வளங்கள் முற்று முழுதாகக் கிடைக்கப்பெற்றனவா என்றால் அது கேள்விக்குறியாகவே இருக்கின்றது. புனரமைப்பு வேலைகளும் முற்றாக நிறைவேற்றப்பட்டனவா என்றால் அதுவும் கேள்விக் குறியே. தமிழரின் வரலாற்றின் பட்டறிவின் காரணத்தால் கூறுகின்றோம். ஏன் இந்த அவசரம், மாநகர சபை அவசரம் காட்டுவதன் காரணம் என்ன? மாநகர சபையின் பதவிக்காலம் முடிவடையப் போவதா? அல்லது கல்லில் பெயர் பதித்து பெருமை தேடும் எண்ணமா? இதை இன்றைய சூழலில் எவரும் ஏற்பதற்குத் தயாரில்லை.

அமைச்சர்களையும், அரசியல்வாதிகளையும் அழைத்து ஆலவட்டம் போடு வதனால் பொது நூலகத்தின் புனரமைப்புப் பணிகள் பூர்த்தியாகி விட்டது என்று அர்த்தமில்லை. இந்த நூலகத்திற்கு உயிர் கொடுத்த உத்தமர்களின் உணர்வுக்கு மதிப்பளித்து முற்றும் முழுமை நிறைந்த ஒரு நூலகத்தின் திறப்பு விழாவையே எம் கண்களினால் காணத்துடிக்கின்றோம். அதன் சேவைகளை முழுமையாக அனுபவிக்க விரும்புகின்றோம்.

இதனை மாநகர சபையினரும் அவற்றுடன் சம்பந்தப்பட்டவர்களும் உணர்வார்கள் என எதிர்பார்க்கின்றோம். மக்களின் உணர்விற்கும் உள்ளக்குமுறல்களுக்கும் மதிப்பளித்து இவ் விடயத்தில் நல்ல முடிவை எடுத்து முழுமை நிறைந்த யாழ்நூலகத்தின் திறப்பு விழாவிற்கு வழி சமைத்து அதுவரை காத்திருக்கும்படி யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டி நிற்கின்றது. - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)


கணக்கீடு
திரு. பாலவாசன்
B.B.A. (F.M.Spl.)
A/L 2004
பங்குடமை
Sat., Sun. 7-8 a.m.
ஆரம்பம் : 08.02.2003
Sat. 7 a.m.
விக்னா கல்வி நிறுவனம்
(14133)

A/L 2004
கணக்கீடு
பங்குடமை
By:
B.முகுந்தன்
ஆரம்பம்
10.02.2003 திங்கள்
✻ தனிப்பாட அனுமதி உண்டு.
✻ 2005 வகுப்பு ஆரம்பமாகிவிட்டது.
(14128)

இந்திய சாஸ்திரியார் வருகை
முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு வருகை தந்துள்ளார்.
பரம்பரை ஜோதிடர் புகழ் பெற்ற
S.N.குமாரசாமி அவர்கள்
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, தொழில் முன்னேற்றம் இன்மை மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.
(காலை 8மணிமுதல் மாலை 5மணிவரை)
ஸ்ரான்லி லொட்ஜ்
இல.711, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)
செவ்வாய் விடுமுறை.
(14170)


# திரைப்பட உருவாக்கல் பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம்,பெப்.7

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகும் பிரிட்டனின் 'ஸ்கிறிப் நெற்' அமைப்பும் இணைந்து நடத்திவரும் திரைப்பட உருவாக்கல பற்றிய இரண்டாம் கட்டப் பயிற்சி முகாம் யாழ். பல்கலைக்கழக சிற்றி ஹோலில் நடைபெற்று வருகிறது.

கடந்த 3ஆம் திகதி ஆரம்பமான இப்பயிற்சிமுகாம் எதிர்வரும் 13 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. இப்பயிற்சிமுகாமில் தெரிவுசெய்யப்பட்ட 15பேர் பங்குபற்றுகின்றனர்.

இப்பயிற்சிமுகாமில் இறுதியாகத் தெரிவுசெய்யப்படும் மூவரின் திரைப்படப் பிரதிகள், குறுந்திரைப படங்களாகத் தயாரிக்கப்படவுள்ளன.

இப்பயிற்சிகளை பிரிட்டனின் 'ஸ்கிறிப்ற் நெற்' திட்ட இயக்குநர் செல்வி கதரின் ஸ்ரட்மன் மற்றும் பிரிட்டனைச் சேர்ந்த திரைப்பட இயக்குநர் திருமதி றோயல்லா சிமித் ஆகியோர் வழங்குகின்றனர்.

இப்பயிற்சிமுகாமின் இணைப்பாளர்களாக கா.ஞானதாஸ், ரி.கண்ணன ஆகியோர் பணிபுரிகின்றனர்.

(ஐ-9)

# சித்த ஆயுர்வேத வைத்தியர்களுக்கு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்.7

டீ.ஏ.எம்.பட்டதாரிகள் வைத்திய சங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட சித்த ஆயுர்வேத வைத்தியர்களுக்கான அவசரக் கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள நடனமுருகன் வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

இதில் சம்பந்தப்பட்ட வைத்தியர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

# மாத்தறை பகுதியில் இருவர் சுட்டுக்கொலை!

கொழும்பு,பெப்.7

மாத்தறை, சூரியவெவ பகுதியில் நேற்று முன்தினமிரவு இருவர் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இரவு 10 மணியளவில் நடைபெற்ற இத்துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் சாந்த முனசிங்க, ஆனந்த பெரேரா என்னும் இருவரே கொல்லப்பட்டனர் என்று சூரியவெவ பொலீஸார் தெரிவித்திருக்கின்றனர்.

கொல்லப்பட்ட இருவரும் வீதியில் சென்றுகொண்டிருக்கையில் வாகனமொன்றில் வந்தோர் ரி - 56 துப்பாக்கியால் சுட்டனர் எனக் கூறப்படுகிறது. சூரியவெவ பொலீஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

(ஐ)

# உடதலவின்ன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னுவத்தளபதிக்கு அறிவித்தேன்.

இதற்காக லெப்டினன்ட் விஜேரதின, 4ஆவது எதிரி - தலைமையில் அனுப்புமாறு ரத்வத்தை விடுத்த உத்தரவை இராணுவத்தளபதிக்கு அறிவித்தேன்.

நான் கடமைபுரிந்த காலத்தில் பொலீஸ் அதிகாரி உடுகம்பொல சில பொலீஸாருடன் வந்து என்னிடம் வாக்குமூலம் தரும்படி கேட்டார். முதலில் நான் மறுத்துவிட்டேன். பின்னர் இராணுவத் தளபதியின் அனுமதியுடன் வாக்குமூலம் அளித்தேன் - என்று சாட்சி தெரிவித்தார்.

விசாரணையின்போது எதிர்த் தரப்பில் ஆஜராகி இருந்த ஜனாதிபதி சட்டத்தரணி ஒபயசேகர சாட்சியை குறுக்கு விசாரணை செய்தார்.

வழக்கு எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. அதுவரை சந்தேகநபர்களை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

(ஐ-12)


SPOKEN ENGLISH WITH GRAMMAR
LECTURES BY:-
MR. M.A.HARI
★ 2 ஆவது புதிய பிரிவு ஆரம்பம் ★
09.02.2003 ஞாயிறு மாலை 4.30 மணி
SUN }
SAT } 4.30 p.m. - 5.30 p.m.
HARY'S INSTITUTE
இல.564, கஸ்தூரியார் வீதி,
(யாழ். இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.


# நெடுந்தீவு கடலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

. அங்கு விரைந்து அனுப்பப்பட்டது என்றும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

பழுதடைந்த படகை முதலில் கடற்படைப் படகுகள் முற்றுகையிட்டன என்று கூறப்படுகிறது. அதனால் கடலில் இரு தரப்புக்கும் மத்தியில் பெரும் முறுகல் நிலை உருவாகியது. இது குறித்து உடனடியாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு அறிவிக்கப்பட்டது. கடற்படையினரால் வழிமறிக்கப்பட்ட முதலாவது படகை சோதனையிட அனுமதிக்குமாறு கடற்படையினர் கோரினர் என்றும் -

இதனையடுத்து கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகள் சகிதம் அந்தப் படகுக்கு சென்ற கடற்படையினர் படகில் சோதனை நடத்தினர் எனவும் - கூறப்படுகிறது.

எனினும் சோதனையின்போது படகில் ஆயுதங்களோ சந்தேகத்துக்கிடமான வேறு பொருள்களோ காணப்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டது. ஆயினும் படகை முற்றுகையிட்டிருந்த கடற்படையினர் அதனை சுற்றிவளைத்தபடி நின்றதால் பதற்றம் நீடித்தது. இதேவேளை இரண்டாவது படகும் அங்கு வரவே அதனையும் கடற்படைப் படகுகள் சுற்றி வளைத்தன.

விடுதலைப் புலிகளின் வன்னித் தலைமையகத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து பேர்ளின் நகரில் தங்கியிருந்த புலிகளின் சமாதானப் பேச்சுக் குழுவுக்கு தகவல் பறந்தது.

ஐந்தாவது சுற்று சமாதானப் பேச்சுகளுக்கு ஆயத்தமாகிக்கொண்டிருந்த புலிகள் மற்றும் அரசு பிரதிநிதிகள் மத்தியில் இத்தகவல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. கடலில் நிலைமை பாரதூரமான கட்டத்தில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதால் அரசு - புலிகள் பிரதிநிதிகள் குழப்பமடைந்து காணப்பட்டனர்.

அவர்கள் தமக்குள் கூடி அவசர கலந்துரையாடல்களை நடத்தினர். நோர்வே சமாதானக் குழுப் பிரதிநிதிகளும் உடன் இருந்து நிலைமைகளை ஆராய்ந்தனர்.

பேர்ளினில் தங்கியுள்ள பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ அங்கிருந்தவாறே பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுடன் தொடர்புகொண்டு நிலைமையின் தீவிரத்தை விளக்கினார்.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், சு.ப.தமிழ்ச்செல்வன் ஆகியோர் அங்கிருந்தவாறே வன்னியில் கடற்புலிகளின் தளபதி சூசையுடன் அவசர தொலைபேசி உரையாடல்களை நடத்தின...

பழுதடைந்து தரித்து நிற்கும் இரண்டாவது படகில் ஏறவேண்டாம் என்று கடற்படையினருக்கு கண்டிப்பான பணிப்புரை விடுக்கப்பட்டதாக தெரிகின்றது.

புலிகளின் இருபடகுகளிலும் அவர்களது போராளிகள் ஆறுபேர் தங்கியிருக்கின்றனர் என்று தகவல் கிடைத்திருக்கிறது.

உடனடியாக கடற்படையினர் முற்றுகையைக் கைவிட்டு தாங்கள் பயணம் செய்ய அனுமதிக்காவிட்டால் 'சயனைட்' உட்கொண்டு உயிரை மாய்த்துக்கொள்ளப் போவதாக அறு போராளிகளும் எச்சரித்திருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்று நண்பகல் ஆரம்பமான இந்தக் கடற்படை முற்றுகையும் அதனால் உருவாகிய பதற்றமான நிலைமையும் நேற்றிரவு இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை தொடர்ந்தன.

அதேவேளை -

பேர்ளினில் தீவிரமான சமரச முயற்சிகள் இரவிரவாக (இலங்கை நேரம்) நடந்தன.

இந்த நெருக்கடிநிலையை சுமுகமாக தணிப்பதற்கு வசதியாக பொறுமையைக் கடைப்பிடிக்குமாறு நோர்வே சமாதானக் குழுவினர் இருதரப்பினிடம் கேட்டுக்கொண்டனர்.

இது போன்ற சம்பவங்களைத் தவிர்ப்பது தொடர்பாக இன்றும் நாளையும் நடைபெறவுள்ள பேச்சுக்களில் ஓர் உடன்பாடு காண்பது என்று இரு தரப்புகளும் முடிவு செய்திருக்கின்றன.

நெடுந்தீவு படகுகள் முற்றுகை நாடகம் பெரும்பாலும் இன்று அதிகாலைக்குள் முடிவுக்கு வந்துவிடும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

(ஐ)

# புனர்வாழ்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சகர் அன்ரன் பாலசிங்கம் விளக்கினார்.

தமிழர் தாயகப் பிரதேசத்தில் முன்னெடுக்கப்படவுள்ள புனர்வாழ்வு மற்றும் நிவாரணப் பணிகளுக்கு ஜேர்மனி தாராளமாக நிதி உதவி வழங்க வேண்டும் என்று அந்நாட்டு அமைச்சு அதிகாரிகளிடம் தாங்கள் கோரிக்கை விடுத்ததாக அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் பின்னர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இலங்கைக்கு உதவும் நாடுகளில் ஜப்பானுக்கு அடுத்த படியாக அதிக உதவி வழங்கும் நாடு ஜேர்மனி என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# ஒரு தொகுதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த வகையில் தெரிவு செய்யப்படும் மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பல்கலைக்கழகத்துக்கும் வேறுபட்ட வகையில் அமைவதனால் யாழ்.பல்கலைக் கழகத்துக்கு அனுமதிக்கப்படவுள்ள மாணவர்களின் பெயர்ப்பட்டியலை அனுப்புவதில் சிறிது தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் இது தொடர்பாக மானிய ஆணைக் குழுவுடன் தொடர்பு கொண்டு பட்டியலை விரைவில் பெறுவதற்குரிய முயற்சியைத் தான் மேற்கொண்டுள்ளதாகவும் -

விரைவில் பெயர்ப்பட்டியல் வந்து சேர்ந்துவிடும் எனவும் - துணை வேந்தர் உதயனுக்குத் தெரிவித்தார்.

(ஐ-10)


முதலாவது பிறந்ததின வாழ்த்து

இன்று தனது இல்லத்தில்
முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடும்
திரு.திருமதி இராஜேந்திரன் - சுபாஷினி
தம்பதிகளின் செல்வப் புதல்வன்
ஜனார்த்தனனை
அன்பு அப்பா, அம்மா, அக்கா (ஹம்சிகா) ஆகியோர் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.
4ஆம் ஒழுங்கை,மானிப்பாய்வீதி,
மருதனார்மடம்.
அன்புடன்
ஹம்சிகா (அக்கா) (14211)

ஓம் சாயிராம்
வெளிவந்துவிட்டது!
பொருளியல் அறிமுகம்
(2005 A/L புதிய பாடத்திட்டத்திற்கு அமைவானது)
★ சுயமாகவும் இலகுவாகவும் தெளிவாகவும் கற்கக்கூடியவகையில் வடிவமைக்கப்பட்ட நூல்.
★ முழுமையான பாடத்திட்டம், பரீட்சை முறை, கடந்தகால பரீட்சை வினாவிடைகள், பயிற்சி வினாவிடைகள் என்பனவும் அடங்கியது.
ஆசிரியர்: வே.கருணாகரன்
இன்று 80ஆவது பிறந்தநாள் காணும் எனது அன்புத் தாயார்
திருமதி மனோன்மணி வேலாயுதம்
அவர்களுக்கு இந்நூல் காணிக்கை.
(14190)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.02.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## வடமராட்சி லயன்ஸ் கழகம்
### அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

1ஆம் பரிசு சீட்டு இல. 0221
2ஆம் பரிசு சீட்டு இல. 1333
3ஆம் பரிசு சீட்டு இல. 2608

ஆறுதல் பரிசு இல. 3497, 3271, 0160, 1326, 3416, 2023, 0939, 0175, 0751, 1236.

செயலாளர்,
வடமராட்சி லயன்ஸ் கழகம்.

(14189)

## நெஞ்சைவிட்டகலாத எம் குடும்பத் தலைவனின்
## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 22 - 07 - 1959



ஆண்டவன் அடியில் 30 - 01 - 2001

### அமரர் வல்லிபுரம் சிவானந்தன்

*(வரணியூர் சிவா)*

திதி: 07.02.2003 (ஷஷ்டி)

அன்பினால் சிறந்து பண்பினால் உயர்ந்து
ஆண்டவன் போல் எமைக்காத்த தலைவனே!
இதயம் உம் நினைவால் தினம் வாடுவதால்
சுரவிழிகள் என்றும் மாறாது.
உங்கள் கடைசிக் கடன் செய்யமுடியாத
எம் சோகம் தீராது
ஊர் போற்ற வாழ்ந்திட்ட உத்தமரே!
எம் கவலை தீருமா? என்றும் உம் நினைவால்
ஏங்கியே தவிக்கின்றோம்.
எங்கள் இதயத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பருத்தித்துறை வீதி,
கொடிகாமம். (14184)

தங்கள் நினைவுடன் வாழும்:
குடும்பத்தினர்.

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்



உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 2402852 இருந்து
2421890 வரை
சீட்டிழுப்பு இல. 1373
திகதி 05.02.2003



### வெற்றி எண்கள்

**04 10 25 37 50**

போனஸ் எண் **29**

### ஜக்பொட் பரிசு
## ரூபா.2,440,000/- வெல்லப்படவில்லை.

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 2,440,000/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 03 | 100,000/- | 300,000/- |
| 4 | 112 | 10,000/- | 1,120,000/- |
| 3 | 6,003 | 500/- | 3,001,500/- |
| 2 | 99,682 | 20/- | 1,993,640/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 04ம் எண் (போனஸ் எண் தவிர்ந்து) | 122,042 | 10/- | 1,220,420/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.7,635,560/-

இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்
## ரூபா. 3,384,800/-

தொடர் இல. 3400797க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2003 பெப்ரவரி 08ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2405770-3-66
2409146-6-92
2411787-8-07
2406786-5-01
2407077-2-53

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.


# தமிழ் கணினி கண்காட்சியும் விற்பனையும்
## Tamil computer exhibiton & Sale



கண்காட்சி நடைபெறும் விவரம்:
நேரம் காலை 10.00 மணி முதல்
இரவு 8.00 மணி வரை.

யாழ்ப்பாணத்தில் நடைபெறும்
முழுமையான முதல் தமிழ்கணினிக்
கண்காட்சியும் விற்பனையும்!

பெப்ரவரி 8, 9 - 2003
சனி, ஞாயிறு
யாழ் மத்திய கல்லூரி அரங்கம், யாழ்ப்பாணம்.

கணினியில் தமிழில் எழுத.... தமிழால் எழுத...
சங்கப் பலகை தமிழ் விசைப்பலகை
மூன்று மாடல்களில் 5 தமிழ் மென்பொருட்கள் அடங்கிய கூதம்பம் சிடியுடன்...



கண்காட்சியில் இடம்பெறும் மென்பொருட்கள்:

* ஸ்ரீ லிபி 337 தமிழ் பாண்டல் - தமிழ் வெரப். * அனு 220 தமிழ் பாண்டஸ் - அழகிய வடிவில். * அங்கூர் -- முழுமையான தமிழில் ஆபில் சூட். * கிளிப் ஆர்ட்ஸ் - இணையம், அச்சுத் துறைக்குத் தேவையான இலட்சக்கணக்கான இந்திய கலாசார வண்ணப்படங்கள் சிடிக்களில். * தமிழ் மின்னகராதி, தமிழ் எழுத, பேச, கற்பிக்கும் மல்டி மீடியா சிடிக்கள். * திருக்குறள் சிடி, குழந்தைப் பாடல்கள், தமிழ் கேம்ஸ் இன்னும் பல... * தமிழில் வெளிவந்துள்ள நவீன கணினி சார்ந்த புத்தகங்களும் கிடைக்கும். * கணினித் தமிழில் விரிவான ஜோதிட சிடிக்கள்... இன்னும் எத்தனையோ...

நவீன தமிழ் கம்ப்யூட்டர்
நம்ப முடியாத விலைகளில்!

Audio/ VCD/ Fax/ TV/ Radio
இவைகள்
இனித் தேவையில்லை
அனைத்தும்
கணினியில்!

அனுமதி இலவசம்!
விசேட விலைக்கழிவு!!

இந்தத் தொடர் கண்காட்சிகளை சென்னை, வன்னி மென்பொருள் நிறுவனத்துடன் இணைந்து நடத்துபவர்:

## CYBER MEGA (PVT) LTD.,
502 - 1/1, Galle Road, Colombo - 06.
Tel: 507500, 074-200707 E-mail : cybermeg@sltnet.lk

இலங்கை முழுவதும் விநியோகஸ்தர்கள் தேவை. உடனே அணுகவும்.

# ரிதிரேகா சேமிப்புச் சான்றிதழ் சீட்டிழுப்பு இலக்கம் 34

## 31.01.2003இல் நடைபெற்ற ரிதிரேகா சேமிப்புச் சான்றிதழ்களின் சீட்டிழுப்பு இலக்கம் 34இல் தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம் கிளையில் பரிசுபெற்ற 201 அதிர்ஷ்டசாலிகள் விவரம்:

### ஐந்தாவது பரிசு ரூபா 1,000/=

| | | |
|---|---|---|
| 017 16Z 0442 | ரி. தர்மிதா | நீர்வேலி |
| 071 04E 0007 | எஸ். ஆர். சிவேந்திர கலாநிதி | நீராவியடி |
| 023 09O 0501 | எல். சின்னச்சாமி | யாழ்ப்பாணம் |
| 005 15K 0770 | எஸ். புஸ்பலீலா | ஆனைப்பந்தி |
| 120 13A 0799 | பி. சத்தியன் | கல்வியங்காடு |
| 122 09N 0254 | எஸ். கணேசமூர்த்தி | கரவெட்டி |
| 031 21F 0950 | எஸ். நிசாகலா | சங்கானை |
| 151 16N 0634 | எஸ். மங்களேஸ்வரி | வட்டுக்கோட்டை |
| 020 20X 0553 | எஸ். ஸ்ரீகாந்தன் | மிருசுவில் |
| 055 10F 0701 | எம். ரஜிதபாமினி | யாழ்ப்பாணம் |
| 069 09A 0957 | கே. சுதர்சன் | சண்டிலிப்பாய் |
| 064 09A 0152 | எஸ். நரேந்திரநாதன் | யாழ்ப்பாணம் |
| 033 16E 0729 | கே. செல்வராஜா | கோப்பாய் |
| 086 04E 0303 | பி. எம். ராஜசுந்தரம் | சுண்டுக்குளி |
| 100 16U 0314 | ஜே. டொண்பொஸ்கோ | கரம்பன் |
| 034 15M 0363 | வை. துஸ்யந்தி | கொக்குவில் |
| 092 14E 0537 | ஜே. அருந்தவமலர் | சங்கானை |
| 036 10C 0101 | என். குலசேகரம் | கோண்டாவில் |
| 046 05N 0038 | ரி. பஞ்சாட்சரம் | சாவகச்சேரி |
| 032 20X 0921 | என். யோகேந்திரா | கைதடி |
| 006 14B 0162 | ஆர். செல்வராணி | திருநேல்வேலி |
| 005 14G 0785 | எஸ். பரமேஸ்வரி | கோண்டாவில் |
| 129 14F 0291 | ரி. ஜெயானந்தன் | கோண்டாவில் |
| 045 12S 0700 | பி. கௌந்திகா | வண்ணார்பண்ணை |
| 065 07N 0877 | பி. கயானி | வட்டுக்கோட்டை |
| 084 13N 0596 | எஸ். பரராஜசேகரம் | கோண்டாவில் |
| 032 09X 0402 | எம். ஜெயகுமார் | சுளிபுரம் |
| 109 09A 0824 | பி. கணானி தாட்சாயினி | வட்டுக்கோட்டை |
| 084 13B 0596 | எஸ். பரராஜசேகரம் | கோண்டாவில் |
| 003 13B 0800 | கே. உதயராசா | இணுவில் |
| 125 13A 0657 | கே. திருச்செல்வம் | நீர்வேலி |
| 088 09A 0868 | எஸ். பழனிவேல் | வட்டுக்கோட்டை |
| 045 16E 0117 | கே. சிவநாதன் | யாழ்ப்பாணம் |
| 073 13S 0745 | ரி. சுகிர்தன் | பண்டத்தரிப்பு |
| 011 16V 0726 | எஸ். யோகேஸ்வரி | வரணி |
| 043 04V 0993 | பி. ரங்கநாதன் | ஓட்டுமடம் |
| 073 15L 0496 | எஸ். சோதிமலர் | தாவடி |
| 101 02J 0748 | எஸ். கோபிசேகர் | சுன்னாகம் |
| 126 12C 0591 | ஆர். இராஜமலர் | அச்சுவேலி |
| 082 12S 0405 | ஐ. கீதாஞ்சலி | அத்தியடி |
| 099 13P 0811 | யு. ஜெயதரன் | கோண்டாவில் |
| 056 10C 0924 | பி. சரவணன் | இணுவில் |
| 110 12D 0952 | ஜி. ஸ்ரீதரன் | யாழ்ப்பாணம் |
| 060 10F 0466 | ஆர். பாக்கியலக்சுமி | நல்லூர் |
| 063 16Z 0544 | வி. சி. நிசாந்தினி | குருநகர் |
| 047 12S 0602 | எஸ். ஆறுமுகநாதன் | நீர்வேலி |
| 089 16V 0806 | பி. மரீனா | நாரந்தனை |
| 115 12D 0028 | ஏ. தங்கராசா | இணுவில் |
| 116 12C 0812 | சி. பிரியங்கா | குருநகர் |
| 040 04V 0423 | எஸ். கவிவர்மன் | பண்டத்தரிப்பு |
| 019 13P 0782 | கே. பேரின்பநாயகி | சித்தன்கேணி |
| 060 07N 0442 | ஏ. சண்முகநாதன் | நல்லூர் |
| 065 13S 0123 | ஜி. ஜெரீனா | மானிப்பாய் |
| 092 14E 0672 | ஜெ. அருந்தவமலர் | சங்கானை |
| 041 14B 0331 | எஸ். சர்மிலா | அரியாலை |
| 067 10C 0698 | பி. அன்ரனி | யாழ்ப்பாணம் |
| 111 18E 0133 | கே. செல்வபிரகாசம் | புன்னாலைக்கட்டுவன் |
| 062 16E 0911 | ஜி. சங்கரலிங்கம் | கெந்தல |
| 123 12O 0837 | எஸ். கௌறி | புத்தூர் |
| 106 13A 0668 | கே. இராஜேஸ்வரன் | கோண்டாவில் |
| 027 09X 0914 | வி. மகாலிங்கம் | நல்லூர் |
| 123 18K 0721 | எஸ். தாருஜன் | அரியாலை |
| 048 09O 0815 | கே. சுகந்தன் | யாழ்ப்பாணம் |
| 075 13P 0605 | எஸ். சுகந்தகுமார் | கந்தர்மடம் |
| 137 15Y 0124 | பி. தயாபரன் | பண்டத்தரிப்பு |
| 138 03S 0340 | கே. நகுலாம்பிகை | யாழ்ப்பாணம். |
| 118 16X 0999 | எஸ். விஜயகுமார் | உரும்பிராய் |
| 107 09N 0560 | வை. பாலசுப்பிரமணியம் | வட்டுக்கோட்டை |
| 021 16O 0323 | ஏ. விதுழசன் | குருநகர் |
| 121 13A 0825 | எம். ஸ்ரீராகுலன் | யாழ்ப்பாணம் |
| 050 17R 0735 | ரி. பத்மநாதன் | கோப்பாய் |
| 053 10C 0046 | கே. செல்வப்பிரகாசம் | புன்னாலைக்கட்டுவன் |
| 050 17R 0013 | கே. பரமேஸ்வரன் | வரணி |
| 044 05D 0215 | எம். விவேகானந்தராஜா | வட்டுக்கோட்டை |
| 015 17R 0217 | ஆர். சுப்பிரமணியசர்மா | நீர்வேலி |
| 095 12S 0733 | எஸ். சிவபாலன் | புங்கன்குளம் |
| 145 13N 0460 | எம். ஜே. ராஜரட்ணம் | யாழ்ப்பாணம் |
| 095 16Z 0389 | எஸ். இராசையா | சங்கானை |
| 127 17Q 0492 | எஸ். புஸ்பராணி | நல்லூர் |
| 023 14B 0830 | எஸ். தயாபரன் | கந்தர்மடம் |
| 107 09A 0719 | எஸ். அருள்நேசன் | யாழ்ப்பாணம் |
| 127 12O 0547 | எவ். ஜே. டொலிற்றா | சுண்டுக்குளி |
| 051 17R 0547 | ஆர். ஜெயேந்திரா | அச்சுவேலி |
| 104 16X 0596 | ரி. வைத்திலிங்கம் | திருநெல்வேலி |
| 025 16V 0349 | கே. ஜெயகௌரி | கோண்டாவில் |
| 101 13A 0763 | ஜே. ஏ. எக்ஸ். பிரான்சிஸ் | பண்டத்தரிப்பு |
| 071 09A 0051 | பி. பிரேமிளா | அரியாலை |
| 031 04V 0156 | கே. தாரணி | சுன்னாகம் |
| 007 16V 0469 | எஸ். நாகராஜா | ஆனைப்பந்தி |
| 084 13N 0196 | எஸ். வைத்திலிங்கம் | மிருசுவில் |
| 093 16Z 0564 | எஸ். புனிதவதி | சித்தன்கேணி |
| 060 24A 0900 | ரி. பிரணவி | கோண்டாவில் |
| 028 13B 0358 | கே. ஞானகுமாரி | சங்கானை |
| 043 17R 0261 | ரி. தேவேந்திரகுருக்கள் | அராலி |
| 152 17Q 0036 | ஏ. எஸ். என். இராசையா | கந்தர்மடம் |
| 032 09X 0411 | எம். ஜெயக்குமார் | சுளிபுரம் |
| 074 16Z 0056 | ரி. அனுயன் | பண்டத்தரிப்பு |
| 019 15K 0244 | எஸ். ஜனனி | ஆனைக்கோட்டை |
| 093 16V 0725 | வி. கனராஜா | கொக்குவில் |
| 005 09O 0763 | எஸ். திருச்செல்வராஜன் | யாழ்ப்பாணம் |

### ஆறாவது பரிசு ரூபா 500/=

| | | |
|---|---|---|
| 044 11D 0096 | ஏ. நித்தியானந்தன் | யாழ்ப்பாணம் |
| 144 15Y 0167 | எஸ். பிரேமாவதி | யாழ்ப்பாணம் |
| 111 12C 0751 | ரி. குருநாதன் | வண்ணார்பண்ணை |
| 051 04E 0897 | ஜே. யோகராஜா | மானிப்பாய் |
| 145 13G 0347 | ஏ. அஜித்கர் | கொடிகாமம் |
| 099 12S 0628 | ரி. சண்முகநாதன் | அரியாலை |
| 079 09A 0144 | எஸ். நிர்மலேந்திரன் | உரும்பிராய் |
| 097 10F 0852 | ஆர். ஜே. ஜெனிற்றா | குரு[illegible] |
| 148 13N 0435 | எஸ். ராஜரட்ணம் | யாழ்ப்பாணம் |
| 089 16V 0902 | பி. மரீனா | நாரந்தனை |
| 156 09N 0479 | கே. ராஜரட்ணம் | கோப்பாய் |
| 057 12P 0061 | ரி. ஜீவனா | ஆனைக்கோட்டை |
| 007 13Q 0760 | ஆர். சதாசிவம் | அத்தியடி |
| 059 16X 0841 | கே. ரி. பவதாரணி | சித்தன்கேணி |
| 079 16X 0118 | ஆர். ஜெயசேகரன் | கந்தர்மடம் |
| 081 13N 0006 | எம். சண்முகநாதன் | கோண்டாவில் |
| 140 13O 0602 | என். சண்முகசுந்தரம் | சுழிபுரம் |
| 062 16V 0629 | ஆர். செல்வரட்ணம் | இருபாலை |
| 021 16O 0644 | ஏ. விதுழசன் | குருநகர் |
| 034 15L 0542 | வி. சேயோன் | கோண்டாவில் |
| 033 09X 0379 | வி. பரமேஸ்வரன் | யாழ்ப்பாணம் |
| 028 09X 0832 | வி. தேவேந்திரம் | யாழ்ப்பாணம் |
| 053 02R 0651 | பி. சுகந்தினி | கொக்குவில் |
| 049 05N 0237 | ஆர். சிவயோகன் | சாவகச்சேரி |
| 062 16E 0390 | வி. ரதீசன் | அச்சுவேலி |
| 086 16Z 0661 | எஸ். அபிராமி | பண்டத்தரிப்பு |
| 088 14V 0616 | பி. கருணாநிதி | யாழ்ப்பாணம் |
| 056 17R 0651 | ரி. கணேசலிங்கம் | ஆனைக்கோட்டை |
| 061 24A 0050 | ஏ. சிதம்பரநாதன் | சித்தன்கேணி |
| 037 15L 0202 | வி. ராகுலன் | மல்லாகம் |
| 123 12O 0994 | எஸ். கௌரி | புத்தூர் |
| 099 13P 0692 | ஜெயதரன் | கோண்டாவில் |
| 068 16V 0576 | எம். பத்மநாதன் | யாழ்ப்பாணம் |
| 122 12C 0780 | வி. சுப்பிரமணியம் | வட்டுக்கோட்டை |
| 132 16N 0379 | எம். ராஜகோபாலன் | நீர்வேலி |
| 151 12O 0442 | என். குமாரசாமி | வண்ணார்பண்ணை |
| 001 12P 0431 | எஸ். சிவராஜா | மானிப்பாய் |
| 105 12D 0964 | கே. சாந்தி | காரைநகர் |
| 144 13G 0959 | ஈ. லக்சுமி | வேலணை |
| 036 13P 0199 | ஆர். எச். ரண்டம் | யாழ்ப்பாணம் |
| 039 13H 0271 | எஸ். பி. துரைசிங்கராஜா | யாழ்ப்பாணம் |
| 069 14B 0241 | எஸ். பாஸ்கரன் | திருநெல்வேலி |
| 107 14E 0398 | ரி. ஜெயக்குமார் | கொக்குவில் |
| 028 10C 0657 | பி. சற்குணநாதன் | யாழ்ப்பாணம் |
| 097 12S 0118 | ரி. சாய்ரேகா | கோண்டாவில் |
| 085 14E 0893 | எஸ். நிசாந்த் | கந்தர்மடம் |
| 143 17Q 0784 | எம். எஸ். ஜெயதேவன் | யாழ்ப்பாணம் |
| 088 14B 0401 | கே. கிருஸ்ணதாரணி | மானிப்பாய் |
| 097 13S 0888 | எஸ். கஜானி | யாழ்ப்பாணம் |
| 141 14F 0811 | ரி. பேரின்பநாதன் | நல்லூர் |
| 063 10C 0929 | ஏ. அலெக்ஸிஸ் | யாழ்ப்பாணம் |
| 067 15M 0512 | ஆர். புவனேஸ்வரன் | இடைக்காடு |
| 075 12S 0117 | டி. நிரேசன் | வட்டுக்கோட்டை |
| 060 12P 0291 | என். கிருசாந்தன் | யாழ்ப்பாணம் |
| 084 09A 0482 | கே. சுதாகர் | யாழ்ப்பாணம் |
| 051 10C 0500 | ஜெ. விக்னேஸ்வரி | கொக்குவில் |
| 148 14E 0401 | சி. ஆறுமுகநாதன் | புத்தூர் |
| 064 14B 0544 | எஸ். விதுசா | யாழ்ப்பாணம் |
| 002 15K 0301 | ரி. ஜெயக்குமாரன் | பருத்தித்துறை |
| 090 16Z 0239 | எஸ். மகேஸ்வரன் | உடுவில் |
| 130 14E 0359 | ஏ. கே. பாலகிருஷ்ணன் | வல்வெட்டித்துறை |
| 113 09N 0167 | எஸ். பாலகிருஷ்ணன் | கொக்குவில் |
| 074 15L 0075 | டி. செல்வேஸ்வரன் | மானிப்பாய் |
| 028 12S 0516 | எஸ். வினோதா | கந்தர்மடம் |
| 115 12D 0168 | ஏ. தங்கராசா | இணுவில் |
| 003 13H 0637 | பி. சர்வானந்தன் | நல்லூர் |
| 051 02R 0155 | எம். இந்திராதேவி | அரியாலை |
| 082 07N 0487 | ஏ. அருள்நங்கை | புத்தூர் |
| 137 12C 0091 | என். ராஜா | சங்கானை |
| 010 14G 0493 | ஐ. வேலாயுதம் | கோப்பாய் |
| 069 15M 0989 | கே. தங்கலட்சுமி | நல்லூர் |
| 030 09X 0969 | எச். எஸ். எஸ். சர்மா | காரைநகர் |
| 119 12C 0448 | வி. சுப்பிரமணியம் | வட்டுக்கோட்டை |
| 034 09C 0464 | எம். பரசுராம் | கல்வியன்காடு |
| 056 04E 0031 | எல். சன்சயன் | நீர்வேலி |
| 083 13N 0054 | ஆர். மச்சகந்தி | கொக்குவில் |
| 122 13N 0140 | எஸ். சுதன் | குருநகர் |
| 084 14B 0811 | எஸ். புவனேஸ்வரி | யாழ்ப்பாணம் |
| 020 17R 0884 | எஸ். இராஜரட்ணம் | யாழ்ப்பாணம் |
| 091 13A 0651 | எஸ். பாலசுப்பிரமணியம் | யாழ்ப்பாணம் |
| 058 12S 0628 | கே. மோகனதாஸ் | திருநெல்வேலி |
| 026 10C 0757 | கே. சாந்தி | காரைநகர் |
| 051 16E 0814 | என். அர்ச்சனா | யாழ்ப்பாணம் |
| 016 09O 0933 | எம். கருணாகரன் | நீர்வேலி |
| 002 09O 0842 | ஏ. செபமாலைதாசன் | வண்ணார்பண்ணை |
| 024 13B 0031 | ஸ்ரீ. தேவராணி | அச்சுவேலி |
| 083 10F 0122 | ஆர். ஞானரட்ணம் | நல்லூர் |
| 058 10F 0986 | ரி. ராஜேந்திரம் | நல்லூர் |
| 125 15Y 0056 | ஜே. யோகராஜா | கோண்டாவில் |
| 111 12C 0949 | ரி. குருநாதன் | வண்ணார்பண்ணை |
| 086 13A 0212 | டி. தேவமதுரம் | அரியாலை |
| 006 09X 0605 | ஈ. சிவதர்சினி | கந்தர்மடம் |
| 004 07X 0601 | பி. இராமச்சந்திரன் | கொக்குவில் |
| 146 15Y 0706 | பி. சறோஜினிதேவி | கோப்பாய் |
| 036 05D 0590 | கே. விநாயகவசீகரன் | யாழ்ப்பாணம் |
| 012 12P 0819 | வி. பிரகுணராசா | குருநகர் |
| 028 09X 0021 | வி. தேவேந்திரம் | யாழ்ப்பாணம் |
| 065 24A 0723 | ஏ. ராஜேந்திரம் | காரைநகர் |
| 126 17Q 0572 | ஈ. சந்திரலீலா | கொழும்புத்துறை |
| 002 13H 0438 | ஜி. சஞ்சுதன் | ஆனைக்கோட்டை |
| 088 09A 0891 | எஸ். பழனிவேல் | வட்டுக்கோட்டை |
| 070 12S 0010 | எல். சிவபாதம் | சாவகச்சேரி |

NSB
உங்கள் குடும்ப வங்கி

(சி-26410)

முகாமையாளர்,
**தேசிய சேமிப்பு வங்கி,**
**யாழ்ப்பாணம்.**